


எங்கும்
அமோக வெற்றி!
சியாமளாவின்
இன்பவல்லி
பார்க்கிறவர்கள் பரவசமடைகின்றனர்!
கேட்கிறவர்கள் ஆனந்தமடைகின்றனர்!
தினசரி ராஜதானி பூராவும் கொட்டகைகளில் மக்கள்
கண்டு களிக்கின்றனர்...
ஸூபர் ரிலீஸ்
மஹாலிங்கம், பெரியநாயகி
T.V.ரத்தினம், P.லீலாவின்
இன்னிசை கானம்...
சரோஜா, சரஸ்வதி
அற்புத நடனங்கள்..
மக்களை பரவசப்படுத்துகின்றன..
எல்லோரும்
பார்க்கவேண்டிய படம்
என்பதே எங்கும் பேச்சு..
ஸூபர் பிக்சர்ஸ் சர்க்யூட், மதராஸ் 7.


TODAY'S FAVOURITE
LIMDA
LIMDA SOAP
பரிசுத்தமான வேப்பெண்ணெயும் இதர வாசனைத் திரவியங்களும் சேர்த்து தயாரிக்கப்பட்ட மலபார் லிம்டா சோப், அழகுக்கு அழகு செய்வதோடு கிருமிநாசினியாகவும் இருக்கிறது. அது இன்றைக்குத் தேச முழுவதிலும் எல்லோருடைய அபிமானத்துக்கும் பாத்திரமாய் இருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.
malabar
LIMDA
Soap
VEGETABLE SOAP WORKS . . . CALICUT.
PROPRIETORS: SAIT N.P. & CO. LTD. CALICUT - BOMBAY-2 - MADRAS-1

## விலைகளை மிகக் குறைத்து விட்டோம்

புதுப் புது டிஸைன்களில் **1000 பட்டுச் சேலைகள்**

அழகான பார்டர்களில் **5000 நூல் சேலைகள்**

தீபாவளிக்காக நேரே போய் தேர்ந்தெடுத்து
கொண்டு வந்து குவித்துள்ளோம்

அமெரிக்கன், இட்டாலி, பிரஞ்ச், ஸ்வீடன், இங்கிலீஷ் சில்க், ஆர்க்கண்டி, கட்டான், புஷ்பலதா, கீதாஞ்சலி, சந்திரலேகா, வாயில்கள், ஆமதாபாத் வேஷ்டிகள், மேட்டூர் லாங்கிலாத், மல், பின்னி ஷர்ட்டிங், கோட்டிங், டர்க்கி டவல்கள் *இன்னும் பல.*

விலை மலிவு — ஒரே விலை

# கஸ்தூரிபாய் கம்பெனி

உயர்தர பட்டு & நூல் ஜவுளி வியாபாரிகள்

மேல வீதி :: சிதம்பரம்

---

வெற்றிகரமான **2**-வது வாரம்

சென்னை

## பிரபாத் - சித்ரா
## சரஸ்வதி-மஹாராணியில்



★

கற்புக்கரசிகள் நிறைந்த பாரத நாட்டின் தனிப்
பெருமையை எடுத்துக் காட்டும் அற்புதச் சித்திரம்

# மங்கையர்க்கரசி

சின்னப்பா, கண்ணாம்பா: அஞ்சலிதேவி, கிருஷ்ணன், மதுரம்
துரைராஜ், லலிதா பத்மினி நடித்தது

தினசரி 3 காட்சிகள் — மாலை 2-30, 6 & 9-30 மணிக்கு

சென்னை நகரத்திற்கு

## லெக்ஷ்மி நாராயணா பிக்சர்ஸ்

4, வாலஸ் ரோடு : எழும்பூர் : சென்னை


ஜெமினி
தயாரித்துள்ள
உணர்ச்சி மிகுந்த
கதையுடன் கூடிய
உன்னதச்
சித்திரம்..
அபூர்வ
சகோதரர்கள்
THE STRANGE BROTHERS
,,கூடிய சீக்கிரம் வெளிவருகிறது,,

# கல்கி

## பொருளடக்கம்


மலர் 9 இதழ் 9


அக்டோபர் 2

விரோதி ஆ புரட்டாசி 16உ





"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

தூத்துக்குடி திரு சண்முக நூப்பனார் அவர்கள் குமாரர் தி. ச. சங்கரன், பி. ஏ., பி. எல். க்கும் சென்னை பாரிஸ்டர் திரு. கே. வி. சுப்பிரமணியம் அவர்கள் குமாரி உண்ணாமலை அம்மாளுக்கும் 7-9-49 அன்று திருநெல்வேலி — பேட்டையில் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. தமிழ் நாட்டின் எல்லா பாகங்களிலிருந்தும் உறவினர்களும், நண்பர்களும் விஜயம் செய்தார்கள். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும் வாழ்த்துச் செய்திகளும் வந்தன. வாழ்த்து அனுப்பியவர்களில் சிலர்: கனம் குமாரஸ்வாமி ராஜா, ஆர். கே. ஷண்முகம் செட்டியார், டாக்டர் வி. கே. ஜான், ஜி. டி. நாயுடு, சர்தார் வேதரத்னம், ஈ. வே. ராமசாமி நாயக்கர், பி. ஆர். பட்டாபிராமன், ஆகியோர் அன்று மாலை நடந்த ஊர்வல வைபவத்திற்கு திருவாடுதுறை டி. என். ராஜரத்தினம் பிள்ளை & பார்ட்டி நாதஸ்வரக் கச்சேரி. திருமண வைபவத்தைச் சிறப்பித்த அனைவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# நிகழ்ச்சிச் சித்திரம்

-சாஸ்திரி



கல்கி

மலர் 9 — தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் — இதழ் 9

# என்ன சேதி?

## வெற்றிக் கொடி

தமிழ்நாட்டு ஒன்பது ஜில்லாக்களில் காங்கிரஸின் வெற்றிக் கொடி கம்பீரமாகப் பறக்கிறது. ஒன்பது ஜில்லா போர்டுகளிலும் காங்கிரஸ் கட்சி அபேட்சகர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். திருச்சி ஜில்லாவில் காங்கிரஸ் அபேட்சகர் தோற்ற போதிலும் ஜயித்தவரும் பழைய பழுத்த காங்கிரஸ் வாதிதான்! மொத்தத்தில் ஜில்லா போர்டு தேர்தல் தமிழ்நாட்டில் காங்கிரஸ் செல்வாக்கு இணையற்று நிற்கிறது என்பதை நிரூபித்திருக்கிறது. மனக்குறைகளும் கோபதாபங்களும் எவ்வளவு இருந்தபோதிலும் தமிழ்நாட்டாரின் காங்கிரஸ் பக்தி மேலோங்கி நிற்பது தெளிவாகி யிருக்கிறது. ஜில்லாபோர்டு தேர்தலில் காங்கிரஸ் இத்தகைய பெரும் வெற்றி அடைந்ததற்கு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ் அவர்களின் சலியா உழைப்பும் செயல் திறமையும் பெரிதும் காரணமாகும். ஸ்ரீ காமராஜை வாழ்த்திப் பாராட்டுகிறோம்.

ஜில்லா போர்டு தேர்தல் மூலமாகச் சில படிப்பினைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அந்தப் படிப்பினைகளைக் காங்கிரஸ் நிர்வாகிகள் கவனித்து நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

## நீதியும் நிர்வாகமும்

“குற்றவாளி தண்டனை அடையாமல் தப்பினாலும் தப்பலாம்; ஆனால், நிரபராதி ஒரு காலத்திலும் தண்டனைக்கு உள்ளாகிவிடக் கூடாது” இதுதான் பிரிட்டிஷ் நீதி என்று பிரிட்டிஷார் பெருமையடைவது உண்டு. இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சி நடந்த காலத்தில் சாதாரண வழக்குகளில் பெரிதும் அந்த நியதி அனுஷ்டிக்கப் பட்டிருக்கலாம். ஆனால், அரசியல் வழக்குகள் சம்பந்தப்பட்ட வரையில் தொண்ணூற்றொன்பது சத விகிதம் நிரபராதிகளே தண்டிக்கப்பட்டனர் என்பது நிச்சயம். அத்தகைய அநீதிக்குக் காரணம் என்ன?

பாரத தேசத்தை அன்னியர் ஆண்டு கொண்டிருந்ததால், அரசியல் சம்பந்தப்பட்ட வரையில் ஜனங்கள் அவர்களுக்கு எதிரிகளாக இருந்தார்கள். ஜனங்கள் மீது வழக்குத் தொடருவோரும் தீர்ப்புக் கூறும் நீதிபதிகளும் பிரிட்டிஷ் ஆட்சியின் அம்சங்களாக இருந்தார்கள். எனவே, அரசியல் வழக்குகளில் நீதி கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. இல்லாவிடில் சிறந்த ஞானிகளும் சத்திய சீலர்களுமான பால கங்காதர திலகர், மகாத்மா காந்தி முதல் மற்றும் எண்ணிக்கையற்ற பாரதத் தவப் புதல்வர்கள் சிறைகளில் கிடந்து உழலும்படி நேர்ந்திருக்குமா? ஆகையால், ஆட்சி புரிவோர் ஆட்டிவைக்கும் பொம்மையாக நீதி நிர்வாகம் இருக்கக்கூடாது என்று அப்போது நமது அரும் பெரும் தலைவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். நீதி இலாகாவை நிர்வாக இலாகாவிலிருந்து பிரித்துச் சுதந்திரமுடையதாகச் செய்தால், நீதி கிடைக்கும் என்று அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால், அவ்வாறு பிரிக்க பிரிட்டிஷார் இசைவார்களா?

## சென்னைக்குப் பெருமை

எனினும், இப்போது பிரிட்டிஷ் ஆட்சியே இந்தியாவிலிருந்து மறைந்துவிட்டது. அதாவது முன்பு ஜனங்கள் ஒரு கட்சியில் இருந்தார்கள். சர்க்காரும் நீதி இலாகாவும் ஜனங்களுடன் தொடர்பு அற்ற மற்றொரு கட்சியில் இருந்தார்கள். இப்போதோ ஜனங்கள், சர்க்கார், நீதி இலாகா எல்லோரும் ஒரே கட்சியாகிவிட்டார்கள். இந்தியாவின் சீரும் சிறப்பும் க்ஷேமமுமே அவர்களுடைய ஏகோபித்த இலட்சியமாகி யிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நீதி இலாகா நிர்வாக இலாகாவிலிருந்து பிரிய வேண்டியதன் முக்கியம் குறைந்துவிட்ட போதிலும், அது நடைபெற வேண்டிய ஒரு சீர்திருத்தம் என்பதில் சந்தேகம் இல்லை. அந்தச் சீர்திருத்தத்தை நடத்தி வைப்பதில் நம் சென்னை சர்க்கார் முந்திக் கொண்டிருக்கிறார்கள்.

முதலில் செங்கற்பட்டு, வட ஆற்காடு இந்த இரண்டு ஜில்லாக்களில் மாத்திரமே நீதி நிர்வாகப் பிரிவினையை அமுலுக்குக் கொண்டு வருகிறார்கள். உலகமெங்கும் காந்தி மகான் ஜெயந்தி வைபவம் கொண்டாடப்படும் இந்தச் சுபதினத்திலே அந்த முறை அனுஷ்டானத்துக்கு வருகிறது. வேலூரில் பிரதமர் கனம் குமாரசாமி ராஜாவும் செங்கற்பட்டில் கனம் பக்தவத்ஸலமும் நீதி நிர்வாகப் பிரிவினையை அக்டோபர் மீ 2உ ஆரம்பித்து வைக்கிறார்கள். மதுவிலக்கு போன்ற பல முக்கிய சீர்திருத்தங்களிலும் மற்ற மாகாணங்களுக்கு வழிகாட்டிய சென்னை நீதிநிர்வாகப் பிரிவினை விஷயத்திலும் இந்தியா முழுவதற்கும் வழிகாட்டுவதைக் குறித்து நமது மாகாண ஜனங்கள் பெருமையடையலாம்.

## சர்வ தேச அதிர்ச்சி

அன்று அமெரிக்கா போட்ட அணு குண்டு ஜப்பானிலுள்ள ஒரு நகரை மாத்திரமே நாசம் செய்தது. ஆனால், இன்று அமெரிக்கா போட்டுள்ள அரசியல் அணுகுண்டு சர்வ நகரங்களையும் சர்வ தேசங்களையும் அதிர்ச்சியடையும்படி செய்திருக்கிறது. ருஷ்யாவிடம் அணுகுண்டு இருக்கிறது என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் ஒப்புக்கொண்டிருப்பதே அதிர்ச்சிக்குக் காரணம். "ருஷ்யா அணுகுண்டு இரகசியத்தைத் தெரிந்துகொண்டு அதை உற்பத்தி செய்யும் காலம் அதிக தூரத்தில் இல்லை" என்று பல மாதங்களாகவே உலக ராஜதந்திரிகள் சொல்லி வந்தார்கள். "அணுகுண்டு இரகசியம் அமெரிக்காவின் ஏகபோக பாத்தியமாக இருந்த காலம் மலையேறிவிட்டது" என்று சென்ற வருஷம் ருஷ்யா அன்னிய நாட்டு மந்திரி ஸ்ரீ மாலடாவ் சர்வ தேச சபையில் எடுத்துக் கூறினார்.

அதற்குப் பின்னரும், அணு குண்டு இரகசியத்தை உலகம் அறிந்து கொள்வது சமீப காலத்தில் இல்லை என்று அமெரிக்க அதிகாரிகள் இறுமாப்புக் கொண்டிருந்தனர். எது எப்படியிருந்தாலும் 1952-ம் வருஷத்துக்கு முன் ருஷ்யா அணுகுண்டை உற்பத்தி செய்துவிட முடியாது என்று அரசியல்வாதிகள் ஆருடம் கூறினர். ஆனால், ருஷ்யாவோ எல்லோரையும் ஏமாற்றிவிட்டது. ருஷ்யாவில் அணு குண்டு உற்பத்தி ஆரம்பமாகியிருக்கிறது என்றும், அதை ருஷ்யர்கள் பரீட்சித்துப் பார்த்துவிட்டார்கள் என்றும் ஸ்ரீ ட்ருமனே இப்போது ஒப்புக் கொண்டிருக்கிறார்.


## முடிவு என்ன?

அமெரிக்காவினிடம் நூற்றுக்கணக்கான அணுகுண்டுகள் இருக்கின்றன என்று ஒரு செய்தி கூறுகிறது. ருஷ்யாவில் அணு குண்டு உற்பத்தி ஆரம்பமாகிவிட்டதால், அங்கும் வெகு சீக்கிரத்தில் அணு குண்டுகள் குவிந்துவிடும் என்று மற்றொரு செய்தி கூறுகிறது. அமெரிக்காவும் ருஷ்யாவும் முன்னணியில் நிற்கும் ஒரு துறையில் பிரிட்டனுக்குத் திறமையில்லை என்று உலகம் நினைப்பதற்குப் பிரிட்டன் இடம் கொடுத்துவிடுமா? எனவே, பிரிட்டனும் கூடிய சீக்கிரம் அணு குண்டுகளை உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிடும்; அதன் சம்பந்தமான பூர்வாங்க வேலைகள் எல்லாம் முடிவடைந்துவிட்டன; பிரிட்டனிலுள்ள அணு குண்டுத் தொழிற்சாலை அமெரிக்காவில் இருப்பதைக் காட்டிலும் பெரியது என்றெல்லாம் பிரிட்டிஷ் பத்திரிகைகள் பெருமையடித்துக் கொள்கின்றன.

உலகிலே ஜனநாயக தத்துவத்தை நிலைநிறுத்தப் போவதாகக் கூறும் அமெரிக்காதான் சென்ற மகா யுத்தத்தில் நிரபராதிகளான லட்சக் கணக்கான ஜனங்களின் மீது அணு குண்டை வீசியது. எனவே, அந்த நாசகரமான ஆயுதம் எதிர்காலத்தில் போர்வெறியர்களின் கையில் சிக்குமாயின், அதன் விளைவு என்னவாகும் என்பதை நினைக்க எவருடைய நெஞ்சமும் கலங்கும். எதிர்காலத்தில் மற்றொரு மகா யுத்தம் ஏற்பட்டாலே உலகம் சின்னா பின்னமாகிச் சீரழிந்து விடும். அப்படியிருக்க, அந்த மகா யுத்தம் அணுகுண்டு யுத்தமாக இருக்குமாயின், அதன் கோரத் தன்மையைக் கற்பனை செய்து கொள்வதும் முடியாத காரியம்.

உலகத்திலே மூன்றாவது மகா யுத்தம் ஏற்படாமல் தடுப்பது சாத்தியமா? அது சாத்தியமாயினும் அல்லவாயினும் அணு குண்டு யுத்தம் நேராமல் தடுக்க வேண்டியது அத்தியாவசியம். எனவே, அவ்விஷயமாக ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா ஒரு சமரசத் திட்டத்தைச் சமர்ப்பிக்கத் தீர்மானித்திருக்கிறது. "எந்த நாடும் அணுகுண்டை உற்பத்தி செய்யக் கூடாது. அணுகுண்டை வைத்திருக்கக் கூடாது. அதை உபயோகிக்கக் கூடாது. சர்வ தேச அணுசக்திக் கட்டுப்பாடு முறைக்கு ஒவ்வொரு தேசமும் கட்டுப்பட வேண்டும்." இதுதான் இந்தியப் பிரதிநிதிகள் தயாரித்துள்ள திட்டத்தின் சாரம். இந்தத் திட்டத்துக்கு வல்லரசுகள் இணங்கினாலன்றி, அணுகுண்டுப் போட்டி எதில் வந்து முடியுமோ?

# உலகத்தின் திண்டாட்டம்!



# உலகுக்கு ஒரு ஜோதி!

சொற்களில் அடங்குவதில்லை; சிலைக்குள் நிற்பதில்லை; கற்பனைக்கு எட்டுவதில்லை;— காந்தி மகாத்மாவின் பெருமை.

கவிதை திகைக்கிறது; காவியம் திணறுகிறது; கலைகள் தலை வணங்குகின்றன;— காந்தியடிகளின் அற்புத சரித்திரத்தை எண்ணி.

இமயத்தைக் காட்டிலும் உயர்ந்து நின்றவர்; கங்கை நதியைக் காட்டிலும் புனிதமானவர்; சூரியனை விடத் தேஜஸ் படைத்தவர்; தாயைக் காட்டிலும் கருணை உள்ளவர்; கடவுளைப் போல நம்மைக் காக்க வந்தவர்; சத்தியத்தைப் போலச் சலியாது நின்றவர்;— உலகம் போற்றும் உத்தமர்.

பாரத புண்ணிய பூமியில் இன்றைக்கு எண்பது வருஷங்களுக்கு முன்னால் அவர் பிறந்தார். 1869-ம் வருஷம் அக்டோபர்மீ 2உ இந்த உலகத்தை உய்விக்க அவதரித்தார். அந்தப் புனித தினத்தை இன்று நாடெங்கும் கொண்டாடுகிறோம்.

பாரத நாட்டில் இதற்கு முன்னால் இரண்டு அவதார புருஷர்களுடைய பிறந்த நாளைத்தான் தேசமெங்கும் கொண்டாடுவது வழக்கம். ஸ்ரீ ராமபிரான் அவதரித்த ராமநவமி உற்சவம் கொண்டாடுகிறோம். ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஜன்மம் தரித்த கோகுலாஷ்டமி அல்லது கிருஷ்ண ஜயந்தியைக் கொண்டாடுகிறோம்.

ஸ்ரீ ராமபிரான் கையில் கோதண்டம் ஏந்தி இராவணாதி ராட்சதர்களை வதம் செய்து மக்களைக் காப்பாற்றினார்.

ஸ்ரீ கிருஷ்ண பகவானோ பூதகி, சகடாசுரன் முதல் கம்ஸன், ஜராசந்தன், சிசுபாலன், தந்தவக்ரன் வரையில் பல அசுரர்களையும் கொடுங்கோலர்களையும் வதம் செய்து சாதுஜனங்களை ரட்சித்து அருளினார்.

இவை யெல்லாம் இதிகாசங்களில் நாம் படித்தவை. இந்நிகழ்ச்சிகளைப் பரம்பரை பரம்பரையாக உண்மை என்று நம்பி ராமநவமியும் கிருஷ்ண ஜயந்தியும் கொண்டாடி வருகிறோம்.

நம்முடைய காலத்தில், நம் கண் முன்னே நடமாடிய அவதார புருஷர் மகாத்மா காந்தி. இவர் பாரத மக்களை அடிமைத்தனம் என்னும் கொடிய பூதத்தின் வாயிலிருந்து காப்பாற்றினார். தீண்டாமை என்னும் ராட்சதன், மதுபானம் என்னும் அரக்கன், அறியாமை என்னும் காட்டேரி ஆகியவர்களிடமிருந்து நம்மைக் காந்தி மகான் ரட்சித்து அருளினார்.

ஸ்ரீ ராமர் கோதண்டம் ஏந்தினார்; ஸ்ரீ கிருஷ்ணன் சக்ராயுதம் தரித்தார்; ஆனால் காந்தி மகாத்மாவோ பலாத்கார ஆயுதங்களை அடியோடு புறக்கணித்து அஹிம்சையாகிய வில்லையும் சத்தியமாகிய சக்கரத்தையும் தரித்துப் பாழ்பட்டு நின்ற பாரத தேசத்தை அடிமைத்தனம் முதலிய அரக்கர்களிடமிருந்து காப்பாற்றி பாரத மக்களுக்கு வாழ்வை அளித்தார்.

அத்தகையவர் அவதரித்த தினத்தை இன்று கொண்டாடுகிறோம்.

அவர் பிறந்த தினம் என்ற குதூகலத்தோடு அவருடைய புனிதத் திருமேனி மறைந்து விட்டதே என்ற ஆதங்கம் போட்டியிட காந்தி மகாத்மாவின் ஜயந்தி கொண்டாடுகிறோம்.

* * *

ஒருவர் நமக்கு ஒரு உதவி செய்தால் அதை உயிர் உள்ள வரைக்கும் மறக்கக் கூடாதென்பது மனித குலத்தின் தர்மம். மக்களில் உயர்ந்தோர் அனைவரும் இந்தத் தர்மத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

"நினைந்துணர நன்றி செய்வோரும் மறந்துவிடாமற்க் கொள்ளப் பயன் தெரிவார்!"

என்று தமிழ் மறை சொல்லுகிறது.

காந்தி மகாத்மா நமக்குச் செய்திருக்கும் நன்றி தினைத்துணையானதா? அற்ப சொற்பமானதா? அதற்கு ஈடு இணை சொல்ல வேறு ஒன்று உண்டா?

"இந்தியாவில் உள்ள முப்பது கோடி மக்களையும் முப்பது கோடிப் புழுக்களாக மதிக்கிறார்களே அயல் நாட்டார்?" என்று சுவாமி விவேகானந்தர் அன்று கதறினார்.

காந்தி மகாத்மா தோன்றி இந்திய மக்களை அந்த நிலையிலிருந்து உயர்த்தினார்; மாநிலத்தில் நம்மை மனிதர்கள் ஆக்கினார். உலக சரித்திரத்தில் கண்டும் கேட்டும் அறியாத அறப்போர் தர்ம முறையினால் பாரத நாடு சுதந்திரம் பெறச் செய்தார். இதனாலேயே பாரத

தேசத்தை உலகத்துக்கே வழி காட்டும் ஜோதியாக விளங்கச் செய்தார்.

அத்தகைய மகா புருஷரை நாம் மறக்க முடியுமா? அவர் நமக்குச் செய்த நன்றியைத்தான் மறக்க முடியுமா? அப்படி நாம் நன்றி மறக்கவில்லை யென்பதற்கு அறிகுறி ஏதேனும் வேண்டாமா? பாரத நாட்டில் இனி வாழையடி வாழையாகப் பிறக்கப் போகும் சந்ததிகள் எல்லாரும் காந்தி மகானை நன்றியுடன் நினைந்து போற்றும்படி செய்யும் ஞாபகச் சின்னங்கள் நாடெங்கும் வேண்டாமா?

• • •

காந்தி மகானுக்கு நாம் செலுத்தக்கூடிய நன்றி அவர் காட்டிய வழியில் நடப்பது: அவர் போதித்த உபதேசங்களைக் கடைப்பிடிப்பது: அவர் ஆரம்பித்து நடத்திய தொண்டுகளைத் தொடர்ந்து நடத்துவது;— இதில் சிறிதும் சந்தேகமில்லை

இந்த முறைகளைக் கடைப் பிடிக்கும்படி நம்மை அடிக்கடி தூண்டுவதற்குச் சில சாதனங்கள் வேண்டும்.

மக்கள் மறதியுள்ளவர்கள்; வாழ்க்கைப் போரில் ஈடுபட்டவர்கள்; பல விதக் கவலைகளால் சூழப்பட்டவர்கள்.

நல்ல காரியங்களை, அவசியமான காரியங்களைச் செய்வதற்குக் கூட, நமக்கெல்லாம் அடிக்கடி ஞாபகப் படுத்துவதும் தூண்டுகோல் இடுவதும் அவசியமாகும்.

ஆகையினாலேதான் காந்தி மகானைப் போன்ற அவதார புருஷருக்கும் ஞாபகச் சின்னம் அவசியமாகிறது.

• • •

எங்கும் நிறைந்த இறைவனுக்கு ஹிந்துக்கள் ஆலயங்கள் எடுத்துச் சிலைகளைப் பிரதிஷ்டை செய்து பூஜிக்கிறார்கள். கோயிலிலே கல்லிலேதான் கடவுள் இருக்கிறார் என்ற எண்ணத்தினால் அல்ல; சலனமுள்ள மனிதனுடைய மனம் இறைவனிடம் குவிந்து ஈடுபடச் சின்னங்கள் தேவை என்று கண்டுதான் ஹிந்துக்கள் கோயில்கள் கட்டி விக்கிரகங்களை வைத்துக் கும்பிட்டு வணங்குகிறார்கள்.

எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல ஆண்டவனைத் தொழுவதற்குக் கிறிஸ்துவர்கள் வானளாவிய கோபுரங்கள் உள்ள சர்ச்சுகளைக் கட்டுகிறார்கள்

விக்கிரக ஆராதனையை அடியோடு வெறுக்கும் முஸ்லிம் மதத்தாரும் அல்லாவைத் தொழுவதற்கு மசூதிகளைக் கட்டுகிறார்கள்.

கடவுளை நினையூட்டுவதற்குச் சாதனங்கள் தேவை என்றால், அவதார புருஷர்களையும் மகா புருஷர்களையும் நினையூட்டுவதற்குச் சாதனங்கள் இன்றியமையாது வேண்டியவை யாகும். பெரியவர்களுடைய பிறந்த நாளையும் இறந்த நாளையும் கொண்டாடுவதும் நினைவு மலர்கள் வெளியிடுவதும் ஞாபகச் சின்னங்கள் எழுப்புவதும் எதற்காக? இவை எல்லாவற்றின் அடிப்படையான நோக்கமும் ஒன்றுதான். மகான்களை அடிக்கடி ஞாபகப் படுத்திக் கொள்வதன் மூலம் அவர்களுடைய போதனைகளைக் கடைப் பிடித்து நடக்கத் தூண்டுதல் ஏற்படும் என்பதுதான்.

• • •

வீரர்களுக்கும் மகான்களுக்கும் ஞாபகச் சின்னங்கள் எழுப்பித் திருவிழாக் கொண்டாடும் தேசங்கள் உலகத்தில் மேலோங்கிய நிலையை அடைந்திருப்பதைக் காணலாம்.

அமெரிக்காவுக்குச் சுதந்திரம் அளித்த வாஷிங்டனுக்கும் அடிமைத் தனத்தை ஒழித்த ஆப்ரஹாம் லிங்கனுக்கும் மகத்தான ஞாபகச் சின்னங்களை எழுப்பியிருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் நெல்ஸனுக்கும் வெல்லிங்டனுக்கும் கிராம்வெல்லுக்கும் கிளைவுக்கும் கூட ஞாபகச் சின்னங்கள் எழுப்பியிருக்கிறார்கள்

பிரான்ஸ் தேசத்தில் வீரன் நெப்போலியனுக்கு இணையில்லாத ஞாபகச் சின்னம் இருக்கிறது.

ருஷியாவில் லெனினுக்குப் பிரமிக்க வைக்கும் பிரம்மாண்டமான ஞாபகச் சின்னம் நிறுவியிருக்கிறார்கள்.

பாரத புண்ணிய பூமியில் பிறந்த மகாத்மா வீரருக்குள் வீரர்; மகான்களுக்குள்ளே மகான்; ஞானிகளுக்குள்ளே பரம ஞானி; பக்தரிலே பரம பக்தர்; தொண்டருக்குள்ளே தொண்டர்; தலைவருக்குள்ளே தலைவர்; சென்ற இரண்டாயிரம் ஆண்டு காலத்தில் பாரத தேசத்தில் இத்தகைய ஒரு மகா புருஷர் அவதரித்ததில்லை.

அப்படிப்பட்ட மகாத்மா காந்திக்குத் தேசமெங்கும் தகுந்த ஞாபகச் சின்னங்கள் ஏற்பட வேண்டும்.

கல்கத்தாவிலும் பம்பாயிலும் காந்தி மகானுக்கு ஞாபகச் சின்னம் நிறுவி விட்டார்கள்; புது டில்லியில் மாபெரும் ஞாபகச் சின்னம் கட்டப் போகிறார்கள்.

நாகர் கோவிலில் நமது கலைவாணர் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் அவர்க

னுடைய சொந்த முயற்சியினால் காந்தி மகாத்மாவின் ஞாபகார்த்த ஸ்தூபி கம்பீரமாக எழுந்து நிற்கிறது.

சென்னை மாகாணம் மட்டும் பின் நிற்கலாமா? சென்னை நகரில் மகாத்மா காந்திக்குத் தக்கதொரு ஞாபகச் சின்னம் வேண்டாமா? இந்தச் சென்னை மாகாணத்தின் பேரில் மகாத்மா காந்தி ஒப்பற்ற பேரபிமானம் வைத்திருந்தாரே? மகாத்மாவின் திரு உள்ளத்தின் சத்தியாக்கிரஹ இயக்கம் நடத்தும் முறை உதயமானது இந்தச் சென்னை நகரிலேயே அல்லவா?

• • •

காந்தி மகாத்மா அமரத்வம் அடைந்த சமயத்தில் ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் சென்னை மாகாணப் பிரதம மந்திரியாயிருந்தார் என்பது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். காந்தி மகானுடைய திருமேனியின் அஸ்தி பல இடங்களுக்குச் சென்றதுபோல் சென்னைக்கும் வந்தது. சென்னைக் கடலிலும் மற்றும் பல புண்ணிய தீர்த்தங்களிலும் கரைக்கப்பட்டது. மிகுந்திருந்த அஸ்தியைக் கலசத்தோடு சேர்த்து வைத்து ஓமந்தூர் ரெட்டியார் பூஜை செய்து வந்தார். சென்னையில் தக்கதொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த அஸ்தி கலசத்தைப் புதைத்து அதன்பேரில் காந்தி மகாத்மாவின் ஞாபகார்த்தமாக ஒரு ஸ்தூபி கட்ட வேண்டுமென்பது ஓமந்தூர் ரெட்டியாரின் விருப்பம். அவருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் சென்னை சர்க்கார் சிரத்தை கொண்டிருக்கிறார்கள். பிரதம மந்திரி ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்களும் மராமத்து மந்திரி கனம் பக்தவத்ஸலம் அவர்களும் சென்னையில் பல இடங்களைப் பார்வையிட்டு, கடற்கரையில் சர்வகலாசாலைக் கட்டிடங்களுக்கு எதிரில் அத்தகைய மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபியைக் கட்டுவது என்று முடிவு செய்து அதற்கு வேண்டிய அளவு இடம் அளிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள்.

மந்திரிகள் பொறுக்கியிருப்பது மிகவும் பொருத்தமான இடம். எழுபத்தொன்பது அடி உயரமான ஸ்தூபி எழும்போது அதன் சிகரத்தை ஹைகோர்ட்டிலிருந்தும் பார்க்கலாம்; மயிலாப்பூரிலிருந்தும் பார்க்கலாம்.

அக்டோபர் 2-ந் தேதி மகாத்மா பிறந்த தினமும் ஜனவரி மாதம் 30-ந் தேதி காந்திஜி அமரரான தினமும் கொண்டாடப்படும் போது மகாத்மா ஸ்தூபியை அடுத்து அலைகடலின் ஓரம் வரையில் பதினாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து பிரார்த்தனை செய்ய விஸ்தாரமாக இடம் இருக்கும்.

ஸ்தூபியின் அடிப் புறத்தை எட்டுப் பக்கங்கள் உள்ளதாக அமைத்து மகாத்மாவின் மணி மொழிகளில் முக்கியமானவற்றைப் பொறுக்கி ஏழு பக்கங்களில் பொறிப்பது என்றும், நீலக்கடலை நோக்கியுள்ள பக்கத்தில் காந்தி மகானுடைய திருமுகம் பொலியச் செய்வது என்றும் திட்டமிட்டிருக்கிறது. காந்தி மகாத்மாவின் உபயோக சின்னங்களாகிய இராட்டை, கைக்கதிர், பகவத்கீதை, பசு ஆகியவற்றை ஸ்தூபத்தின் அடிப் பகுதியில் பொறிக்கும் உத்தேசமும் இருக்கிறது.

உலகத்துக்கே உண்மை ஒளி காட்டிய ஜோதியாய் விளங்கிய மகாத்மாவுக்குப் பொருத்தமான ஞாபகச் சின்னமாக, ஸ்தூபியின் சிகரத்தில் ஜோதி வடிவமான தீபம் ஒன்று அமைத்து முக்கியமான தினங்களில் அந்தத் தீபத்தை ஏற்றி வைப்பது என்றும் திட்டம் போட்டிருக்கிறது.

இந்த விவரங்களெல்லாம் பெரியவர்களுடைய ஆலோசனையின் பேரில் பின்னால் முடிவு செய்யப்படும்.

• • •

சென்னையில் மகாத்மா ஸ்தூபி நிர்மாணிக்கும் அரும்பெரும் திருப்பணிக்கு உதவி செய்யுமாறு தமிழ்ப் பெருமக்களை வேண்டிக் கொள்கிறோம்.

கால நிலையும் பொருளாதார நிலையும் மக்களின் கஷ்டங்களும் தெரிந்துதானிருக்கின்றன.

ஆயினும் நம்முடைய காலத்தில் பாரதநாட்டுக்குப் புது வாழ்வு தந்த மகானுக்கு நம்முடைய நன்றியைச் செலுத்தத் தவறக்கூடாது.

பல துளி பெருவெள்ளம் ஆகும்.

மகாத்மாவிடம் பக்தி கொண்ட தமிழர்கள் அனைவரும் சிறிதளவு உதவி செய்தால் இந்தத் திருப்பணிக்கு வேண்டிய மூன்று லட்சம் ரூபாயும் எளிதில் கிடைத்து விடும் அல்லவா?

காந்தி மகான் பிறந்த தினத்தை இன்று கொண்டாடும் ஒவ்வொருவரும் அவருடைய ஞாபகத்தை நிலைநாட்டும் முயற்சிக்கு உதவி செய்யச் சங்கற்பம் செய்து கொள்ளுங்கள்.

மகாத்மாவின் புனித நினைவுக்கு உங்கள் காணிக்கையைப் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள் —

மானேஜர், "கல்கி" காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை, 10.

# லட்சிய யாத்திரை

**கவி ரவீந்திரநாத தாகூர்**

பனி சூழ்ந்த மலைச் சிகரத்தின் மீது, எல்லையற்ற மௌனக் கடலில் பக்தன் நின்றான்.

உறக்க மற்ற தன் கண்களால் வானைக் கூர்ந்து நோக்கி, ஒளியின் உதயத்தை எதிர் நோக்கி நின்றான்.

வானில் மேகங்கள் கனத்து இருண்டன. இரவில் சஞ்சரிக்கும் பறவைகள் இங்குமங்கும் பறக்க ஆரம்பித்தன.

அப்பொழுது பக்தன், "சகோதரர்களே, அச்சமில்லை. மனிதனிடமிருந்தே தெய்வத் தன்மை பிறக்கும்" என்று கூவினான். யாரும் செவி சாய்க்கவில்லை.

"மிருக பலமே ஆதி சக்தி. மிருக பலமே சாசுவதமானது. ஸாத்வீக பாவம் கடைசியில் ஏமாற்றத்தையே அளிக்கும்" என்று அவர்கள் பதில் அளித்தார்கள்.

ஆனால், அந்த மிருக பலத்தால் அவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டபொழுது, "சகோதரா, நீ எங்கே இருக்கிறாய்?" என்று பிரலாபித்தனர்.

"நான் உங்கள் அருகிலேயே இருக்கிறேன்" என்ற பதில் கிடைத்தது.

ஆனால், காரிருளில் யாரையும் பார்க்க முடியவில்லை. "இக் குரல் நமது அதைரியத்தின் எதிரொலி" என்று வாதித்தனர்.

பரஸ்பர நம்பிக்கையற்ற வாழ்க்கையில் தோன்றும் பலவித பொய்த் தோற்றங்களுள் இதுவும் ஒன்று என்று அவர்கள் முடிவு செய்தனர்.

இருண்டு வந்த மேகங்கள் கலைந்தன. கிழக்கில் வெள்ளி எழுந்தது. பூமியின் இதயத்திலிருந்து புத்துணர்வின் பெருமூச்சு உண்டாயிற்று.

காட்டுப் பாதைகளில் காய்ந்த சருகுகள் சலசல வென்று ஒலித்தன. கிளைகளில் புள்ளினங்கள் இனிமையாகக் கூவின. "சமயம் வந்து விட்டது" என்றான் பக்தன்.

"எதற்குச் சமயம்?"

"யாத்திரை செய்வதற்கு."

அவர்கள் உட்கார்ந்து யோசித்தனர். பொருள் விளங்கவில்லை. ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமான பொருள்கள் தோன்றின.

எங்கிருந்தோ ஒரு சிறு குரல் கிளம்பியது. "நமது விருப்பங்களை நிறைவேற்றும் யாத்திரை இதுவே—" இச் செய்தி உடனே ஒரு நொடியில் எங்கும் பரவியது.

ஆண்கள் தலை நிமிர்ந்து நோக்கினர். பெண்கள் வணங்கினர். குழந்தைகள் கைகொட்டிக் களித்தனர். இளங் கதிரின் ஒளி பக்தனின் வதனத்தின் மேல் ஒரு பொன் மாலைபோல விழுந்தது. "சகோதரா, உன்னை எல்லோரும் வணங்குகிறோம்" என்று பக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் கூறினார்கள்.

கற்களும், முட்களும், கொதிக்கும் கற்பாறைகளும் நிறைந்த வழியில் தலைவன் செல்ல வாரம்பித்தான். அவனைப் பின்பற்றித் திடகாத்திரர்களும், பலவீனர்களும், இளைஞர்களும், வயது முதிர்ந்தவர்களும், அரசர்களும், உழவர்களும் பேதமின்றிச் சென்றனர்.

சிலர் களைத்து விழுந்தனர். சிலருக்கு ஐயம் உண்டாயிற்று. ஒவ்வோர் அடி எடுத்து வைத்ததும், "முடிவு இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?" என்று கேட்டனர். தலைவன் திரும்பவில்லை; பதிலும் கூறவில்லை. பின்பற்றுபவர்கள் ஆத்திரப்பட்டார்கள். ஆயினும் திரும்பிச் சென்றுவிடவில்லை.

முன்னேறிச் செல்லும் ஜனத்திரளும், குறையா நம்பிக்கையும் அவர்களை மீண்டும் உற்சாகப்படுத்தின.

சோர்வை விட்டனர்; நித்திரையை ஒழித்தனர். தலைவனைப் பின்பற்றுவதில் ஒருவரோடொருவர் போட்டியிட்டனர்.

நாட்கள் பல சென்று மறைந்தன. ஆயினும் இலட்சியம் கிட்டும் குறிகள் ஒன்றையும் அவர்கள் காணவில்லை.

அவர்களுடைய முகங்கள் சோர்வடைந்தன. அவர்கள் உரத்த குரலில் முறையிடத் தொடங்கினர்.

இரவு வந்தது. ஆலமரத்தின் கீழே பாய்களை விரித்து யாத்திரிகர்கள் சயனித்துக் கொண்டனர். காற்று விளக்கை அணைத்து இருளைத் தந்தது.

திடீரென்று ஒருவன் எழுந்து நின்று, தலைவனைத் தன் இரக்கமற்ற விரலால் சுட்டிக் காட்டி "இவன் பொய்த் தலைவன். இவன் நம்மை ஏமாற்றி விட்டான்" என்று கூவுகிறான்.

பல குரல்கள் அவன் பக்கம் சேருகின்றன. ஆண்களும் பெண்களும் கோப வார்த்தையைக் கக்குகின்றனர். அவர்களுள் ஒருவன் எழுந்து தலைவனைத் தாக்குகிறான். இருட்டிலே அனைவரும் ஒருங்கு சேர்ந்து அவனைத் தாக்கி, அவனுடைய உயிரற்ற உடலைத் தரையில் சாய்க்கின்றனர்.

மறுபடியும் நிச்சப்தம். எங்கிருந்தோ நீர் வீழ்ச்சியின் ஆரவாரம் கேட்கிறது. காற்றில் மல்லிகையின் மணம் மிதந்து வந்தது.


யாத்திரிகர்களின் மனதில் பயம் தோன்றியது. பெண்கள் அலறத் தொடங்கினார்கள். ஆண்கள் சோகமும் கோபமும் கலந்த தொனியில் அவர்களை அடக்கினர்.

நாய்கள் ஊளையிடத் தொடங்கின. அவர்கள் அவற்றைச் சவுக்கால் அடித்து நிறுத்தினர். இரவு முடிவற்றது போல் சென்று கொண்டிருந்தது.

"இந்தப் பழிக்கு யார் பொறுப்பாளி?" என்று மக்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டனர். தங்கள் தங்கள் கத்திகளை உறைகளிலிடும் தருணம், மலையுச்சியில் அருணோதயமாயிற்று. அதிகாலையின் ஒளி மங்கலாகத் தோன்றிற்று.

இருள் விலகிற்று. திடீரென்று தலைவனின் உயிரற்ற முகத்தில் விளங்கிய சாந்தத்தைக் கண்டு அவர்கள் திடுக்கிட்டனர்.

பெண்மணிகளின் துயரக் குரல் வானை நோக்கி எழுந்தது. ஆண்கள் தங்கள் முகத்தைக் கைகளால் மறைத்துக் கொண்டனர். சிலர் அவ்விடத்திலிருந்து நழுவ ஆரம்பித்தனர். ஆயினும் பழி அவர்களைச் செல்ல விடவில்லை. "இனி யார் நமக்கு வழி காட்டுவார்கள்?" என்று அவர்கள் திகைத்தனர்.



கிழக்கிலிருந்து வந்த முதியவன் ஒருவன் தலை வணங்கி, “நாம் யாரைக் கொன்று விட்டோமோ, அவன் தான் வழி காட்ட வேண்டும்” என்றான். எல்லோரும் மௌனமாக அமர்ந்தனர்.

முதியவன் மீண்டும் உரைத்தான்: “நாம் சந்தேகத்தால் அவனைத் நிரஸ்கரித்தோம். கோபத்தினால் கொன்று விட்டோம். இப்பொழுது அன்பினால் அவனை மீண்டும் ஒப்புக்கொள்வோம். மரணத்தின் மூலம் அவன் நமது உள்ளங்களில் அமரத்துவம் பெற்று விட்டான்” என்றான்.

எல்லோரும் எழுந்து நின்று “அமரன் வாழ்க!” என்று வாழ்த்தினர்.

இளைஞர்களெல்லோரும் ஒன்று கூடினர். “புறப்படுங்கள்! வழி நடப்போம். அன்பைக் கொண்டு சக்தியையும், அறிவையும் பொருளையும் பெறுவோம். இவ்வுலகத்தை மட்டுமின்றி, அண்டத்தையே ஜயிப்போம்” என்று ஆரவாரித்தனர்.

ஆயிரம் இளங்குரல்கள் ஒன்றுகூடி ஒலித்தன. பொருள் யாருக்கும் விளங்காவிட்டாலும் அனைவரிடமும் ஒரே உணர்ச்சி பரவி நின்றது. ஒற்றுமைப் பட்ட வீரம் மரணத்தையும் எதிர்க்க வல்லது.

அவர்கள் யாரையும் வழி காட்டுமாறு வேண்டவில்லை. அவர்கள் மனதில் யாதொரு ஐயமும் தோன்றவில்லை. சோர்வு ஓடி மறைந்தது. அமரத்துவம் அடைந்த அந்தத் தலைவனின் ஆத்மா அவர்கள் நெஞ்சில் புகுந்தது.

கம்பளம் விரித்தது போல் இளம் பயிர்கள் நிறைந்த கழனிகளூடே சென்றனர். தானியங்கள் அறுவடையாகிக் குவிக்கப்பட்டிருந்த களங்களினூடே புகுந்தனர்.

பஞ்சத்தினால் ஜனங்கள் மடிந்து, எலும்புக் கூடுகள் சிதறுண்டு கிடந்த நாடுகளையும் அவர்கள் கண்டனர். ஜன சங்கியை நிறைந்த பெரிய நகரங்களைக் கடந்தனர். பாழடைந்த குடிசைகளையும் எளிய மக்கள் வாழும் இடங்களையும் கண்டார்கள்.

பகல் முழுதும் பிரயாணம் செய்து, மாலை நெருங்கியவுடன் தங்களுக்குள் தீர்க்க தரிசியாக விளங்கிய முதியவனை நோக்கி “அதோ தெரியும் கோட்டை தான் நாம் நம்பிச் செல்லும் இலட்சியமா?” என்று கேட்கின்றனர்.

முதியவன் தலையை அசைக்கிறான். “மறையும் கதிரவனின் கடைசிக் கிரணங்களே அவை” என்று பதில் அளிக்கிறான். இளைஞர்கள் கூவுகின்றனர்.

“அன்பர்களே, நிற்காதீர். இருள் நிறைந்த இந்த இரவிலேயே பிரயாணம் செய்து ஒளி உலகத்தை அடைவோம்.”

இரவில் வழி நடக்கின்றனர். பாதை தானாகவே அவர்களுக்கு விளங்குகிறது.

நட்சத்திரங்களும் “முன்னேறுங்கள், பின் தங்காதீர்கள்” என்று எச்சரிக்கின்றன.

“இலட்சியம் நெருங்கி விட்டது” என்று தலைவனின் குரல் எங்கிருந்தோ அசரீரியாகத் தொனித்தது.

## ராதா ஸில்க் எம்போரியம்

நெ. 2, விஸ்ராணிபவன் திலாங் ரோடு
மதுங்கா :: பம்பாய்

★

## தீபாவளி விசேஷ விற்பனை

# R. S. E.

வழக்கம்போல் இதுவரை தங்களுக்குத் திருப்திகரமாக தீபாவளிப் பட்டுச் சேலைகள் தயார் செய்து அளித்ததுபோல் இந்த தீபாவளிக்கும் மிகவும் உயர்ந்த வேலைப்பாடுகள் கூடிய அசல் கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள், தயார் செய்து தருவித்துள்ளோம். இன்றே விஜயம் செய்து தங்களுக்குத் தேவையானதை பொறுக்கி எடுத்துச் செல்லக் கேட்டுக் கொள்கிறோம்.

★

## ராதா
## ஸில்க் எம்போரியம்

14, சன்னதி தெரு,
மைலாப்பூர் :: சென்னை
போன்: 84188

★

## ருக்மணி ஸில்க் எம்போரியம்

போன்: 58
48-49, பெரிய தெரு, கும்பகோணம்

# மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபி

எஸ். கே. சுவாமி


தேசப் பிதா மகாத்மா காந்தியின் ஞாபகார்த்தமாகப் பல காரியங்கள் தேசத்தில் செய்யப்படுகின்றன. அவைகளிலெல்லாம் மிக முக்கியமான காரியம் காந்தியடிகளின் சிரஞ்சீவித் தன்மையை எப்போதும் மக்களுக்கு உணர்த்தும்படியானதும், என்றும் நின்று நிலவும்படியானதும் ஆகிய ஸ்தூபிகள் பல இடங்களில் எழுப்பப்படுவதேயாகும். இந்தக் கைங்கரியத்தை இந்தியாவிலேயே முதன் முதலில் செய்து தேசத்தின் முதற் பரிசைப் பெற்றுக் கொண்டார்கள் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், திருமதி டி. ஏ. மதுரம் ஆகியோர்கள். இந்த நல்ல காரியத்தை முதன் முதலில் செய்தவர் ஒரு தமிழர் என்பதும், அது தமிழ் நாட்டிலே நடைபெற்றது என்பதும் தமிழர்களுக்கே பெருமை யளிக்கக் கூடியது.

நாகர்கோவிலில் திரு என். எஸ். கிருஷ்ணன், திருமதி டி. ஏ. மதுரம் அவர்களின் ரூ. 40,000 சொந்தச் செலவில் இந்த மகத்தான காரியம் நடைபெற்றிருக்கிறது. இந்த ஸ்தூபியை 1949 செப்டம்பர் 13-ந் தேதி யன்று சென்னை முதன் மந்திரி கனம் பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியுடன் திறந்து வைத்தார்கள். மகாகவி பாரதியார் மணி மண்டபக் கூட்டத்தை நடத்திவிட்டு, மந்திரியார் எட்டயபுரத்தி லிருந்து நாகர்கோவிலுக்கு விரைந்து வந்தார்கள்.

அன்று நாகர்கோவில் நகரம் பூராவும் ஒரே ஜனக்கூட்டம். ஸ்தூபி கட்டப்பட்டிருந்த முனிசிபல் பார்க்கில் உளுந்து போட்டால் கீழே விழாத முறையில் ஜனம் கூடியிருந்தது. பட்டித் தொட்டிகளிலிருந்து கிழவர், கிழவிகள்கூடக் கட்டுச் சாதம் கட்டிக்கொண்டு காந்தியடிகள் மீதுள்ள கரையற்ற பக்தியை மலர்ந்த முகங்களில் காட்டிக் கொண்டு வந்து கூடியிருந்தார்கள்.

ஸ்தூபியைச் சுற்றிப் பட்டொளி வீசிப் பறந்த தேசியக் கொடிகள் மக்களைப் பார்த்து, "வாருங்கள், வாருங்கள்!" என்று கைகாட்டி வரவேற்பது போன்று காணப்பட்டன. நாகர்கோவில் முனிசிபல் பார்க்கில் அமைந்திருந்த அழகிய பந்தல் பலவித அலங்காரங்களுடன் மிளிர்ந்தது.

மகாத்மா காந்தியின் திருவுருவப் படத்திற்கு மாலை சூட்டி நடுவே வைக்கப்பட்டிருந்தது. ஜனங்கள் பந்தலுக்குள் நுழைந்ததும் பயபக்தி விசுவாசத்துடன் மகாத்மாவின் திருவுருவத்தைப் பார்த்துக் கைகூப்பி வணங்கிவிட்டுத் தத்தம் இடங்களில் உட்கார்ந்தார்கள்.



காந்தி மகாத்மாவுக்கு ஞாபகார்த்த ஸ்தூபி நிறுவிய கலைவாணர்கள்.

அன்று காலை 8-30 மணிக்கு மேடையில் அமர்ந்து நாதஸ்வர வித்வான் குளிக்கரை பிச்சையப்பா அவர்கள் நாதஸ்வரக் கச்சேரி நடத்தினார்கள்.

திருமதி என். சி. வஸந்த கோகிலம் அவர்கள் மகாத்மா காந்தியின் மீது வணக்கப் பாடல்கள் பாடினார்கள். நாகர் கோவில் நகரசபைத் தலைவர் வரவேற்புரை வழங்கினார்.

காலை 10 மணிக்கு முதன் மந்திரி கனம் ராஜா அவர்கள் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், நாகர்கோவில் நகரசபைத் தலைவர் ஆகியவர்களுடன்


வந்தார்கள். திரு என். எஸ். கிருஷ்ணன், பிரதம மந்திரி அவர்களுக்கு மலர் மாலை சூட்டி மரியாதை செய்து வரவேற்றார்.

திரு என். எஸ். கிருஷ்ணன் கனம் குமாரசாமி ராஜா அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுத்தார். அதில் குறிப்பிட்டதாவது :—

"அகில உலக சமாதானமே அண்ணல் காந்தியின் அடிப்படைக் கொள்கை; இவ்வடிப்படையில் எழுந்ததே இந்தியச் சுதந்திரமெனும் இன்ப மாளிகை. இது, சட்டத்தினும் திட்டத்தினும் ஏற்பட்டதன்று. அன்பின் வழியை உயிர் நிலையாகக் கொண்டது; சத்தியத்தின் நிலையை நித்தியமாகக் கொண்டது. இப்பெரியாரின் நினைவு இவ்வுலகில் என்றும் நின்று நிலவ வேண்டும் என்று எங்கள் உள்ளத்தில் எழுந்த நினைப்பின் உருவமே இன்று உங்கள் முன்னிலையில் உயர்ந்து நிற்கும் ஸ்தூபி ... நீலத்திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் தமிழ்க் குமரித் தாயின் திருப்பார்வையில் நிலைபெற்ற இந்த மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபியைத் திறந்து வைத்த முதல் அமைச்சரைப் பாராட்டுகிறோம்; நன்றி தெரிவிக்கிறோம்."

அன்புள்ள,

என். எஸ். கிருஷ்ணன்,
டி. ஏ. மதுரம்.



நாகர் கோவிலில் திரு என். எஸ். கிருஷ்ணன் அவர்களால் 40 000 ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டிருக்கும் காந்தி மகாத்மாவின் ஞாபகார்த்த ஸ்தூபி.

வரவேற்புக்குப் பின்னர் முதல் அமைச்சர் கனம் ராஜா அவர்கள் பேசியதாவது :—

"உலகிலேயே சிரேஷ்டமான மகாத்மா காந்தியின் ஞாபகார்த்த ஸ்தூபியைத் திறந்து வைக்கும் சிறந்த வாய்ப்பை எனக்குக் கொடுத்ததற்கு திரு என்.எஸ் கிருஷ்ணனை நான் வாழ்த்துகிறேன். ஞாபக ஸ்தூபியின் அடிப்பாகத்தில் எட்டுக் கோணங்களிலும் அண்ணலாரின் அரிய உபதேசங்கள் பளிங்குக் கற்களில் பொறிக்கப்பட்டிருப்பதைக் காண எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இந்தியா முழுவதிலுமே இது ஒரு புதுமையான ஞாபகச் சின்னம். மகாத்மா காந்தி தமது வாழ்நாள் முழுதும் நமக்கு வழி காட்டும் திருவிளக்காகத் திகழ்ந்தார். நமது நாட்டின் விதியை மாற்றியமைத்து விடுதலையை வாங்கித் தந்தார். அஹிம்சையின் மூலமாக எந்த நாடும் சுதந்திரம் பெற்றதில்லை. நமது நாடு அஹிம்சையின் மூலமாக விடுதலையடைந்தது என்றால் மகாத்மா காந்தியின் மாசு மறுவற்ற சேவையையும், அதனால் நாட்டுக்குக் கிடைத்த புகழையும் சொல்ல வேண்டுவதில்லை.

இந்த மகத்தான காரியத்தைச் செய்த திரு என். எஸ். கிருஷ்ணனை நாடு புகழ்கிறது. தமிழ் நாட்டுக்கே தனிப்பெருமை தேடித் தந்த என். எஸ். கிருஷ்ணனுக்குக் கலைத்துறையில் 'டாக்டர்' பட்டம் கொடுத்துக் கௌரவிக்க வேண்டும்."

டாக்டர் அழகப்பச்செட்டியார், திரு என். எஸ். கிருஷ்ணன், திருமதி டி. ஏ. மதுரம் ஆகியவர்களின் கலைத் தொண்டையும் தாராள மனதையும் வெகுவாகப் பாராட்டிப் பேசினர். ஜனக் கூட்டம் ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருந்தது. மாந்தருக்குள் ஒரு தெய்வமான மகாத்மா காந்தியின் மீது தாங்கள் கொண்டுள்ள பக்தியை ஜனங்கள் பல வழிகளிலும் காட்டிக் கொண்டனர். "மகாத்மா காந்திக்கு ஜே!" என்ற ஜெய கோஷங்கள் வானைப் பிளந்தன.



# நான்கு கடிதங்கள்

ராஜேந்திர சங்கர்

உள்ளே மிகவும் இருட்டாக இருந்தது. ஒரு மூலையில் குறட்டைச் சத்தம் கேட்டது. வெளியில் கடுமையாக அடித்துக்கொண்டிருந்த புயற்காற்றை விட அந்தக் குறட்டைச் சத்தம் பலமாக இருந்தது. மற்றொரு மூலையிலிருந்து அழுகைச் சத்தம் கேட்டது. அமைதிக்கும் அழுகைக்கும் இடையில், ஒரு ஊதாக் கவர் பொறுமையற்றுத் தவித்தது. தன்னந் தனியாகவும் பேசாமலும் எவ்வளவு நேரம்தான் சும்மா இருக்க முடியும்? யாருடனாவது பேசவேண்டுமென்று அது துடித்தது. ஆனால் கார்டு நிம்மதியாகக் குறட்டை விட்டது; பழுப்புக் கவர் யாருடனும் பேச மறுத்துவிட்டது.

தபால் பெட்டியின் மீது மழை கொட்டிக்கொண்டிருந்தது. வெளியே காலடியோசை கேட்டது. ஊதாக் கவர் தபால் பெட்டியின் வாய்வழியே எட்டிப் பார்த்தது. யாரோ கறுப்பாக ஒரு ஆசாமி கையில் குடையுடன் நின்றுகொண்டிருந்தார். அவர் தம்முடைய கோட்டுப் பையிலிருந்து ஒரு நீலக் கவரை எடுத்து மார்புடன் அதை அணைத்தார். பிறகு அதற்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு அதைத் தபால் பெட்டியில் போட்டார்.

நீலக் கவர் பொத்தென்று கீழே வந்து விழுந்தது.

"அடேயப்பா! இங்கே எவ்வளவு குளிரா யிருக்கிறது! இங்கே யாரும் இல்லையா?" என்று சொல்லிவிட்டு அது சுற்றுமுற்றும் பார்த்தது.

தனிமையைச் சகிக்க முடியாமல் வேதனைப் பட்டுக் கொண்டிருந்த ஊதாக் கவர் அதைப் பார்த்து மிக்க மகிழ்ச்சியுடன், "தங்காய், இங்கே வா!" என்று அழைத்தது.

"நீ மாத்திரம்தான் இருக்கிறாயா, வேறு யாரும் இங்கே இல்லையா?" என்று கேட்டது நீலக் கவர்.

"ஏன், இல்லாமல் என்ன? அதோ, அங்கே ஒரு முரட்டுப் பயல் (கார்டு) குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறான். இதோ, இங்கே இருக்கும் பழுப்புச் சட்டைக் குட்டி அழுது அழுது உயிரை விட்டுக் கொண்டிருக்கிறாள். என்னுடன் பேசுவதற்கு யாரும் இல்லை. சற்று இப்படி வாயேன்!"

"எதற்காக அழவேண்டும்? ஆனந்த மயமான இந்த உலகத்தில் அழுகைக்கு இடம் எங்கே இருக்கிறது?"

"அது இருக்கட்டும்: நீ எங்கே போகிறாய்?"

"நானா?—அதை ஏன் கேட்கிறாய், போ! எனக்கு ஒரே குஷியாக இருக்கிறது. என்னை ஒரு காதலன் தன் காதலியிடம் அனுப்பியிருக்கிறான்"

"அப்படியா? யார் அவன்? அவனைப் பற்றிக் கொஞ்சம் சொல்லேன்!—வா, இப்படி வா!"

மழை விடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. தபால் பெட்டி குளிர் பொறுக்க மாட்டாமல் நடுங்கிற்று. நீலக் கவர் ஊதாக் கவர் அருகே சென்று தன் கதையைச் சொல்லத் தொடங்கியது:—

"ஒரு அழகிய வாலிபன் ஒரு நாள் ஒரு ரேஷன் ஆபீஸுக்குப் போனான். அங்கே ஒரு யுவதியைப் பார்த்து அவள்மீது மோகங் கொண்டான். எப்படியாவது அவளைக் கல்யாணம் செய்து கொண்டுவிடுவது என்று முடிவு செய்துவிட்டான். அதற்காக இப்போது என்னைத் தூது அனுப்பியிருக்கிறான். அவள்மீது அவன் கொண்டுள்ள அன்பையெல்லாம் நான் எடுத்துச் சொல்ல வேண்டுமாம். 'கண்ணே, இரவு பகல் இருபத்துநான்கு மணி நேரமும் உன்னைப் பற்றி ஓயாமல் சிந்தித்துக் கொண்டேயிருக்கிறேன். எனக்குத் தூக்கமே வரவில்லை. எப்போதும் உன்னைப் பற்றியே கனவு கண்டு கொண்டிருக்கிறேன். உன்னைக் கெஞ்சு

கிறேன்; வேண்டுகிறேன்; அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாலை நீ பீச்சுக்குக் கட்டாயம் வரவேண்டும். வந்து, எனக்கு நம்பிக்கை யுண்டாக்கத்தக்க விதமாக ஒரு வார்த்தை ஆறுதல் சொல்ல வேண்டும்' என்றெல்லாம் அவன் உளறிக் கொட்டி எழுதியிருக்கிறான். பெட்டியில் போடுவதற்கு முன்னால் அவன் என்னை எவ்வளவு அன்பாக மார்போடணைத்து முத்தமிட்டான், தெரியுமா?''

''பரவாயில்லை; கேட்கக் கேட்க எவ்வளவோ இன்பமாக இருக்கிறது. ஆனால் அதற்கு முற்றிலும் நேர்மாறாக இருக்கிறது என் கதை!''

''அப்படியா!—எங்கே, அதைத்தான் கொஞ்சம் சொல்லேன்?''

''என்னை அனுப்பியவன் இளமைப் பருவத்தைக் கடந்தவன். அவனுக்குத் தலைகூட நரைக்க ஆரம்பித்து விட்டது. மனைவி சமையல் கட்டில் வேலை செய்து கொண்டு இருந்தபோது, அவனுக்குத் தெரியாமல் என்னை எழுதிக் கொண்டிருந்தான். அப்போது தற்செயலாக அவள் அங்கே வந்து, 'என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டாள். அதற்கு அவன் என்ன பதில் சொன்னான் தெரியுமா?''

''என்ன சொன்னான்?''

''ஏதோ ஒரு நல்ல உத்தியோகத்துக்காக மனு எழுதிக் கொண்டிருப்பதாக ஒரு பச்சைப் பொய் சொன்னான். ஆனால் உண்மை என்ன தெரியுமா? கொஞ்ச நாளாக அவனுக்கும் வேறொரு பெண்ணுக்கு மிடையே இரகசிய நட்பு இருந்து வருகிறது. அந்தப் பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணத்தையும் நிச்சயித்து விட்டார்கள் அவளுடைய பெற்றோர்கள். இந்தச் செய்தியைக் கேட்டு அவன் மனமிடிந்து போய்விட்டான். கடைசியில் ரொம்ப யோசித்து, அவளை அழைத்துக் கொண்டு எங்காவது ஓடிப் போய் விடுவதென்று முடிவு செய்திருக்கிறான். அதைத்தான் இப்போது எழுதியிருக்கிறான்!''

''ராமராமா! தலை நரைத்துப் போன ஒரு குடும்பஸ்தனுக்கா இப்படிப்பட்ட விபரீத எண்ணம் உண்டாக வேணும்!''

''அதற்கு அவன் சொல்லும் சமாதானம்தான் ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது. மனைவிக்கு வீட்டு வேலை செய்யவும் குழந்தைகளைப் பராமரிக்கவும்தான் பொழுது சரியாக இருக்கிறதாம். 'என் வாழ்க்கை ஒரு பெரும் பாலைவனமாக இருக்கிறது. கண்ணே, அந்தப் பாலைவனத்தின் மத்தியில் நீதான் ஒரு சோலையாக எனக்குத் தென்படுகிறாய்!' என்று அவன் எழுதியிருக்கிறான்.''

''இரண்டு பேரும் ஓடிப்போகும்போது யாராவது கண்டு பிடித்துவிட்டால் தமாஷாகத்தான் இருக்கும்!'' என்று சொல்லி விட்டு நீலக் கவர் சிரித்தது.

மூலையிலிருந்து வந்த குறட்டைச் சத்தம் திடீரென்று நின்றது. ''பெண்களே, உங்கள் ஆட்டத்தைக் கொஞ்சம் நிறுத்த மாட்டீர்களா?'' என்று ஒரு கிழக் குரல் கேட்டது.

நீலக் கவரும் மஞ்சள் கவரும் கார்டைப் பார்த்து, ''தாத்தா! நீ எங்கே போகிறாய்? உன் கதையைக் கொஞ்சம் சொல்லேன்'' என்று கேட்டன.

கார்டு ஒரு கொட்டாவி விட்டுவிட்டு, ''தொந்தி பருத்த ஒரு சேட்டு வெகு தூரத்துக்கு அப்பாலுள்ள தன் குடும்பத்துக்கு என்னை அனுப்பியிருக்கிறான். அவன் சொந்த ஊருக்குப் போய் மனைவி





மக்களைக் கண்டு பல வருஷமாகிறது. தானும் அங்கு போவதாயில்லை; குடும்பத்தையும் இங்கே அழைத்துக் கொண்டு வருவதாயில்லை. அதற்கு வழக்கமாக அவன் சொல்லும் காரணத்தைத்தான் இப்போதும் சொல்லியிருக்கிறான். வீடு கிடைக்கவில்லையாம்! உண்மை என்ன தெரியுமா? ஒரு சினிமா நடிகை மீது அவன் மோகம் பிடித்து அலைகிறான். அவளும் அவனைச் சரியாகத் தன் வலையில் மாட்டி வைத்திருக்கிறாள். பணத்தையெல்லாம் காலி செய்துவிட்டுச் சீக்கிரமாகத் தன் ஊரைத் தேடிப் போய்விடுவான் என்பது நிச்சயம்'' என்று சொல்லிவிட்டு மற்றொரு புறமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டு மறுபடியும் குறட்டை விடத் தொடங்கியது.

நீலக் கவரும் ஊதாக் கவரும் அந்தக் கதையைக் கேட்டுச் சிரித்தன. அப்போது மற்றொரு மூலையிலிருந்து இதயத்தைப் பிளக்கும் ஒரு அழுகைக் குரல் கேட்டது. ஒரு பழுப்புக் கவர் தன் கண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தது.

ஊதாக் கவர் அதைப் பார்த்து, ''தங்கையே! உனக்கு உடம்புக்கு என்ன?'' என்று கேட்டது.

''அழாதே அம்மா, இப்படித்தான் ஓயாமல் அழுதுகொண்டே இருப்பதா? இந்த உலக வாழ்க்கை சாசுவதமானது அல்ல. நாளை என்ன நடக்குமோ? இருக்கும் வரை சந்தோஷமாகச் சிரித்து விளையாடிக் கொண்டிருக்க வேண்டும். காதலைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் உனக்குக் கதைகள் சொல்லட்டுமா?'' என்று கேட்டது நீலக் கவர்.

பழுப்புக் கவர் விம்மிக் கொண்டே, ''போதும், போதும்! காதலாம், நல்ல காதல்! ஹா, தெய்வமே!'' என்று சொல்லிவிட்டு மீண்டும் அது தேம்பிப் புலம்பத் தொடங்கிவிட்டது.

அதன் துக்கத்தைக் கண்டு நீலக் கவருக்கு மனம் இளகிவிட்டது. ''உனக்கு என்ன துக்கம்? அதை எங்களிடம் சொல்ல மாட்டாயா?'' என்று அனுதாபத்துடன் கேட்டது ஒன்று.

''துக்கத்தை மனதிற்குள்ளேயே அடக்கி வைத்துக்கொண்டு கஷ்டப்படக் கூடாது. யாரிடமாவது வாய்விட்டுச் சொன்னால்தான் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்'' என்றது மற்றொன்று.

பழுப்புக் கவர் சற்று நேரம் யோசனை செய்துவிட்டுத் தன் கதையைச் சொல்லத் தொடங்கியது:

''ஒரு யுவதி. வயது பதினேழுதான் இருக்கும். பேரழகி. தன் காதலனிடம் என்னை அனுப்பியிருக்கிறாள். இதோ அவள் எழுதியிருப்பதையே படிக்கிறேன் கேளுங்கள்: 'என் ஆருயிர்க் காதலரே, என்னை அடியோடு மறந்துவிட்டீரா? ஐயோ! தூங்காமல் எத்தனை நாள் உங்களைப் பற்றியே நினைத்துக்கொண்டு இருந்திருக்கிறேன்? தங்கள் சுந்தர வதனத்தையும் புன்முறுவலையும் நினைத்த வண்ணம் எத்தனை நாள் சாப்பிடாமல் கூட இருந்திருக்கிறேன்? அன்புடன் தாங்கள் என்னை நோக்கிய நோக்கையும், ஆசையுடன் தாங்கள் என் காதில் கூறிய மொழிகளையும் எத்தனை தடவை நினைத்து நினைத்துப் பார்த்து நான் புளகாங்கிதம் அடைந்திருக்கிறேன்? ஆனால், அதெல்லாம் வெறும் கனவு தானோ என்று இப்போது என் மனதில் ஒரு சந்தேகம் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. எத்தனையோ கடிதங்கள் தங்களுக்கு எழுதினேன். தங்களிடமிருந்து ஒரு வார்த்தை — ஆறுதலாக ஒரு வார்த்தை — வராதா என்று நான் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்தேன். ஆனால் தாங்கள் எழுதவே இல்லை. ஏன் எழுதவில்லை? இதற்குக் காரணம் என்ன? நான் செய்த குற்றம் என்ன? என்னுடைய விண்ணப்பத்துக்குத் தாங்கள் செவி சாய்க்கவில்லை; என் வேண்டுகோளுக்குத் தாங்கள் இணங்கவில்லை. சுற்றத்தார்களும் மற்றவர்களும் என்மீது ஐயங்கொள்ளத் தொடங்கிவிட்டனர். எனக்கு வேண்டியவர்களும் வேண்டாதவர்களும் என்னைப் பற்றி அவதூறாக ஏதேதோ பேசுகிறார்கள். அதையெல்லாம் கேட்க எனக்கு எவ்வளவு அவமானமாயிருக்கிறது? ஆனால், இன்னும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. தாங்கள் ஒரு நாளும் என்னைக் கைவிட

மாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அந்த நம்பிக்கையால் நான் இன்னும் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன். நாட்களும் மாதங்களும் ஒன்றன் பின் ஒன்றாக ஓடிக் கொண்டிருக்கின்றன. நானும் காத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் எவ்வளவு காலம்தான் காத்துக் கொண்டிருப்பது? நான் பெண் அல்லவா? என் அன்பே, வாரும்! சீக்கிரமாக வாரும்!—இதுதான் நான் கடைசியாக எழுதும் கடிதம். தாங்கள் உடனே வரா விட்டால்......''

வெளியே காலடிச் சத்தம் கேட்டது. பழுப்புக் கவர் கதையை நிறுத்திவிட்டு உற்றுக் கவனித்தது.

ஊதாக் கவர் பழுப்புக் கவரைப் பார்த்து, ''அப்புறம்? பாக்கியைச் சொல்!'' என்றது.

பழுப்புக் கவர் விம்மத் தொடங்கியது.

''சீக்கிரம்!'' என்று அவசரப் படுத்தியது நீலக் கவர்.

பழுப்புக் கவர் தன் கண்ணைத் துடைத்துக் கொண்டு, ''அவளுக்கு இப்போது ஒன்பது மாசம். அந்த வாலிபன் அவளுக்கு ஆசை காட்டி ஏமாற்றி விட்டானோ என்னவோ? இப்போது அவன் பதில் எழுதா விட்டால்......' என்று சொல்லி முடிப்பதற்குள் வெளியே தபால் பெட்டியைத் திறக்கும் சத்தம் கேட்டது.

''ஐயோ, அவன் தூக்குப் போட்டுக் கொண்டு செத்துப் போய்விடுவானே!'' என்று ஓலமிட்டது பழுப்புக் கவர்.

தபால் பெட்டிக்குக் கீழ் இருக்கும் துவாரம் திறந்தது. குளிர் காற்று அதற்குள்ளே புகுந்தது. அங்கு கிடந்த கடிதங்களை மூலைக்கொன்றாகத் தள்ளியது

தபால்காரன் கையை உள்ளே விட்டு அந்தக் கடிதங்களை யெல்லாம் எடுத்து, வெறுப்புடன் அவற்றை நோக்கினான். ''பூ. இவ்வளவுதானா? இதற்காக நான் இவ்வளவு தூரம் மழையில் நனைந்து வர வேண்டியதாய்ப் போச்சு!'' என்று சொல்லிவிட்டு, அலட்சியமாக அவற்றைத் தன் பையில் போட்டுக் கொண்டு வேகமாக நடந்தான்.

மழை விடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது.

---

# தோற்றுப் போனார்!

**வ**ங்காளத்தில் நவகாளி ஜில்லாவில் வயலுக்கு நீர் பாய்ச்சும் வாய்க்கால்கள் குறுக்கும் நெடுக்கும் அதிகமாகக் காணப்படும். அந்த வாய்க்கால்களைக் கடந்து போவதற்காக அவற்றின் மேல் மூங்கில் பாலங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அந்த மூங்கில் பாலங்களின் மீது நடந்து போவதற்கு நிரம்ப சாமர்த்தியமும் அனுபவமும் வேண்டும்.

காந்திஜி அமைதியை ஏற்படுத்துவதற்காக நவகாளி ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது ஸ்ரீராம்பூர் என்னும் ஊரில் ஒரு மாத காலம் முகாம் போட்டிருந்தார். அப்போது மூங்கில் பாலத்தின் மீது கைக் கோலை ஊன்றிக்கொண்டும் கைக்கோல் இல்லாமலும் நடந்து நடந்து பழகிக்கொண்டாராம். பண்டித ஜவாஹர்லால் நேருவும் இன்னும் சிலரும் மகாத்மாஜியிடம் அரசியல் சம்பந்தமாக அந்தரங்க ஆலோசனை செய்வதற்காக அப்போது ஸ்ரீராம்பூருக்குச் சென்றிருந்தார்கள். காந்திஜி மூங்கில் பாலத்தில் நடந்து செல்லும் வித்தையை நேருஜிக்குக் காட்டினார். ஜவாஹர்லால்ஜி அதைப் பார்த்துவிட்டு, "பூ, இவ்வளவுதானா?" என்பதைப் போல் சிரித்தார்.

காந்திஜி ஜவாஹரைப் பார்த்து, "தாங்கள் நினைப்பதுபோல இது அத்தனை சுலபம் இல்லை. நடந்து பார்த்தால்தான் தெரியும்" என்றார்.



உடனே ஜவாஹர், "இதோ பாருங்கள்" என்று கச்சத்தைக் கட்டினார். கைச் சட்டை விளிம்புகளை மடக்கி விட்டுக் கொண்டார். சட்டென்று பாய்ந்து அந்த வாய்க்காலை ஒரே தாண்டாகத் தாண்டிக் காட்டினார்.

இதைப் பார்த்த மகாத்மாஜி மூக்கின்மேல் விரலை வைத்து மிக்க ஆச்சரியப்பட்டார்.

# வட்ட மேஜை

## ★ எந்நாளும் தமிழர்களுடையதே!

சில காலமாகப் பாஷாவாரி மாகாண அமைப்புப் பேச்சு நடப்பதும் சென்னைப் பிரதேசத்தை ஆந்திர தேசம் என்று பிரித்துவிட இருப்பதும் அன்பர்கள் அறிந்தவை. எனினும் ஆந்திர உறுப்பினர்களில் சிலர் சென்னை நகர் தங்களுடையதெனச் சொந்தம் கொண்டாடுகின்றனர். தமிழர்கள் "வடவேங்கடந் தென்குமரி ஆயிடை" என்பதை ஆதாரம் கொண்டு சென்னை தங்களுடையது என்பதைச் சர்வ நிச்சயமாகக் கருதுகின்றனர். இந்திய மத்திய சர்க்கார் சென்னையை ஆந்திரர் கேட்டல் அடாதெனத் தெரிவித்திருந்தும், ஆந்திரர்களுடைய கொந்தளிப்பு அடங்காது நீட்டி வருவதால், தமிழர் கருத்தைத் தக்க இலக்கியச் சான்றுகளால் வலியுறுத்தல் பொருத்தமாகத் தெரிகிறது.

சென்னை நகரம் இப்போதுள்ளபடி அமைய ஆரம்பித்தது சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்புதான். அதற்கு நெடுங்காலம் முன்பாகவே இவ்விடத்தில் மயிலாப்பூர், திருவொற்றியூர் என்னும் சிவஸ்தலங்களும் திருவல்லிக்கேணி திருநீர்மலை என்னும் வைஷ்ணவத் திருப்பதிகளும் சிறப்பாக விளங்கி வந்தன. இவற்றை நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம் திருப்பாடல்களால் சிறப்பித்துள்ளனர். எனவே, இவ்வூர்கள் இப்பெரியார்கள் காலத்துக்கு நீண்ட காலத்துக்கு முன்பே, பிரசித்தி பெற்றிருந்தன என்பது விளங்கும்.

மேலும் திருக்குறள் ஆசிரியராக உலகம் புகழும் திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன் மயிலாப்பூரில் வாழ்ந்து வந்தார். அவர் சமாதி இன்றும் உள்ள கோவிலாகத் தமிழர்களால் வணங்கி வழிபாடுகள் செய்யப்பட்டு விளங்குகிறது.

இவை நிற்க: இற்றைக்குச் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன், இங்கு விநாயக புராணம் என்னும் அரிய பெரிய தமிழ்ச் செய்யுள் நூல் பூக்கடைப் பிரசன்ன விநாயகர் சந்நிதியில் அரங்கேறியது. இதனை ஆக்கிய கச்சியப்ப முனிவர் திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச் சிவஞான சுவாமிகளின் மாணவர். அம்மடத்தில் பெருநிலை பெற்ற பெருந்துறவியுமாவர். இவர் காஞ்சி, தணிகை, ஆனைக்கா, பேரூர் என்னும் சிவஸ்தலங்களுக்குப் பல்லாயிரம் பாடல்களில் தனித்தனி புராணம் பாடிய மகா கவி. இவற்றைப் போலவே இவர் இயற்றிய விநாயகபுராணமும் 6000க்கு மேற்பட்ட அருந்தமிழ்க் கவிகளையுடைய பெருமையுடையது. இதன் நகரப் படலத்தில் அப்போதைய சென்னை நகரம் சிறப்பிக்கப் பட்டுள்ளது. முனிவர் சென்னையை,

"பார்மகள் முகமே யாகும் பழமுத் தமிழ்ச்சோ ணாடு
சேர்வுறு முகமே யாகும் துலக்கிய தொண்டை நாடு
சீர் வளர் திலக மேயாம் சென்னையா நகரம் மாதோ"

என்று வருணிக்கிறார். இங்ஙனம் புவிமடந்தைக்கு முத்தமிழ்நாடு முகமாக, தொண்டை நாடு நெற்றியாக, சென்னை அந்நெற்றியின் திலகமாகத் திகழ்ந்தது அக்காலத்தில் என்று தெரிய வருகின்றது. இச்சென்னையின் மீது ஆந்திரர்கள் பாத்தியம் கொண்டாட முன் வருதல் எங்ஙனம் பொருந்தும்?

அந்நாள் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஒரு தெலுங்குச் சிற்றரசன் வியாபார வசதிக்காக இதை வழங்கினான் என்னும் ஒரு காரணம் சென்னை தெலுங்கருக்குச் சொந்தமாகி விடுமா? ஏன்? மதுரையிலும் திருச்சியிலும் தெலுங்கர் அரசாட்சி ஓரோருகால் நடந்த காரணத்தால் இத்தமிழ் நகரங்களையும் அவர்கள் கேட்கலாமே? தமிழரும், கலிங்க தேசம் வரைத் தங்களுடையதென்பதற்கு இத்தகைய காரணத்தைக் கற்பிக்கலாமே! இது எவ்வளவு பொருந்தாக் கூற்றோ அவ்வளவு பொருந்தாததாகும் ஆந்திரர் சென்னையைத் தமதென்பதும்.

திருக்காட்டுப் பள்ளி, 21-9-49

திராவிடக் கவிமணி
வே. முத்துசாமி ஐயர்

○●○

## பாக்கு

தென்னாட்டில் மலையாளம், திருவாங்கூர், மைசூர், முதலிய இடங்களிலும், வங்காளத்திலும், அஸ்ஸாமிலும் பாக்கு பயிரிடப்பட்டு வருகிறது. பாக்கு உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் அதன் தரத்தை உயர்த்துவதற்காகவும் இந்திய சர்க்கார் மத்திய பாக்குக் கமிட்டி ஒன்றை அமைத்திருப்பது வரவேற்கத் தக்கது. நமது நாட்டில் போதுமான பாக்கு விளைவில்லாத காரணத்தினால், இலங்கை, மலாயாவிலிருந்து தருவிக்கப்படுகிறது. கப்பலேறி அதிகமாகவும் அது மலிவான விலைக்குக் கிடைக்கிறது. திருவாங்கூர் பாக்கு சொக்கியமென்பதனாலேதான், அதன் விலை அதிகம். அதன் நிறம், மணம், குணம் போன்றவைகளை அறிந்து அதிக விலைக்கும் பாமரரும் வாங்கி வெறுப்பில்லாமல் ஏராளமாக உபயோகிக்கிறார்கள். உற்பத்தி அதிகமானால் வெளிநாடுகளிலிருந்து பாக்கு வருவது தானாகவே நின்றுவிடும். இறக்குமதியாகும் பாக்கு நயமானதல்ல. சர்க்கார் அனாவசியமாக இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதோ அல்லது ஒரு பொருத்தமற்ற அதிக வரியைக் குறிப்பிடுவதோ விரும்பத் தக்கதல்ல. அவ்வாறு செய்தால், உள்நாட்டு நயம் சரக்கின் விலை ஏறும். ஏழை மக்கள் வாங்கி உபயோகிக்க இயலாது. சரக்குத் தேங்க ஆரம்பிக்கும். உற்பத்தித் தடைப்படும். ஆகவே பாக்கு இறக்குமதி பற்றி இப்போதிருக்கும் நிலைமை நீடித்து வருவதுதான் நல்லது.

மதுரை
5—9—49

கங்காராம் துரைராஜ்

○●○

## கனா எடுத்தும் பார்க்க வேண்டாம்!

'கல்கி'யின் 'வாழ்க, நாகரிகம்' என்ற கட்டுரையைப் படித்தது முதல் தங்களுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும் என்று ஆவல். சேலத்தில், கோதுமை கொடுத்ததைக் குறித்து முன்பெல்லாம் கேலி செய்து தென்னிந்தியத் தமிழ்ப் பத்திரிகைகளில் விகடத் துணுக்குகள்

வெளிவருவது வழக்கம். அவற்றைப் படிக்கும் பொழுதெல்லாம் நம் மனிதர்களின் அறியாமையை நினைந்து எனக்குச் சிரிப்பு வரும். இங்கு எல்லோரும்—தமிழர்களும் கூடத்தான்! கோதுமையை மிகவும் சந்தோஷமாகவே உண்கிறார்கள். கோதுமை மாவால் ரொட்டி, பரோட்டா, பூரி, லட்டு ஹல்வா, இன்னும் எவ்வளவோ விதமான பக்ஷணங்கள் செய்யலாம். இவ்விடம் பாஜ்ரா (கம்பு) தானியத்திலும் ரொட்டி, வெண்பொங்கல் முதலியவை செய்து சாப்பிடுகிறோம். சோளத்தையும் அதேபோல் உடைத்துப் பொங்கல் செய்வது உண்டு. கேழ்வரகு, கம்பு முதலிய தானியங்களைச் சாப்பிடுவதற்கு ராஜாஜிதான் சொல்லிக் கொடுக்கவேண்டு மென்பதில்லை. நமது முன்னோர்கள் இந்த தானியங்களை உபயோகித்திருக்கிறார்கள். எங்கள் பாட்டி கேழ்வரகு அடை, கம்பு வடை முதலிய பக்ஷணங்கள் செய்தால் நாங்கள் ஒவ்வொருவரும் ஐந்து ஆறு என்று போட்டி போட்டுக் கொண்டு தின்றிருக்கிறோம். எப்பொழுதும் இவைகளைத் தான் உண்ண வேண்டும் என்பதில்லை. போதாத அரிசி உணவைச் சரிக்கட்ட இவைகளை உபயோகிக்கலாம் அல்லவா? ஆட்டா, மைதா, ரவை, முதலியவை ரேஷனில் கிடைக்கின்றன. இவைகளைப் பக்குவமாகச் சமைத்து உண்பதற்குப் பழகிக் கொண்டால், கள்ள மார்க்கெட் அரிசியைக் கண் எடுத்தும் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படாது.

கல்கத்தா
14—9—49 லக்ஷ்மி

○●○

## ★ மரவள்ளியின் மகிமை

மேற்படி தலைப்புடன் சென்ற ஆகஸ்டு மாதம் 28-ந் தேதி 'வட்ட மேஜை'யில் வெளியான கடிதத்தில் மரவள்ளிக் கிழங்கின் மகிமையைப் பற்றி எழுதியிருந்ததைக் கண்ணுற்றேன். எழுதியிருந்த விஷயங்கள் யாவும் அநுபவ உண்மைகளாகும்.

இங்கு இலங்கையில் மரவள்ளிக் கிழங்கைப் பற்றி மிக நன்றாக எல்லோருக்கும் தெரியும். கடந்த சில வருஷங்களாக அரிசித் தட்டுப்பாட்டைச் சமாளித்து இலங்கை மக்களை இன்னல்களிலிருந்து காப்பாற்றியவை மரவள்ளிக் கிழங்கும் வாழைக் காய்களும் என்பதை இந்திய சகோதரர்கள் கேள்விப்பட்டால் ஆச்சரியம் அடைவார்கள். மேற்படி இருவகை ஆகாரங்களையும் இங்கு சிங்களவர், தமிழர், சோனகர் முதலிய எல்லா வகுப்பாரும் ஏழை, தனவந்தர், தொழிலாளி, முதலாளி, சிறியோர் பெரியோர், ஆண், பெண் என்ற பேதமின்றிச் சகலரும் சாப்பிடுகின்றனர். ஏழைகளில் சிலர் இக் கிழங்கையோ வாழைக்காய் உணவையோ ஒருவேளைக்கும், அரிசிச் சாதத்தை மற்றொரு வேளைக்குமாகச் சாப்பிட்டுக் காலந்தள்ளி வருகின்றனர். அதனால் அவர்களுக்கும் வாழ்க்கைச் செலவைக் குறைத்துக் கொள்வதற்கு வசதியாயிருக்கிறது.

ஆகவே இந்தியாவிலும் மரவள்ளிக் கிழங்கை எல்லா இடங்களிலும் பயிர் பண்ணச் செய்து உணவாக்குவது மிகவும் பயன்தரக் கூடியதாகும். மரவள்ளியைப் பயிரிடுவது அவ்வளவு கடினமானதல்ல. அரை அடி நீளமுடைய மரவள்ளிக் குச்சித் துண்டுகளைச் சாய்வாய் நாட்டிப் புதைத்துவிட்டால் போதும். வறண்ட பிரதேசங்களில் குச்சிகள் தழையும் வரை சிறிது தண்ணீர் விட வேண்டும். மற்றபடி அதற்கு அதிக உழைப்புத் தேவையிராது.

இந்தக் கிழங்கை இலங்கையில் சமைத்துச் சாப்பிடும் முறை சர்வ சாதாரணமானது. கிழங்கைத் தோல் உரித்துவிட்டுச் சிறு துண்டுகளாக நறுக்கித் தண்ணீரில் போட்டு நன்றாக வேகவிட வேண்டும். வெந்தபின் நீரை வடித்துவிட்டு உப்புத் தெளித்துக் குலுக்கி எடுத்துக் கொள்ளவேண்டும். பின்னர் மிளகாய் கிள்ளிப் போட்டு எண்ணெயில் தாளிதம் செய்து கிளறி எடுத்துக்கொண்டு சாப்பிட வேண்டியதுதான். மிக ருசியாயிருக்கும். அத்துடன் தேங்காய்த் துருவலும் கொஞ்சம் கலந்து கொள்ளலாம்.

மரவள்ளிக் கிழங்கு வயிற்றுக்கும் கெடுதல் பண்ணாமல் ஜீரணமாவதற்கும் எளிதாயிருக்கும். கிழங்கு பயன்படுவது போலவே கிழங்கின் தோலும், உலர்த்தி எடுத்து வைத்துக் கொண்டால், வறுவல் போலப் பொரித்துச் சாப்பிட உதவும். இக் கிழங்கை மாவாக்கி வைத்துக் கொண்டால் பலவித சிற்றுண்டிப் பதார்த்தங்களையும் செய்து சாப்பிடலாம்.

மாத்தளை
7—9—49 அருணேசர்

○●○

## எப்படிச் செய்வது?

சென்ற வாரக் "கல்கி" இதழில் எட்டயபுரத்தில் பாரதி விழா என்ற கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன். ஆட்டா தொக்கடி, புன்செய் தானிய மிக்சர் இவை இரண்டும் எப்படிச் செய்வது என்பதை விவரமாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொண்டமாநத்தம்
20—9—49 எஸ். சங்கரபார்வதி

[சோளமாவுடன் போதுமான அளவு சர்க்கரையைக் கலக்க வேண்டும். நல்ல வெண்ணெய் விட்டு மாவை நன்றாகப் பிசைந்து அகலமான தட்டில் சமமாகப் பரப்பி அடைபோல் தட்டவேண்டும். பிறகு, சின்னச்சின்ன முக்கோணத் துண்டங்களாக வெட்டி எடுத்து நெய்யில் போட்டுப் பொன்னிறமாக வறுத்து எடுப்பதற்குத்தான் 'ஆட்டா தொக்கடி' என்று சொல்லுவது. சோளம் உளுந்து, பயறு கடலை முதலிய தானியங்கள் எல்லாவற்றையும் தனித்தனியாக நெய்யில் வறுத்து ஒன்றாகச் சேர்த்து உப்பு காரம் முதலியவைகளைப் போதுமான அளவு சேர்த்துத் தாளித்துக் கலந்துவிட்டால் புன்செய் தானிய மிக்சர் ஆகிவிடும். — ஆசிரியர்]

○●○

## தேசிய சேமிப்புத் திட்டம்

தேசிய வளர்ச்சித் திட்டங்கள் பல ஆரம்பிக்கவும் உயர்ந்து கொண்டே போகும் விலைவாசிகளைத் தடுக்கவும் நம் அரசாங்கத்திற்கு உதவி புரியவும் சேமிப்பு மிகவும் அவசியம். பெரிய பெரிய அணைத் திட்டங்கள் கையில் இருந்தபோதிலும் அவைகளை நிறைவேற்ற நாட்டின் பொருளாதாரம் அனுமதிக்காவிடில் அவைகளை நிறைவேற்ற தேசிய சேமிப்புத் திட்டம் மிகவும் உபயோகமாக இருக்கும். இந்தியாவின் உண்மைப்

---

★ வட்டமேஜை பரிசுத் தொகை ரூ 25ஐ எந்நாளும் தமிழர்களுடையதே! என்ற கடிதம் எழுதிய ஸ்ரீ வே. முத்துசாமி ஐயருக்கும், மரவள்ளியின் மகிமை என்ற கடிதம் எழுதிய மாத்தளை ஸ்ரீ அருணேசர் அவர்களுக்கும் ரூ. 12-8-0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

பிரஜைகள். நாட்டின் நன்மையைக் கருதும் பிரஜைகள். தங்களால் முடிந்தவரை அநாவசியச் செலவுகளையும், ஆடம்பரச் செலவுகளையும் குறைத்துக் கொண்டு தங்கள் வருமானத்தில் ஒரு பங்கைக்கொண்டு மாதா மாதம் ஒரு சிறு தொகைக்காவது தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வாங்கவேண்டும். இம்மாதிரிச் செய்வதனால் குடும்பத்தின் எதிர்கால நன்மைக்கு அது பயன் படுவதுடன் நாட்டின் நன்மைக்கும் அவர்கள் தங்கள் கடமையைச் செய்ததாக ஆகும்.

சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்பதைப்போல் முப்பது கோடி மக்கள் இருக்கும் இந்நாட்டில் ஒவ்வொருவரும் கொஞ்சம் கொஞ்சமாகச் சேமித்தால் அது எவ்வளவு பெரிய தொகையாகும் என்று சற்றுக் கவனிக்க வேண்டும்.

நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றவும், நாடு செழிக்கவும், கல்வியைப் பெருக்கவும், இந்தியாவை மிகவும் பலம் பொருந்திய நாடாக்கவும், ஒவ்வொரு சுதந்திர இந்தியப் பிரஜையும் நாட்டிற்கு எவ்வளவோ கடமைகள் செய்யவேண்டியிருக்கின்றது. அவைகளில் மேலே சொன்ன சேமிப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதும் ஒன்று.

மதுரை
6—9—49

டி. எஸ். ரங்கசாமி

○●○

## தடை நீங்குமா?

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மாணவர்களாகிய எங்களுக்கு இந்த வருஷம் கல்லூரிக்கு வந்ததும் ஒரு திடுக்கிடும் செய்தி காத்திருந்தது. அந்தச் செய்தி மருத்துவக் கல்லூரிகளில் மொழிவாரிக் கழகங்கள் இனி அனுமதிக்கப்பட மாட்டாது என்பதுதான். எங்கள் கல்லூரியில் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று கழகங்கள் மொழியின் அடிப்படையில் சிறந்த முறையில் செயலாற்றி வந்தன. இந்தக் கழகங்களால் மாணவர்களாகிய எங்களுக்குள் கலாசாரப் பற்றும் மொழிப் பற்றும் ஓங்கி வளர்ந்ததே தவிர பிணக்கோ மொழிப் போராட்டமோ எழுந்தது கிடையாது.

இக் கழகங்களில் நமது மந்திரிமார்களும் சொற்பொழிவாற்றியதுண்டு. உதாரணமாக, சென்ற ஆண்டு தமிழ்க்கழகத்தில் கனம் பக்தவத்ஸலம் அவர்களும், கனம் ராஜன் அவர்களும் சொற்பொழிவாற்றியிருக்கிறார்கள். தெலுங்கு கழகத்தைக் கனம் சீதாராம ரெட்டியார் வந்திருந்து கௌரவித்திருக்கிறார். சட்ட விரோதமான முறையில் சென்ற ஆண்டு இந்தக் கழகங்கள் நடந்திருந்தால் மந்திரிகள் வந்திருக்க முடியாது என்பது கண்கூடு. இவைகளை யெல்லாம் அறிந்தோ அறியாமலோ முன்னாள் சுகாதார அமைச்சராயிருந்த ரெட்டி அவர்கள் கழகங்களுக்குத் தடை விதித்துவிட்டார்கள். இந்த வருஷம் செப்டம்பர் 8-ந் தேதியன்று நடந்த எங்கள் கல்லூரி விழாவிற்கு வந்திருந்த கனம் ராஜன் அவர்களிடம் இந்தத் தடையை நீக்கவேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கிறோம். எங்கள் கல்லூரித் தலைவர் அவர்களும் கழகங்கள் நடப்பதில் தவறில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார். எனவே தாய் மொழியாம் தமிழில் தனி வேட்கை கொண்ட நமது சுகாதார அமைச்சர் கனம் ராஜன் அவர்கள் இந்தத் தடையை உடனே நீக்குவார் என்று எதிர்பார்க்கிறோம்.

சென்னை
14—9—49

சிவ. சங்கரன்

★ ★ ★

## ● ● ● ● ● பம்பாயில் அரியக்குடி ● ● ● ● ●

தமிழ் நாட்டுச் சங்கீதத்தில் பம்பாயிலுள்ள தமிழர்களுக்கு அபார அபிமானம் என்பது கல்கி வாசகர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

எப்படியாவது அரியக்குடி ராமானுஜய்யங்காரின் பாட்டைக் கேட்டு விடுவது என்று அவர்கள் அநேக ஆண்டுகளாகப் பிரயத்தனப்பட்டு வந்தார்கள். அய்யங்காரின் சங்கீதத்தை ரேடியோவிலும் கேட்க முடிவதில்லையல்லவா? அவரும் இங்கு வராமலேயே சுமார் பத்து வருஷங்களாகப் பம்பாய்த் தமிழர்களின் ஆர்வத்தை அதிகமாக்கி வந்தார். கடைசியாக, 1949-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் தேதியாகிய சுபதினத்திலே அந்த பாக்கியம் கிட்டியது.

"அரியக்குடி பந்தா," "அரியக்குடி பாணி," என்று முத்திரை போட்ட, கடைசல் பிடித்த சங்கீதம், பாப்பா பிடில், மணி மிருதங்கத்துடன், ஆரம்பம் முதல் மேளம் கட்டி. ஜம் ஜம் என்று வெளிவந்து, மகாஜனங்களின் காதை நிரப்பி ஆனந்த பரவசமாக்கியது.

பழைய கமகம் குன்றவேயில்லை: அதே சரளம். தலையை ஆட்டுவதிலும் ஒரு ஏற்பாடு. ஒரேயடியாய்ச் சாய்ந்து விடுவதோ, படுத்து விடுவதோ யில்லை.

அபூர்வ ராகங்கள், அபூர்வ பிடிகள் என்று பாடி ஜனங்களைத் திணற அடிக்காமல், பெரிய ரக்தி ராகங்கள், கர்நாடக சங்கீதத்தின் ஜீவநாடிகளான சில பழைய கீர்த்தனங்கள், இவற்றின் மூலமாகவே அமிர்தவர்ஷம் பொழிந்தார். காம்போதி ராகம், ஸ்ரீ சுப்ரமண்யாய கீர்த்தனம், சாதிஞ்சனே கீர்த்தனம், பைரவி ராகம், வலசி தாவில் விருவிருப்பான கிருதி—இப்படி அடுக்கடுக்காய் விளம்பத்தில் ஒன்று, துரிதத்தில் ஒன்று பாடி, சங்கீதத்துடன் இங்கிதத்தைக் கலந்து, எங்களைக் குதூகலமடையச் செய்தார்.

ஆங்கில இலக்கிய உலகில் பெர்னார்ட்ஷா போல, நமது சங்கீதத்தில் அரியக்குடி வயதிலும் மங்காத ஒளியாய் விளங்குவது நமது பாக்கியமேயன்றோ?—டி.வி.ஆர்.

# நாற்று நடும் மந்திரிகள்

ரஜனி

கொழும்பு, செப். 18உ

கொழும்பு தமிழ்ச் சங்கத்தினர் வைச மங்கையர்க் கழக மண்டபத்திலே ஸ்ரீ வி. ஏ. கந்தையா தலைமையில் பாரதி விழாவை சிறப்பாகக் கொண்டாடினார்கள். பாரதி ஜாதி மத பேதமறியாத சர்வ சமரச சன்மார்க்கக் கவிஞரென்றும், "அல்லா! அல்லா!" என்ற பாட்டில் இஸ்லாத்தின் பெருமையையும் அவர் பாடியிருக்கிறாரென்றும் ஸாஹிராக் கல்லூரி பிரின்ஸ்பால் ஜனாப் ஏ.எம்.ஏ. அஸீஸ் சொன்னார். கொக்குவில் இந்துக் கல்லூரி சங்கீத ஆசிரியையாக இருக்கும் செல்வி என். என். சரஸ்வதியின் பாரதி பாடல்கள் கச்சேரி பிறகு நடைபெற்றது.

## தோட்டங்கள்தோறும் சர்க்கா

தோட்டங்களிலுள்ள இந்தியத் தொழிலாளர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை நூல் நூற்றல், கதர்த் துணி நெய்தல், சிறிய குடிசைத் தொழில்களில் ஈடுபடுதல் ஆகியவற்றில் செலவிட இலங்கை இந்திய காங்கிரஸ் ஒரு திட்டம் வகுத்திருக்கிறது. அகில பாரத சர்க்கா சங்கத்திலிருந்து இரண்டு நிபுணர்கள் கூடிய சீக்கிரம் இலங்கைக்கு வந்து தொழிலாளருக்கு நூல் நூற்புப் பயிற்சியளிக்கப் போகிறார்களென்றும், வெகு சீக்கிரத்தில் மகாத்மாவுக்குப் பிரியமான சர்க்கா தோட்டங்கள்தோறும் சுழன்று கொண்டிருக்குமென்றும் காங்கிரஸ் கூட்டுப் பொதுக் காரியதரிசி ஸ்ரீ கே. ஜி. எஸ். நாயர் ஒரு கூட்டத்தில் பேசியபோது சொன்னார்.

## நாற்று நடும் வைபவம்

இலங்கை அரசாங்கம் உணவுப் பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இது வரையில் எத்தனையோ கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது. இலங்கையில் உணவுப் பொருள் இறக்குமதிக்காக இன்னமும் 50 கோடி ரூபாய் வருடந்தோறும் செலவிட வேண்டியிருக்கிறது. சர்க்கார் உணவுப் பொருள் உற்பத்திக்குச் செலவிட்ட பணத்தில் ரூபாய்க்கு ஒரு மணி நெல் விளைவதாயிருந்தால்கூட இலங்கையின் உற்பத்தி ஏற்றுமதி செய்யும் அளவிற்குப் பெருகியிருக்க வேண்டும்! துரதிர்ஷ்டவசமாகச் சிங்களவர்களுக்கு நெற் சாகுபடியில் பயிற்சியோ அல்லது ஊக்கமோ இராததே மேற்படி நிலைமைக்குக் காரணம் எனலாம்.

நாற்றுப் பிடுங்கி நட்டால்தான் அதிக நெல் விளையுமென்பதைத் தென்னிந்தியாவில் ஒவ்வொரு குழந்தையும் நன்கறியும். இலங்கையிலோ நாற்றுப் பிடுங்கி நடுவது ஒரு பெரிய அதிசயமாகவும் புதுமையாகவுமிருக்கிறது. ஒரு நெல் வயலில் பிரதம மந்திரி சேனநாயகாவும் இன்னொரு நெல் வயலில் பொக்கிஷ மந்திரி ஸ்ரீ ஜயவர்த்தனாவும் நாற்றுப் பிடுங்கி நடும் வைபவங்களைச் சென்ற வாரம் ஆரம்பித்து வைத்தார்கள். அதை நூற்றுக்கணக்கான ஜனங்கள் அதிசயத்துடன் வேடிக்கை பார்த்தனர். விவசாய டைரக்டர் பதவியை நெல் விளையாத நாட்டைச் சேர்ந்த வெள்ளைக்காரர்கள் நீண்டகாலமாக வகித்து வருவதின் பலன் இதுதான்!

இலங்கை இந்திய காங்கிரஸ் காரியதரிசிகளில் ஒருவரான ஸ்ரீ கே. சுப்பையா நீக்

### வேண்டாம் அந்தப் பதவி!

அகில இந்திய ஆதாரக் கல்விச் சங்கத்தின் காரியதரிசியாக இருப்பவர் ஸ்ரீ அரியநாயகம் என்னும் யாழ்ப்பாணத் தமிழர். அவர் ஆதாரக் கல்வித் துறையில் அதிகப் பயிற்சி பெற்றவர். அவரை சில மாகாணப் பிரதம மந்திரிகள் தங்கள் மாகாணங்களுக்கு வந்து கல்வி இலாகா டைரக்டர் பதவியை ஏற்று நடத்தும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள். இந்தச் செய்தி காந்திஜிக்கு எட்டியது. அவர் ஸ்ரீ அரியநாயகத்தைப் பார்த்து, "நீ என்னுடன் இருந்து ஆதாரக் கல்வி நடத்துவது அவர்களுக்கு முள் குத்துவது போலத் தொந்தரவாக இருக்கிறது. உன்னைப் பிடித்துச் சர்க்கார் வேலையில் நியமித்து விட்டால் அவர்களுக்கு வழிகாட்ட யாரும் இருக்கமாட்டார்கள்; ஆதாரக் கல்வியும் நடக்காது அல்லவா!" என்று தமாஷாகச் சொல்லிவிட்டு அந்தப் பதவியை ஏற்கவேண்டாமென்று ஸ்ரீ அரியநாயகத்திடம் சொல்லிவிட்டார்.

கொழும்பு பீடித் தொழிலாளர்களின் கூட்டத்தில் பேசிய பொழுது, ரப்பர் தோட்டங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கில் வேலை நீக்கம் செய்யப்படும் இந்தியத் தொழிலாளர்களுக்கு நெற் சாகுபடியில் ஈடுபட அரசாங்கம் சந்தர்ப்பமளிக்குமானால் உணவுப் பஞ்சம் தீர வழி பிறக்கும் என்று ஓர் அருமையான யோசனை சொன்னார். தென்னிந்தியத் தமிழ்த் தொழிலாளர் விவசாயத்தில் கை தேர்ந்தவர்கள். இலங்கை அரசாங்கம் குறுகிய மனப்பான்மையை விட்டு விட்டு அவர்களை விவசாயத்தில் ஈடுபடுத்த முன் வருமானால், நாட்டின் உணவுப் பஞ்சம் தீருவதோடு ரப்பர் தோட்டங்களிலிருந்து பல்லாயிரக் கணக்கானவர்கள் திடீர் திடீரென்று டிஸ்மிஸ் செய்யப்படுவதால் ஏற்படும் விபரீதமான நிலைமைக்கும் பரிகாரம் ஏற்படும்.

## கவனிக்க வேண்டும்

இலங்கை இந்தியர்களின் இந்தியாவிலுள்ள குடும்பங்கள், சென்னை மாகாண அரசாங்கத்தினால் இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ வி. வி. கிரிக்கு அனுப்பப் பட்டிருக்கும் ஒரு கடிதத்தை முக்கியமாக கவனிக்க வேண்டும். இந்தியர்கள் இந்தியாவிலுள்ள குடும்பங்களுக்குப் பணம் அனுப்புவதாயிருந்தால் செலாவணி இலாகாவினால் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கும் 29-ம் நம்பர் பாரத்தில் இந்திய ரெவின்யூ அதிகாரியொருவரின் ஒப்பம் வாங்கிக் காட்ட வேண்டுமென்பது சட்டம். இந்த 29-ம் நம்பர் பாரத்தில் இந்திய குடும்பங்களுக்கு இந்தியாவில் வேறு வருமானமில்லையென்பதை ரெவின்யூ அதிகாரி 'சர்டிபை' செய்வதாக எழுதப் பட்டிருக்கிறது. இந்த பாரத்தில் பன்னிரண்டு அணா இந்திய கோர்ட் முத்திரை ஒட்டிக் கொண்டு வந்தால்தான் சில ரெவின்யூ அதிகாரிகள் கையெழுத்துப் போடுகிறார்கள். இலங்கையில் இந்திய கோர்ட் முத்திரைகள் இல்லை. ஆகையால் இங்கிருந்து நேராக பாரத்தை ரெவின்யூ அதிகாரிக்குத் தபாலில் அனுப்புகிறவர்கள் கோர்ட் முத்திரை ஒட்டி அனுப்புவதற்கில்லை. முத்திரையில்லையென்று சொல்லி ஆயிரக்கணக்கான பாரங்கள் திரும்பி வருகின்றன. இது சம்பந்தமாக சென்னை மாகாண சர்க்கார் அனுப்பியுள்ள ஒரு கடிதத்தில் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளனர்:—

பன்னிரண்டு அணா முத்திரை ஒட்ட வேண்டுமென்பதை விட்டுக் கொடுக்க முடியாது. 29—ம் நம்பர் பாரத்தை இலங்கை இந்தியர்கள் நேராக ரெவின்யூ அதிகாரிகளுக்கு அனுப்பினால் அதில் முத்திரையில்லையென்பதற்காக பாரத்தைத் திருப்பி யனுப்ப மாட்டார்கள். பாரத்தைப் பற்றி விசாரணை நடத்தும் பொழுது இந்தியாவிலுள்ள குடும்பத்தினிடமிருந்து பன்னிரண்டு அணா வசூலித்துக் கொள்ளுவார்கள். எல்லோரும் அவர்களுடைய பகுதி தாசில்தாருக்குத்தான் பாரத்தை அனுப்ப வேண்டுமே தவிர ரெவின்யூ அதிகாரிக்கோ அல்லது கலெக்டருக்கோ நேராக அனுப்பக் கூடாது.

படித்துப் பார்!

# குங்குமம்

காந்தி மகாத்மா உப்பு சத்தியாக்கிரஹம் செய்வதற்காகப் பிரசித்திபெற்ற டாண்டி யாத்திரை கிளம்பியபோதும், மற்றும் ஒவ்வொரு தடவையும் சிறைக்குப் புறப்பட்டபோதும், தாய்மார்கள் அவருடைய நெற்றியில் குங்குமத் திலகம் இட்டு அனுப்பி வைத்தார்கள் என்பதை நாம் அறிவோம். "குங்குமம்" என்னும் அழகிய மாதப் பத்திரிகையின் புரட்டாசி இதழ் தன்னுடைய முதலில் காந்தி மகாத்மாவைத் திலகமாக வைத்துக்கொண்டு வெளியாகி யிருக்கிறது. தாமரை மொட்டு வெடித்து அதற்குள்ளிருந்து மகாத்மா காந்தி வெளிவரும் தோற்றத்தையும் இன்னும் காந்திஜியின் குழந்தை முகம் முதல் அமரரான தோற்றம் வரையில் தாங்கிக்கொண்டு 'குங்குமத்'தின் அட்டை சிறந்து விளங்குகிறது. பெண்கள் முன்னேற்றத்தை இலட்சியமாகக் கொண்டு நடைபெறும் இப்பத்திரிகையில் சாது முருகதாஸர், திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் முதலிய பெரியார்களும் ஸ்ரீமதி பாலாம்பிகை, ஸ்ரீமதி மங்களம் முதலிய பெண்மணிகளும் எழுதியிருக்கிறார்கள். 'காய் கனிச் செடிகளை வளர்ப்பதில் அதிசய முறைகள்' என்ற கட்டுரை மிக ரஸமாயிருக்கிறது. கதைகள், பாடல்கள், கேள்வி பதில்கள், சமையல், சங்கீதம், தையல் வேலை முதலிய மாதர்களுக்கு அவசியமான பல விஷயங்கள் அடங்கிய இப்பத்திரிகை தமிழ் தெரிந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் இன்றியமையாதது. வருஷ சந்தா ரூ. 6—0—0; தனிப் பிரதி அணா 8. விலாசம்: "குங்குமம்" ஆபீஸ், பச்சையப்பன் ஹாஸ்டல் ரோடு, சென்னை 10.

# சித்திரலேகா



ஸ்ரீ பகவதி சரண் வர்மா

மொழிபெயர்ப்பு: ரா.வீ.

## இரண்டாம் அத்தியாயம்

## அதிதியின் வருகை

பீஜகுப்தன் தன் கையிலிருந்த கிண்ணத்தைச் சித்திரலேகாவின் உதட்டினருகே கொண்டுபோய், "சித்திரலேகா! வாழ்விலே இன்பம் என்றால் என்னவென்று தெரியுமா?" என்று கேட்டான்.

சித்திரலேகாவின் அகன்ற நீண்ட விழிகளில் ஒருவித வெறி தாண்டவமாடியது. சிவந்த ரோஜாக் கன்னங்களில் ஒருவித உல்லாசம் ததும்பியது. சித்திரலேகா ஒரு வாய் பானத்தை அருந்தி விட்டுச் சிறு புன்னகை பூத்தாள். ஒரு கண நேரத்துக்கு அவள் அதரங்கள் பீஜகுப்தனின் அதரங்களுடன் மௌன பாஷையில் ஏதோ பேசின. பிறகு அவள் மெதுவான குரலில், "இதுதான்!" என்று பதில் அளித்தாள்.

அப்பொழுது கிட்டத்தட்ட நடுநிசி நேரமாகி விட்டது. பீஜகுப்தனின் மாளிகை ஆயிரக்கணக்கான தீபங்களினால் 'தகதக' வென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. வாசற்புறத்தில் நாதஸ்வரக்காரர்கள் பியாகடை ராகம் வாசித்துக் கொண்டிருந்தனர். தன் இன்ப விடுதியில் பீஜகுப்தன் ஸ்வர்க்கத்தின் அழகிகளுக்கே சிகரமாக விளங்கிய நடனமாது ஒருத்தியுடன் யௌவன வெறியாட்டத்தில் ஆழ்ந்திருந்தான். வெளியே உலகமோ ஒரே கும்மிருட்டில் ஆழ்ந்திருந்தது.

பீஜகுப்தன் இலேசாகச் சிரித்தான். "சரி, யௌவனத்தின் முடிவு என்ன ஆகும், சித்திரலேகா? யோசித்து யோசித்துப் பார்க்கிறேன்!..." என்று ஆரம்பித்தான்.

சித்திரலேகாவும் சிரித்தாள்; ஆனால் அவள் சிரித்தது ஒரே ஒரு நிமிஷம்தான்! அவளுடைய இனிமையும் உல்லாசமும் ததும்பிய அந்தச் சிரிப்பு துயரம் தோய்ந்த கம்பீரமாக மாறி விட்டது. ஒரு வேளை அவளும் இந்தக் கேள்விக்குப் பதில் தேடுவதில் முன்னமேயே ஈடு பட்டிருந்தாளோ என்னவோ! ஆனால் கேள்வியோ மிகவும் பயங்கரமானதாயிருந்தது. அவளால் அதைப் பற்றி அதிக நேரம் சிந்திக்க முடியவில்லை. அவள் தலை சுழன்றது. அந்தத் துயரம் தரும் விஷயத்தை மறக்க எண்ணி அவள் பானத்தை எடுத்து அருந்தலானாள். என்ன இருந்தாலும் இன்று மறுபடியும் திடீரென்று அதே கேள்வியைக் கேட்டது அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. "நடைப்பிணம்" என்று அவள் வாய் அவளையறியாமலே மெதுவாக முணுமுணுத்தது.

"நடைப் பிணமா? இல்லை, இல்லை. அதெல்லாம் நடக்காத காரியம். யௌவன

னத்தின் முடிவு என்ன? அறிய முடியாத அந்தகாரம்தான்! அந்த அந்தகாரத்தின் ஆழத்தில் என்ன புதைந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளவும் எனக்கு ஆசையில்லை. இறந்த காலம் எதிர்காலம் இரண்டும் கற்பனை உலகத்தின் ஏகபோக உரிமையான பொருள்கள். அதனால் நமக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. நிகழ்காலம் நம் முன் நிற்கிறது. அதுதான்..."

பீஜகுப்தன் மேலே பேச வார்த்தைகள் அகப்படாமல் தடங்கினான்.

"...அதுதான் உல்லாசம் நிறைந்தது; இனிமை நிரம்பியது; உலகத்தில் உள்ள இன்பங்கள் அனைத்தும் அதில்தான் அடங்கிக் கிடக்கின்றன. யௌவனத்தின் ஸாரமும் அதில்தான் புதைந்திருக்கிறது. இதைத்தானே சொல்ல நினைத்தீர்கள்?" என்று சிரித்துக் கொண்டே சித்திரலேகா வாக்கியத்தைப் பூர்த்தி செய்தாள்.

சித்திரலேகாவை ஆலிங்கனம் செய்து கொண்டு, "நீ என்னை அடிமை கொண்டு விட்டாய்!" என்றான் பீஜகுப்தன்.

"நீங்கள் மட்டும் என்ன? என் உள்ளத்தில் ஒரு வெறியை அல்லவா ஊன்றி விட்டு விட்டீர்கள்!" என்று பதில் அளித்தாள் சித்திரலேகா.

சித்திரலேகா வேசியல்ல; அவள் ஒரு நடன மாது மட்டுமேதான். பாடலிபுத்திரத்தின் அழகிற் சிறந்த நடனமாது ஒருத்தி வேசித் தொழிலை மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் யாருக்கும் சிக்கிரம் நம்பிக்கை ஏற்படாதுதான். ஆனால் அதற்கு எத்தனையோ காரணங்கள் இருந்தன. அந்தக் காரணங்களுக்கும் அவளுடைய நடத்தைக்கும் நெருங்கிய தொடர்பும் இருந்தது.

சித்திரலேகா ஒரு விதவை. பதினெட்டாவது வயது நடந்து கொண்டிருக்கும் பொழுதே அவள் விதவைக் கோலம் பூணும்படி யாகிவிட்டது. விதவையாயிருந்து மன உறுதியுடன் புலனடக்க வாழ்க்கையை அவள் மேற் கொண்டாள். ஆனால் வெகு காலம் வரை அவளுடைய மன உறுதி நிலைத்து நிற்கவில்லை. ஒரு நாள் அவளுடைய வாழ்க்கையில் கிருஷ்ணாதித்தியன் பிரவேசித்தான். கிருஷ்ணாதித்தியன் மிக அழகிய வாலிபன். அவனுடைய அழகில் விசேஷக் கவர்ச்சி இருந்தது. அந்தக் கவர்ச்சியின் காரணமாக அவன் விதவைச் சித்திரலேகாவின் தவ வாழ்க்கையைத் தகர்த்தெறிந்து விட்டான்.

அழகி சித்திரலேகாவின் ஆழத்தில் அமுங்கிக் கிடந்த யௌவனம் மறுபடியும் மலர்ந்தது. வைராக்யத்தின் ஜோதி உல்லாஸ வாழ்க்கையின் ஒளிக்கெதிரே நிலை கவிழ்ந்து விட்டது. சித்திரலேகாவின் வாழ்க்கைச் சுனை இடம் பெயர்ந்து ஓட ஆரம்பித்து விட்டது. 'நாம் இருவரும் உயிருடன் இருக்கும் வரையில் ஒன்று சேர்ந்தே வாழ்வோம். நம்மை யாரும் பிரித்துவைக்க முடியாதபடி நாம் வாழ வேண்டும்" என்று சித்திரலேகாவும் கிருஷ்ணாதித்தியனும் உறுதி பூண்டனர். கிருஷ்ணாதித்தியனின் பேச்சில் மயங்கிய சித்திரலேகா அவனுடைய வார்த்தையைத் தேவ வாக்காக மதித்தாள். அதன் பிறகு நடக்கவேண்டியது நடந்தேவிட்டது!

சித்திரலேகா கர்ப்பவதியானாள். மறைமுகமாயிருந்த அவர்களுடைய காதல் உலகம் அறியும் அளவுக்கு வளர்ந்து விட்டது. கிருஷ்ணாதித்தியனின் தந்தை கிருஷ்ணாதித்தியனை வீட்டை விட்டு வெளியேற்றினார். சித்திரலேகாவின் தந்தை சித்திரலேகாவைத் துரத்திவிட்டார்.

அபாரச் செல்வம் படைத்த தந்தையின் பிள்ளை கிருஷ்ணாதித்தியன் கர்ப்பவதியான சித்திரலேகாவை அழைத்துக் கொண்டு பிச்சைக்காரனைப் போல இப்பெரும் புவியில் காலடி எடுத்து வைத்தான். பஹிஷ்கரிக்கப்பட்ட வாலிப

## மகாத்மா வாழ்கிறார்!



ஒரு பிடி உப்பை நீரில் போட்டால், அத்தனை நீரும் உப்பாகிறது. மகாத்மாஜி உப்பைப் போன்றவர். பொது மக்கள் அத்தனை பேரும் ஜலம். நல்லவர்களாயிருந்து நல்ல குழந்தைகளைப் பெற்று வளர்ப்பீர்களானால், எல்லாருக்கும் மகாத்மாவை அள்ளி வழங்குவீர்கள். — ராஜாஜி

னை அவன் சமூகத்தின் நிந்தனைகளுக்கும் அவச்சொற்களுக்கும் ஆளாக நேர்ந்தது. அவற்றை அவனால் காது கொண்டு கேட்க முடியவில்லை. இப்படிப்பட்ட கேடுகெட்ட வாழ்க்கை வாழ்வதைக் காட்டிலும் உயிர் துறப்பதே மேல் என்ற முடிவுக்கு வந்து விட்டான். சித்திரலேகா தன்னைத் தனியனாக்கி விட்டாள். அவளுக்கு ஒரு நடன மாது அபயம் அளித்தாள்.

சித்திரலேகாவுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அது பிறந்ததும் இந்த உலகத்தை வெறுத்து மரித்துவிட்டது. சித்திரலேகாவுக்கு சாரீரம் வெகு சுகமாக அமைந்திருந்ததோடு மட்டும் அல்ல; சரீரமும் மிக லாவண்யமானதாக அமைந்திருந்தது. அவளுக்கு அபயம் அளித்து இடம் கொடுத்த உதவிய நடனமாது, அவளுக்கு நடனமும் பாட்டும் சொல்லி வைத்தாள். அதற்குப் பிறகு சித்திரலேகாவும் நாட்டியக்காரி ஆகி விட்டாள். ஆயினும் சித்திரலேகா சிற்றின்பங்களை விலக்கி, மறுபடியும் கட்டுப்பாடுகள் நிரம்பிய வைராக்ய வாழ்க்கையில் தன்னைத் தானே பிணைத்துக் கொண்டாள். ஆனால் கிருஷ்ணாதித்தியனை அவளால் மறக்க முடியவில்லை.

பாடலிபுத்திர நகரமே சித்திரலேகாவின் காலடிகளில் தவம் கிடந்தது. ஆனால் சித்திரலேகா புனிதமான வாழ்க்கையை மேற்கொண்டு அதைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வந்தாள். மிகச் சக்திவாய்ந்த பெரிய பெரிய தலைவர்களும், லக்ஷாதிபதிகளும் அவள் அன்பைப் பெறுவதற்காக ஒற்றைக் காலால் தவம் கிடந்து உருகிப் பார்த்தனர். ஆனால் எல்லாம் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகவே முடிந்தது. பொது மேடைகளில் மட்டும்தான் அந்த அழகி வருவாள். தனது நடனத்தினால் மக்களின் மனதை மயக்கி விட்டு மின்னலைப் போல் மாயமாய் மறைந்தும் விடுவாள். ஒரு தடவை அவளைப் பார்த்து விட்டால் போதும்; மறுபடியும் மறுபடியும் அவளைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை மனதை விட்டு அகலுவதேயில்லை.

ஒரு நாள் பீஜகுப்தன் சித்திரலேகாவின் நடனத்தைப் பார்ப்பதற்காகப் போனான். நடனமாடிக் கொண்டிருந்த சித்திரலேகாவின் பார்வை பீஜகுப்தன் மீது விழுந்தது. விழுந்ததுதான் தாமதம்; அவளுடைய முகம் ஒரேயடியாக வெளுத்து விட்டது. கிருஷ்ணாதித்தியனே சொர்க்கத்திலிருந்து தன் நடனத்தைக் கண்டு களிப்பதற்காக இறங்கி வந்திருக்கிறானோ என்ற பிரமை



அவளைப் பிடித்துக் கொண்டது. அவள் நாட்டியம் ஆடுவதை அப்படியே நிறுத்தி விட்டாள். தன்னையும் தன்னைச் சூழ்ந்திருக்கும் மக்களையும் மறந்து அவள் பீஜகுப்தனையே வைத்த கண் வாங்காமல் பார்க்கலானாள். பீஜகுப்தனோ நல்ல வாலிபன். அவனுக்கு வயது இருபத்தைந்துக்கு மேலிராது. சித்திரலேகாவின் அழகில் மயங்கி அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களும் சித்திரலேகாவின் கண்களும் ஒன்று கலந்தன. சித்திரலேகா பார்த்துப் பரவசப்பட்டுக் கொண்டிருந்த அதே மனிதனைக் காண்பதற்காக அங்கே கூடியிருந்த மக்கள் அனைவருடைய கண்களும் திரும்பின. "அடே! பீஜகுப்தன் போல் அல்லவா இருக்கிறது!" என்று எல்லோருடைய வாய்களும் ஏக காலத்தில் முணுமுணுத்தன.

சித்திரலேகாவின் காதுகளில் அந்த வார்த்தைகள் ஒலித்ததுதான் தாமதம், அவளுக்குத் தன் மீது கோபம் கோபமாக வந்தது. தன் பிழையை எண்ணி மிகவும்



வருந்தினான். பீருகுப்தனின் மீதிருந்த தன் பார்வையைத் திருப்பி, மறுபடியும் நாட்டிய மாடத் தொடங்கினாள். நாட்டியம் முடிந்ததும் பீருகுப்தன் நேரே சித்திரலேகாவின் அருகில் வந்து, "உங்கள் இருப்பிடத்துக்கு வந்து உங்களைத் தரிசித்துப் போவதற்கு அனுமதி தருவீர்களா?" என்று கேட்டான்.

சித்திரலேகா பீருகுப்தனைப் பார்த்தாள். அவளுக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்து விட்டது. "முடியாது; நான் தனிப்பட்ட மனிதன் ஒருவனைப் பார்ப்பதில்லை. பல பேர் கூடியுள்ள பொது மேடைகளில்தான் என்னைக் காணலாம். என் வாழ்க்கையில் தனியொரு மனிதனுக் கிடமில்லை!" என்றாள்.

பீருகுப்தனின் நம்பிக்கை என்னும் பயிரில் பனி விழுந்தது. அவனுடைய மலர்ந்த முகம் வாடி விட்டது. இருந்தாலும் அவன் துணிச்சலாக, "ஒவ்வொரு தனி மனிதனும் ஒன்று சேர்வதால்தானே பல மக்கள் கூடியுள்ள பொது மேடைகளும் சமுதாயங்களும் உருப்பெறுகின்றன. ஆகவே அந்த மாதிரியான பொது மேடையோ, சமுதாயமோ ஒரு பொருளை விரும்புகிறதென்றால், தனிப்பட்ட ஒவ்வொரு மனிதனும் அதை விரும்புகிறான் என்றுதானே அர்த்தம்! அப்படியிருக்கும்பொழுது உங்கள் மனத்தில் இம்மாதிரி வித்தியாசம் உதிக்கக் காரணமென்ன?" என்று கேட்டான்.

"வித்தியாசம் உதிக்கக் காரணம் என்ன என்று கேட்கிறீர்கள்? கேளுங்கள், காரணத்தை. சமுதாயம் ஒரு பொருளை விரும்புகிறதென்றால் தனி மனிதனும் அதே பொருளைத்தான் விரும்புகிறான் என்று எப்படி அர்த்தம் கொள்ள முடியும்? பொது மக்கள் மகிழவேண்டும், சமுதாயம் சந்தோஷப்பட வேண்டும் என்றால் தனிப்பட்ட ஒரு மனிதன் தனது இன்ப துன்பங்களை மறந்து, பலவிதக் கஷ்டங்களுக்கு ஆளாகித் தன் வாழ்க்கையைத் தியாகத்திற்கு அர்ப்பணித்தால்தான் முடியும். சமுதாயத்தின் அங்கமான தனியொரு மனிதன் செய்யும் தியாகங்களும் அனுபவிக்கும் கஷ்டங்களும்தான் சமுதாயத்துக்கு இன்பத்தை அளிக்கின்றன. உதாரணமாக என் கலையை எடுத்துக் கொள்ளுங்களேன். என் விருப்பு வெறுப்புகளை மறந்து கஷ்டப்பட்டால் தானே நான் மக்களை மகிழ்விக்க முடிகிறது? அப்படி மகிழ்விப்பதும் எனக்கு ஏதாவது நல்ல பெயர் உண்டு என்கிறீர்களா? சமுதாயத்தின் அங்கமான உங்களைப் போன்ற தனிப்பட்ட ஒரு மனிதனின் ஆசைக்கு ஆளாகி நான் பலவிதப் பயங்கரமான நிலைமைகளுக்கும் இலக்காக நேரிடுகிறது. இதைச் சமுதாயத்தின் அங்கமான தங்களைப் போன்றவர்கள் நினைவில் வைக்க வேண்டும்" என்றாள் சித்திரலேகா.

பீருகுப்தன் வேத வேதாந்தங்களைப் பற்றியும் தர்சன சாஸ்திரத்தைப் பற்றியும் வாதம் புரியவா சென்றான்? காதல் புரிய அல்லவா சென்றான்?

ஆகவே, "அப்படியானால் உங்கள் வீட்டுக்கு வந்து போக எனக்கு அனுமதியில்லை என்றுதானே சொல்கிறீர்கள்!" என்று கேட்டான்

சித்திரலேகா அதே கம்பீரமும் வரட்சியும் ததும்பிய குரலில், "தனியொரு மனிதனுக்குத்தானே? ...... ஆமாம், அனுமதியில்லைதான்!" என்றாள்.

பீருகுப்தனின் வதனத்தில் ஏமாற்றம் ததும்பிய ஒரு அசட்டுச் சிரிப்பு தோன்றி மறைந்தது. "தனி ஒருவன் இல்லையேல் வாழ்க்கையில்லை. தனிமைதான் வாழ்க்கையில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. தனியொரு மனிதனுக்தான் சமுதா

யம் உருவாகிறது. தனிப்பட்ட மனிதன் ஒருவனுக்கு இடம் இல்லை என்று சொல்லிக் கட்டுப்பாடு செய்தால், நானும் சமுதாயத்தின் ஒரு அம்சம்தான் என்று சொல்லிக் கொண்டு வருவது மிகவும் முட்டாள்தனம். தன்னைத்தானே அவமதித்துக் கொள்ளுவதும் ஆகும்" என்றான்.

இதைச் சொன்னதும் அவன் திரும்பிப் பாராமல் வெகு வேகமாக அந்த இடத்தை விட்டு வெளியேறினான்.

அவன் வெளியே போனதுதான் போனானே, சும்மாப் போயிருக்கக் கூடாதா? சித்திரலேகாவின் உள்ளத்திலே ஒருவிதப் புயலையும் உண்டு பண்ணிவிட்டா போகவேண்டும்?

நாட்களுக்கு மேல் நாட்கள் சென்றன. சித்திரலேகா அப்புறம் பீஜகுப்தனைப் பார்க்கவேயில்லை. அன்று அவனிடம் அவள் காட்டிய அலட்சியம் மறைந்துவிட்டது. வேண்டுமென்று பலவந்தமாகத் தள்ளி வைக்கப்பட்ட பீஜகுப்தன் சிறிது சிறிதாகச் சித்திரலேகாவின் இதயத்தில் இடம் பெற்றுவிட்டான். நாடகக் கொட்டகையில் உட்கார்ந்திருக்கும் ஜனத்திரளினிடையே சித்திரலேகாவின் கண்கள் பீஜகுப்தனைத் தினந்தோறும் வலைவீசித் தேடும். ஆனால் கடைசியில் அவளுக்கு மிஞ்சுவது வெறும் ஏமாற்றமே!

எவ்வளவுதான் மனதை அடக்கி வென்ன! ஆசை வெட்கமறிந்தால்தானே? ஒரு நாள் சித்திரலேகா தன் வேலைக்காரியைக் கூப்பிட்டு, "இந்தப் பட்டணத்தில் பீஜகுப்தன் என்று பெயருள்ளவர் யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டாள்.

"பீஜகுப்தன் என்றுதானே? அவரைத் தெரியாமல் இந்தப் பட்டணத்திலே யாருமே இருக்க முடியாதே!" என்றாள் அவள்.

சித்திரலேகா அவளிடம் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்து, பீஜ குப்தனிடம் கொடுத்துவிட்டு வருமாறு சொன்னாள்.

வேலைக்காரி அந்தக் கடிதத்தைப் பீஜகுப்தனிடம் கொடுத்தாள். அந்தக் கடிதத்தில், "சித்திரலேகா மிகவும் யோசனை புனராலோசனை செய்த பின்னர், அவளுடைய வாழ்க்கையில் ஒரே ஒரு தனி மனிதன் மட்டும் பிரவேசிக்கலாம். அந்தத் தனி மனிதன் பீஜகுப்தனாகத்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறாள்" என்று எழுதியிருந்தது. கடிதத்தைப் படித்ததும் சந்தோஷ மிகுதியினால் பீஜகுப்தனின் உடல் சிலிர்த்தது; உள்ளம் சிலிர்த்தது; உவகை பொங்கியது. அன்றைய தினம் முதல் இருவருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஆயினும் சித்திரலேகா வேசியாகவில்லை!


பீஜகுப்தன் சிரித்தவாறே, "மயக்கமும் வெறியும் எப்பொழுதுமே கூடி வாழ்பவை போலும். நீ என்னை மயக்கி அடிமை கொண்டால், நான் உன்னை வெறிகொள்ளச் செய்துவிடுகிறேன் அல்லவா? சித்திரலேகா! நாமிருவரும் எவ்வளவு பாக்கியசாலிகள்!" என்றான். அதைக் கேட்ட சித்திரலேகா அகமகிழ்ந்து முக மலர்ந்து புன்னகை பூத்தாள்.

அதே சமயம் வாசலில் வாசித்துக்கொண்டிருந்த நாதஸ்வரம் நின்றுவிட்டது. வாயிற்காப்போன் உரத்த குரலில், 'எசமான்! ஒரு அதிதி வந்திருக்கிறார். தங்கள் உத்தரவு என்ன?" என்று கேட்டான். (தொடரும்)

## வேப்பிலைச் சட்டினி


ஆராய்ந்து ஆராய்ந்து புதிய விஷயங்களை அறிவதில் காந்திஜிக்கு உள்ள ஆவலுக்கு எல்லையே கிடையாது. இதைப் பற்றி ஸ்ரீ ஜே. ஸி. குமரப்பா தாம் எழுதிய ஒரு கட்டுரையில் கூறுவதாவது:

"ஒரு தடவை பிண்ணாக்கில் உள்ள சத்தைப் பற்றியும் வேப்பிலையில் உள்ள சத்தைப் பற்றியும் நாங்கள் ஆராய்ந்து வந்தோம். அப்போது காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் மகன்வாடியில் நடந்து கொண்டிருந்தது. சாப்பாட்டு வேளையின்போது காந்திஜிக்கு ஒரு புறம் நானும் மற்றொரு புறம் சர்தார் பட்டேலுமாக உட்கார்ந்திருந்தோம். வேப்பிலைச் சட்டினியை காந்திஜி நிறையச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். என் தட்டிலும் கொஞ்சம் எடுத்துப் போட்டார். இதைப் பார்க்க சர்தாருக்கு வேடிக்கையாக இருந்தது. அவர் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே என்னைப் பார்த்து, "எதேது, இனிமேல் காரியக் கமிட்டி அங்கத்தினர்களுக்கு பிண்ணாக்கும் வேப்பிலையும்தான் கிடைக்கும் போலிருக்கிறது; பாபு இதுவரை ஆட்டுப் பால் சாப்பிட்டு வந்தார். இப்போது ஆட்டின் உணவுக்கே படையெடுத்து விட்டார்!" என்றார்.



# சாயா

துரோணன்




இரண்டு வருஷங்களுக்கு முன் அந்தப் பஞ்சாபிக்காரி சர்க்கஸ்கூடாரத்துக்கு வரும்போது ஏதோ ஒரு அதிசயப் பொருளைப் பார்ப்பது போலச் சுற்றிச் சுற்றி வந்தாள். பின்னர், வெளியில் உட்கார்ந்து கொண்டு சாவதானமாக 'ஹுக்கா' பிடித்துக் கொண்டிருந்த முதலாளி முராரிதாஸிடம் தன்னுடைய பாஷையில் ஏதேதோ கூறினாள். அது அவருக்குப் புரிந்ததோ, புரியவில்லையோ—அவளது கவர்ச்சிகரமான தோற்றம் அவரது சிடுமூஞ்சி சுபாவத்தைக் கூடச் சற்று மாற்றிவிட்டது. அவள் பின்னும் ஏதேதோ கூறிக்கொண்டு போனாள்—முராரி அர்த்தம் புரியாமல் திகைத்தார். பின்னர்தான் தம்மிடமிருந்த கூட காட்டு மோகனின் நினைவு வந்தது. அவனைக் கூப்பிட்டு விசாரிக்கும்படி உத்தரவிட்டார்.

மோகன் அவளைக் கூர்ந்து நோக்கினான். அவளது களை பொருந்திய முகம், காந்த விழிகள், கொடி போன்ற உடல், சாட்டை போன்ற இரு பின்னல்கள்—இவையெல்லாம் அவளை ஏதோ ஒரு வனதேவதையாகவே அவனுக்கு அறிமுகப்படுத்தின.

“தும்ஹாரா நாம் க்யா ஹை?” என்றான் மோகன். அவள் தன் முத்துப் போன்ற பல் வரிசைகளைக் காட்டிக் கொண்டே 'கலகல' வென்று சிரித்தாள். ஏனெனில், முராரி எதிர்பார்த்த படியில்லாமல் அவன் பேசியது 'ஹிந்துஸ்தானி.' ஆனால், அதன் பொருளை ஒருவாறு அவள் புரிந்துகொண்டு விட்டாள். ஒரு கோணல் புன்னகையுடன், “சாயா” என்றாள். மோகன் அதை ஒரு தரம் கூறிக்கொண்டே ஆனந்தப் பெருமூச்செறிந்தான்.

முராரி பக்கத்துப் 'பிளாஸ்கி'லிருந்து 'டீ'யைக் கோப்பையில் ஊற்றி “இந்தா, சாய்!” என்றார். அதைக் கேட்டு இருவருமே 'கலகல' வென்று நகைத்தனர்.

இரண்டு வருஷங்களுக்கு முன்—அவள் இம்மாதிரியாகத்தான் ‘சர்க்க’ஸில் வந்து சேர்ந்து கொண்டாள்.

அவள் பஞ்சாபியேதான். அவளது பெற்றோர்கள் அப்போது நாட்டை நாசமாக்கிக் கொண்டிருந்த பஞ்சத்திற்கு அடிமையாகி அகதிகளாகவே மாறி மூலைக்கொருவராகச் சென்றுவிட்டனர். சாயா தமிழ் நாட்டுக்கு வந்த பின்தான், தன்னுடைய கோர வேஷத்தைக் களைந்துவிட்டுத் தான் ஒரு பதினெட்டு வயது யுவதியென்பதைத் தெரிவித்துக் கொண்டாள் — இவற்றை யெல்லாம் மோகன் காவடையில் அவளிடமிருந்து தெரிந்து கொண்டான்.

அவள் வந்து மூன்று மாதங்களுக்குள்ளேயே சர்க்கஸ் வேலைகள் எல்லாவற்றையும் ஆச்சரியப்படத்தக்க முறையில் தெரிந்து கொண்டுவிட்டாள். இரண்டு வருஷங்களுக்குள்ளாகவே, தமிழ்நாட்டு ரசிகர்களின் உள்ளங்களைப் பைத்தியமாக்கிவிட்டாள், சாயா!

2

இன்று சர்க்கஸ் கோஷ்டியின் இருபது நடிகையருக்குள் அவள்தான் ராணி. அவளது விசித்திரப் போக்கும் பழக்கங்களும் கண்டு மற்ற சக நடிகைகளுக்குப் பொறாமை தான். ஆனால் இவற்றை யெல்லாம் அந்த மோகினி இலட்சியம் செய்தால்தானே? எல்லாவற்றிற்கும் அவளது புன்னகையும், அந்த வெண்கல நகைப்பும்தான் பதில்!

தினமும் கோர மிருகங்களின் பொறுமையைச் சோதிப்பதுதான் மோகனுக்கு வேலை. அவைகளுக்குத்தான் அவனிடம் எவ்வளவு பயம்! தினமும் அவனது தலையை ருசி பார்த்து விட்டு ஏங்கும் அந்தக் கிழட்டுச் சிங்கத்திற்குக் கூட அவனைக் கண்டால் சிம்ம சொப்பனம்தான்! மிருகங்களுக்கு ராஜனாக விருந்த அந்தச் சபாரு காவடையில் தன் இதயத்தை அந்தப் பஞ்சாப் மோகினியின் வாயிலிருந்த நகைப்புக்கு அடிமையாக்கி விட்டான்.

ஒரு தினம் பிற்பகலில் சாயா யானையிடம் ஏதோ குசலம் விசாரித்துக்கொண்டிருந்தாள். மோகன் சற்று தூரத்தில் நின்றுகொண்டு அவளது எழிலைப் பருகிக் கொண்டிருந்தான். பின்னர் அவளிடம் நெருங்கி வந்தான். மோகினி ‘கலகல’ வென்று நகைத்தாள்.

“சாயா, நீ இல்லாமல் நான் வாழ்க்கை நடத்த முடியாது; என்ன சொல்லுகிறாய்?”

“என்னுடன்தான் நீங்கள் வாழ்க்கை நடத்துகிறீர்களே!” என்றாள் அவள்.

மோகனின் முகத்தில் அசட்டுக் களை பிரதிபலித்தது. பாவம், தன் கருத்தைச் சொல்லுவதற்கு அவனுக்குச் சரியான பாஷை கிடைக்கவில்லை.

இறுதியாக தட்டுத் தடுமாறி, “சாயா! என் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் உன்னிடமே அர்ப்பணித்து விட்டேன்!” என்று கூறி விட்டான்.

அவள் ஒரு கோணல் புன்னகை புரிந்து விட்டுக் கூண்டிலிருந்த கிழட்டுச் சிங்கத்தைச் சுட்டிக் காட்டினாள். மோகன் திகைப்புடன் அதை நோக்கினான். அப்பொழுதுதான் அவனுக்குத் தனது உடல், பொருள், ஆவியின் உரிமைகளைப் பற்றிய இரகசியம் புரிந்தது. இதற்குள்ளாக, தலையிலிருந்த பூச்சரத்தை எடுத்து அவனிடம் வீசிவிட்டு மறைந்தாள் அந்தக் கன்னி.

மோகன் கையில் பூவுடன் உன்மத்தம் பிடித்தவன் போல் அவளது திசை நோக்கி

## குழந்தைகளைப் பற்றிக் காந்திஜி

குழந்தைகளைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குவது அவற்றின் பெற்றோர்கள் தான்.

குழந்தைகள் பிறப்பதற்கு முன்னும் பிறந்த பின்பும், வளர்ந்து வரும்போதும் பெற்றோர்கள் ஒழுங்காக நடந்து கொண்டால் குழந்தைகளும் நல்ல வழியிலேயே நடக்கும்.

“குழந்தைகளா? பூ! அவைகளுக்கு என்ன தெரியும்?” என்று நாம் சொல்லுவதைப் போன்ற பைத்தியக்காரத்தனம் வேறு எதுவுமே இல்லை.

நான் அநுபவத்திலிருந்து சொல்லுகிறேன்; ஆயிரக்கணக்கான குழந்தைகளுடன் பழகிவிட்டுச் சொல்லுகிறேன்; வாழ்க்கையின் உயர்ந்த படிப்பினைகளை யெல்லாம் நாம் குழந்தைகளிடமிருந்தே கற்றுக் கொள்ளுகிறோம். —மகாத்மாஜி



நின்ருன். அடுத்த கணம் முதலாளி முராரியின் கடுமையான குரல் அவனைத் திடுக்கிடச் செய்தது.

3

“சாயாவின் வாழ்க்கையை நான் சவீகரித்துக் கொள்ளத் தீர்மானித்து விட்டேன்; உன் அபிப்பிராயம் என்ன?” என்று கேட்டார் முராரி மோகனை நோக்கி.

மோகன் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. அவன் பதிலொன்றும் கூருமல் நின்று கொண்டிருந்தான். உள்ளத்தின் போராட்டத்தை அவன் விவரிக்கச் சக்தியற்று விட்டான். அவனது குழப்பம் அவர் எதிர்பார்த்ததுதான். ஆனால் அதற்கான முற்றுப் புள்ளியை வைப்பதற்காகத்தானே அவர் அவனிடம் இதைக் கேட்டார்?

இந்த முடிவைப் புரிந்ததும் புரியாதது மாக அவனது காதிலும் போட்டு வைத்தார் முராரி. அதற்கும் வழக்கமான அந்த கையொலிதான் அவனது பதில்.

அன்றைய ஆட்டத்தில் இதுதான் விசேஷம் — மோகனையும், சாயாவையும் ஜனங்கள் காணவில்லை. அதன் விளைவாக அவர்களது பொறுமை எல்லை மீறிவிட்டது. முராரி பதறினர். பின்னர் ஜனங்களின் முன்பு மன்னிப்புக் கோரி அன்றைய நிகழ்ச்சியை ஒருவாறு முடித்தார்.

தனிமையில் முராரியின் மூளை தீவிரமாக வேலை செய்து ஒரு முடிவுக்கு வந்தது.

## பாடப் புத்தகம் கூடாது

★

பிள்ளைகளுக்கு உண்மையான பாடப் புத்தகம் உபாத்தியாயரே யாகும்.

மாணவர்கள் மீது புத்தகங்களை ஏராளமாய்ச் சுமத்தக் கூடாது. அது அநாவசியம்.

நான் படித்த காலத்தில், என் உபாத்தியாயர்கள் புத்தகங்களிலிருந்து எதுவும் கற்பித்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. அவர்கள் வாய் மொழியாகக் கற்றுக் கொடுத்தவை இன்னும் எனக்குத் தெளிவாக நினைவில் இருக்கின்றன. —காந்திஜி.

அது என்ன? மோகனை வஞ்சம் தீர்த்துக் கொண்டு விடுவது!

எங்கோ சென்றிருந்த அவ்விருவரையும் முராரி கண்டு பிடித்துத் தருவித்து விட்டார். வழக்கத்திற்கு அதிகமான ஆதரவையும் காண்பித்தார். இரண்டு தினங்களுக்குப் பின்— அன்று ஏராளமான கூட்டம். இரும்பு வேலிக்குள் மோகன் உற்சாகத்துடன் தன் மிருகங்களை ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். கடைசியாக அந்த மரண வாயிலுக்குள்—ஆமாம், கிழட்டுச் சிங்கத்தின் வாய்க்குள்—தலையை நுழைத்தான். ஜனங்கள் ஆரவாரம் செய்தனர்!

அதே கணம்தான் அந்த ஆச்சரியம்— கூண்டைச் சுற்றி வந்து கொண்டிருந்த முராரி அவசரத்துடன் சட்டத்தில் பொருத்தியிருந்த காந்தக்கோலை உருவி அந்த மிருக ராஜனின் முதுகின்மீது வைத்தார்.

இது ஒரு இமைப் பொழுதில் நடந்தது. அடுத்த நிமிஷம் — மோகன் புன்னகை நிறைந்த முகத்தை வெளியில் இழுத்து வணக்கம் செய்தான். அந்த மிருகம் சர்வ சாதாரணமாகவே நின்று கொண்டிருந்தது! எதோ ஒரு மூலையிலிருந்த அந்த மாயா மோகினி சாயாவின் கேலி நகைப்பு முராரியின் காதுகளுக்கு நாராசம் போன்றிருந்தது. அவர் திக்பிரமை யடைந்து நின்று விட்டார். தோல்வி நிறைந்த அவரது அசட்டுக்களையின் பொருள் ஜனங்களுக்கு என்ன தெரியும்?

* * *

திரைக்குப் பின்—கூடாரத்தின் மூலையில் ஏக்கத்துடன் நின்று கொண்டிருந்தார் முராரி. அவரது முகமும் உள்ளமும் மோகனின் மன்னிப்புக்காக எதையும் செய்யத் தவம் கிடந்தது. ஆனால் பூரணமான உறுதியையும், நம்பிக்கையையும் பெற்ற பின்னர் அவரை விட்டு விட்டாள் அந்தக் கன்னி சாயா!

4

மறு தினம் பகற்பொழுதில் கீழ்க்கண்ட நாடகம்—திரை மறைவில் நடந்து கொண்டிருந்தது.

“என் உடல், பொருள், ஆவி எல்லாம் உன்னிடம்தான் என்று சொன்னதன் பொருள் சரியாகி விட்டதா?” என்ருன் மோகன். இப்பொழுதும் அந்த மாயா மோகினி அதே நகைப்பைத்தான் வீசினுள்

"ஆமாம், நீ இதை எப்படிக் கண்டு பிடித்தாய்? விவரமாகச் சொல்?" என்று பரபரப்புடன் கேட்டான் மோகன்.

"உங்கள் மெய்ம்மறந்த நிலையில் வாய்க்குள் ஒரு பொருளிருக்கும்போது சூட்டுக் கோலை உங்கள் மீது வைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்றொரு கேள்வியைப் போட்டான் அவள்.

மோகன் விடைதெரியாமல் விழித்தான். "அதெல்லாம் எனக்குத் தெரியாது; முராரியின் வஞ்சகத்தை எப்படிக் கண்டு பிடித்தாய், சொல்?" என்றான் கண்டிப்பாக.

இரண்டு தினங்களாகவே முராரியின் போக்கும் ஆதரவுகளும் அந்தக் கள்ளிக்கு ஆச்சரியமாக இருந்தது. அதனுடன் அந்தக் கிழட்டுச் சிங்கத்தினிடம் பகற்பொழுதில் அவருக்கென்ன வேலையிருக்க முடியும்? இரண்டு தினங்களாக அவர் இரகசியமாக நடத்திய ஒத்திகைகளை அவளது கூர்மையான விழிகள் கண்காணித்து விட்டன.

பெரிய இறைச்சித் துண்டை அதன் வாயில் கொடுத்துவிட்டுக் காய்ந்தக் கோலை எடுத்து அதன் முதுகில் வைப்பார் முராரி. வலி தாங்க முடியாத அந்த மிருகம் ஓலமிட்டுக் கொண்டே திகைவிழுந்து வாயை மூடும்—இறைச்சி இரண்டு துண்டங்களாகக் கீழே விழும். இப்படி மூன்று முறைகள் ஒத்திகை விட்டு விட்டார். அதன் பின்னர் தான் அவர் சம்பந்தமில்லாமல் வேலியைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தார்!

இவற்றை யெல்லாம் அவளிடமிருந்து அறிந்து கொள்வதற்குள் மோகனின் பாடு திணறிவிட்டது. அவன் முகத்தில் மகிழ்ச்சியும், திகைப்பும் போட்டியிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அவனது கடைசிச் சந்தேகமும் இயல்பானதுதானே!

"காய்ந்தக் கோலை அவர் அதன்மீது வைத்தபோது அப்படியெல்லாம் ஒன்றும் நடைபெறவில்லையே!" என்றான்.

நிலைக்கு நேரே சட்டத்தில் செருகியிருந்த கம்பியை உருவிக் கீழே போட்டாள் சாயா. மரப்பிடி போட்டிருந்த அந்தச் சாதாரணக் கம்பியில் துருவும் ஏறியிருந்தது. அவனது காதல் உள்ளம் அதைக் கண்டதும் திகைத்து விட்டது!

அவளது விஷமப் புன்னகை அவன் இதயத்தில் மதுவை வர்ஷித்தது. அவளது கரங்களைப் பிடிக்கப் போனான் அவன். அடுத்த க்ஷணம் ஓர் துள்ளில் அவனிடமிருந்து விடுபட்டு மறைந்தாள் அந்தப் பூங்கொடி சாயா!

# காலக்ஷேபம்

### எப்படி?

ஸ்கூல் இன்ஸ்பெக்டர் (பையனைப் பரிசோதிக்கும் நோக்கத்துடன்):— முந்தாநாள் நான் இருபத்தைந்து கஜம் அகலமுள்ள சாலையில் நூறு கஜ தூரம் நடந்தேன். அப்படியானால் எனக்கு என்ன வயது?

பையன் (யோசித்து):— முப்பத்திநாலு, ஸார்!

இன்ஸ்பெக்டர்:—அது எப்படி?

பையன்:—எனக்கு ஒரு தாத்தா இருக்கிறார். அவர் முழுப் பைத்தியம். அவருக்கு அறுபத்தெட்டு வயதாகிறது. அந்தக் கணக்கில்தான்......

### உண்மையா?

மானேஜர்:—நேற்று நீர் ஏன் ஆபீஸுக்கு வரவில்லை?

குமாஸ்தா (பயத்துடன்):—எனக்கு உடம்பு சரியில்லை, ஸார்!

மானேஜர்:—ஏன் டாக்டரிடமிருந்து சர்டிபிகேட் வாங்கி வரவில்லை?

குமாஸ்தா:—எனக்கு உண்மையாகவே ஜுரம் வந்துவிட்டது, ஸார்!

### சபாஷ்!

டாக்டர்:—பயப்படாதீர்கள், ஸார்! முதல் இஞ்செக்ஷன்தான் கொஞ்சம் வலிக்கும். இரண்டாவது இஞ்செக்ஷன் போடும் போது வலிக்கவே வலிக்காது!

நோயாளி:—அப்படியானால் ஒன்று செய்யுங்களேன், டாக்டர்! இப்பொழுது இரண்டாவது இஞ்செக்ஷனையே கொடுங்களேன்!

### ஓஹோ!

கணவன்:—இதோ பார்த்தாயா! ஒரு மனிதன் ஒரு நாளைக்கு மூன்று மணி நேரம் தூங்கினால் போதும் என்று இந்தப் புத்தகத்தில் போட்டிருக்கிறது!

மனைவி:—அடாடா! என்ன ஆச்சரியம்! இது எப்படி நம் பக்கத்து வீட்டுக் குழந்தைக்குத் தெரிந்திருக்கிறது?

**3. கடோதரனின் கல்யாணம்**



சூடிகைக்குள் கட்டுண்டு கிடந்த அனாதைப் பெண்ணுக்கும் அரக்கனுக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது:

'நீ என்னைக் காதலித்தால் உன்னை நான் சுகமாக வைத்திருக்கிறேன்' என்றான் அரக்கன். அதற்கு அந்தப் பெண் 'நீ ஒரு பேய்! உன்னிடம் அன்புடனிருப்பது என்பது முடியாத காரியம்' என்று பதிலளித்தாள். இதைக் கேட்டு அந்த அரக்கன் ஆவேசத்துடன் எழுந்து அவளுடைய நீண்ட கூந்தலைப் பற்றி இழுத்து அவள் தலையை வெட்ட வாளை ஓங்கினான். அச்சமயம் என் தந்தை வெளியிலிருந்து தனது வில்லை வளைத்து அம்பை எய்தார். அது அரக்கனின் இதயத்தில் பாய்ந்து சென்றது. அரக்கன் உயிரற்றுக் கீழே விழுந்தான். உடனே தந்தை உள்ளே சென்று பெண்ணின் தளைகளை அறுத்து, அவள் யார், எந்த ஊர் என்பதை விசாரித்தார். அந்தப் பெண்ணும் தான் யார் என்பதைச் சொன்னாள்:

'நான் ஒரு ஸாரஸன் அரசனின் மனைவி. என்னுடைய கணவனின் வேலைக்காரனாக இருந்த இந்தக் கரிய அரக்கன் என்னைப் பலாத்காரமாக இழுத்துக் கொண்டு வந்து விட்டான். இவனிடமிருந்து தப்பி எப்படி ஊருக்குச் செல்வது என்று தெரியாமல் நான் தவிக்கிறேன்.' இதைக் கேட்ட என் தந்தை அவளையும் அவள் குழந்தையையும் தனது அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். எப்படியாவது அவளுடைய கணவன் தேடி வந்து அவளையும் அவள் குழந்தையையும் அழைத்துச் செல்வான் என என் தந்தை நம்பியிருந்தார். என் தந்தையின் பாதுகாப்பில் தான் பத்திரமாக இருப்பது பற்றி அவளும் சந்தோஷமாயிருந்தாள். அவளுடைய கணவனோ மற்ற உறவினர்களோ அவளைத் தேடி வரவில்லை. அவள் அனாதையாயிருந்ததால் அவளை வெளியே அனுப்ப என் தந்தை தயாராயில்லை.

அந்த ஸாரஸன் பெண்ணின் மகன் மிக மிக அழகான இளைஞனாக வளர்ந்து வந்தான். ஆனால் என் தந்தை அவனிடம் காட்டி வந்த அன்பினாலும், ராஜ சபையிலுள்ளவர்கள் கூறிய புகழுரைகளாலும் நான் அவனுடைய மனைவியாகப் போவதாகவும், தேசீபர்த் தீவுக்குத் தான் அரசனாகப் போவதாகவும் அவன் எண்ணலானான். ஆனால் என் தந்தை என் விவாகத்தைப் பற்றி அவசரப்படாதது கண்டு, அவனே என்னைத் தனக்கு விவாகம் செய்து தரும்படி என் தந்தையிடம் அதிகார தோரணையில் கேட்டான்.

என்னை இன்னும் சிறந்த இடத்தில் கலியாணம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாக என் தந்தை தெரிவித்தார். இதைக் கேட்ட அந்த நன்றி கெட்ட இளைஞன் என் தந்தையைக் கொன்று விட்டுத் தானே சிம்மாசனமேறினான். உடனே என்னைப் பலவந்தமாக மணம் புரிந்து கொள்வது, அல்லது கொன்று விடுவது என்று முடிவு செய்தான். ஆனால் அதிர்ஷ்ட வசமாக, என் தந்தையின் மந்திரிகளில் ஒருவர் என்னையும் என் தோழிகளில் ஒருத்தியையும் அரண்மனையிலிருந்து வெளியேற்றி ஒரு கப்பலில் வெளி நாட்டுக்கு அனுப்பி




# இளவரசர்கள்

★ ரா. நா.

வைத்தார். ஆனால் கப்பலில் சில நாட்கள் பிரயாணம் செய்வதற்குள், ஒரு பெரும் புயல் கிளப்பிக் கப்பலை ஒரு பாறையில் மோதி மூழ்கடித்து விட்டது. என் கண் முன்னே மந்திரியும், என் தோழியும், மற்ற வேலையாட்களும் நீரில் மூழ்கி இறப்பதைக் கண்டேன். கப்பலின் ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டிருக்கையில் மூர்ச்சையடைந்தேன். விழித்துக்கொண்ட சமயம் முன்பின் தெரியாத ஒரு நாட்டுக் கடற்கரையில் நான் இருப்பதை அறிந்தேன். நான் கண் விழித்த சில நிமிஷங்களுக்கெல்லாம் குதிரை மீது சிலர் வருவதைக் கண்டேன். அவர்கள் அந்த நாட்டு அரசரும் அவருடைய குதிரைப் படையினரும் என்பதை அறிந்தேன். முன்பின் அறியாத ஒரு பெண் கவனிப்பாரற்றுக் கிடப்பதைப் பார்த்த குதிரைப் படையினரில் ஒருவர் என்னிடம் அனுதாபம் கொண்டு என்னைத் தன் அரசர் முன் அழைத்துச் சென்றார்.

அந்த அரசன் மிக மிக அழகு வாய்ந்த இளைஞன். அவனிடம் என் கதையைச் சொன்னேன். என் துயர வாழ்க்கை வரலாற்றைக் கேட்ட அரசன் என்னிடம் பரிதாபமடைந்து என்னைத் தன் அன்னையிடம் அழைத்துச் சென்று பட்சமாக நடத்தும்படி கேட்டுக் கொண்டான். மகாராணி என்னைத் தன்னிடம் வைத்துக் கொண்டு அன்பாகக் காப்பாற்றி வந்தாள். நானும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தேன். அரசன் என் மீது காதல் கொண்டு, தன்னை மணம் செய்து கொள்ளும்படி என்னைக் கேட்டவுடன், நானும் தயங்காமல் சம்மதித்தேன்.



கொஞ்ச காலத்திற்குப் பிறகு ஏராளமான பகைவர்கள் அரசனின் நாட்டைச் சூழ்ந்து கொண்டனர். அரண்மனையை எதிரிகள் கைப்பற்று முன் நானும் அரசனும் தப்பியோடுவது தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை. நாங்களிருவரும் ஒரு சிறு படகில் ஏறிச் சென்றோம். அலைகள் மோதிப் படகை அங்குமிங்கும் ஆட்டிச் செல்லுகையில் ஒரு கப்பல் தென்பட்டது. இருவரும் அதில் ஏறிக்கொண்டோம். அது வியாபாரக் கப்பல் என எண்ணி அதில் ஏறினோம். என்ன ஆச்சரியம்! அது ஒரு கொள்ளைக் கூட்டத்தினரின் கப்பல்.




கொள்ளைக்காரர்கள் எங்கள் சிறு படகைக் கைப் பற்றிக் கொண்டு எங்கள் கைகளைக் கட்டி மேல் தளத்திற்கு இழுத்துச்சென்றனர். நான் மிகவும் அழகு வாய்ந்தவளாயிருப்பது கண்டு என்னை யார் அடைவது என்பது பற்றி அவர்களுக்குள் சண்டையிட்டனர். அவர்களுக்குள் சண்டை வலுத்து, ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டதில் மற்ற யாவரும் மடிந்து ஒருவன் மட்டும் மிஞ்சினான். அப்படி மிஞ்சியவன் என்னைத் தன் நண்பன் ஒருவனுக்குப் பரிசாக அளிக்கப் போவதாகக் கூறினான்.

இந்தக் கொள்ளைக்காரன் என் கணவனோடு சண்டையிட்டு அவரை அப்படியே கட்டிப் பிடித்துத் தூக்கி அலை கடலில் வீசி எறிந்தான். என் கணவன் கடலில் விழுந்ததைப் பார்த்ததும் எனக்குத் துக்கமும் பயமும் தாங்க முடியவில்லை. 'ஓ' வென்று கதறி அவரைப் பின்பற்ற முயன்றேன். நானும் என் கணவனுடன் கடலில் குதிக்க விரும்பியதைப் பார்த்த அந்தக் குரூபி, என்னைக் கப்பல் பாய் மரத்தில் கட்டிப் போட்டான். நான் என் விதியை நொந்து கொண்டு கண்ணீர் வடித்தவண்ணமிருந்தேன்.

நாங்கள் கரை சேர்ந்தவுடன் அந்தக் கொள்ளைக்காரன் சில ஒட்டகைகளை அமர்த்தி என்னையும் மற்ற அடிமைகளையும் கெய்ரோவுக்கு அழைத்துச் சென்றான். அங்கே என்னைத் தன் நண்பனுக்குப் பரிசாக அளிப்பதாக எண்ணியிருந்தான். ஆனால் பிரயாணம் தொடங்கிச் சில நாட்களுக்குள் நீங்கள் சமீபத்தில் கொன்ற கறுப்பு அரக்கனிடம் சிக்கினோம். அரக்கன் கொள்ளைக்காரரையும் அவனுடைய ஆட்களையும் கொன்று விட்டு என்னைக் கறுப்புக் கல் அரண்மனையில்

## பலே, அம்பி!



சிறைப்படுத்தி வைத்திருந்தான். அங்கே மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டு துயர வாழ்க்கை நடத்தி வந்தேன். ஆண்டவன் அருளால் நீங்கள் வந்து என்னை விடுதலை செய்தீர்கள்" என்று கதையை முடித்தான்.

* * *

**யோசனை எப்படி?**

கணவனும் மனைவியும் கைக் குழந்தையுடன் சினிமா பார்க்கப் போனார்கள். சினிமா மானேஜர், "உங்கள் குழந்தை 'கப், சிப்' என்று இருக்க வேண்டும். பாதிப் படத்தில் குழந்தை அழுதால் உங்கள் பணத்தைத் திருப்பிக் கொடுத்து உங்களை வெளியே அனுப்பி விடுவேன்!" என்றார். இருவரும் அதற்குச் சம்மதித்துப் படம் பார்க்கச் சென்றனர். அரை மணி நேரம் ஆயிற்று.

கணவன் :—படம் எப்படி?

மனைவி :—ரொம்ப மோசம்!

கணவன் :—சரி; அப்படியானால் குழந்தையைக் கிள்ளிவிடு!

நேரிபரம் இளவரசி இவ்விதம் தன் கதையை முடித்தவுடன் கடோதரன் அவள் கஷ்டங்களைக் கேட்டு மனம் உருகி, அவள் அழகைக் கண்டு மயங்கி அவளுக்கு ஆறுதல் சொல்லத் தொடங்கினான்.

"அன்புக்குரிய பெண்ணே, நீ பட்ட கஷ்டங்களை மறந்து விடு. எதிர் காலத்தில் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவது உன் கையிலிருக்கிறது. நீ இணங்கும் பட்சத்தில் இவ்விளவரசர்கள் முன்னிலையிலேயே உன்னை நான் மணம் புரிந்து கொள்கிறேன்."

இளவரசி கடோதரனைக் கண்டது முதல் அவன் மீது அளவில்லா ஆசை கொண்டிருந்தாள். ஆகையால் அவள் முழு மனதுடன் அவனைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தாள். கல்யாணம், அன்றே அரக்கனின் அரண்மனையில் நடந்தது. கல்யாணமானவுடன் எல்லோரும் ஹரான் நாட்டை நோக்கிப் புறப்பட்டனர். (தொடரும்)

# பொல்லாத கிழவர்!

ஓர் ஊரில் ஒரு கிழவர் இருந்தார். அவர் ஒரு சின்னஞ் சிறு குடிசையில் வாழ்ந்து வந்தார். அவர் வாய் திறந்து ஏதாவது சொன்னால் போதும்; உடனே அதைச் செய்வதற்கு எத்தனையோ பேர் காத்திருந்தனர்.

ஒரு நாள் மத்தியானம் அவருடைய குடிசைக்குச் சிலர் வந்திருந்தனர். கிழவர் வந்தவர்களை அன்புடன் வரவேற்றார். ஆரஞ்சுப் பழங்களையும் வாழைப் பழங்களையும் கொண்டு வந்துவைத்து அவர்களை உபசரித்தார்.

அந்தப் பழங்களைப் புசித்ததும், அவர்கள் சிறிது நேரம் கிழவருடன் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு, இளைப்பாறுவதற்காக அந்தக் குடிசையிலேயே அவர்கள் படுத்துக் கொண்டனர்.



கிழவர் அவர்களுடன் படுக்கவில்லை; நூல் நூற்க ஆரம்பித்து விட்டார். அவருக்கு எதிரே கிடந்த பழத் தோல்களின்மீதும் விதைகளின்மீதும் ஈக்கள் மொய்த்தன. கிழவர் இதைக் கவனித்தார். உடனே எழுந்துபோய்த் துடைப்பத்தை எடுத்துக் கொண்டு வந்து குடிசையைச் சுத்தம் செய்தார்.

அந்தச் சமயத்தில் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட ஒருவர், "நீங்கள் ஏன் இந்த அறையைச் சுத்தம் செய்யவேண்டும்? வேலைக்காரனை விட்டுச் சுத்தம் செய்யச் சொல்லக் கூடாதா?" என்றார்.

"நம்முடைய சரீரம் சுத்தமாயிருக்க வேண்டும் என்றால் நாம்தானே குளிக்கிறோம்? அதே மாதிரி நம்முடைய அறையை நாம் சுத்தமாய் வைத்துக் கொள்வதில் என்ன பிசகு? எப்போதுமே தன் வேலையைத் தானே செய்வதுதான் நல்லது" என்றார் கிழவர்.

அப்படிச் சொன்ன கிழவர் யார் தெரியுமா? வேறு யாரும் இல்லை; நமக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த காந்தித் தாத்தாதான்! —அக்ஷயம்

# கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

## 268. ஒரு கடலை அடைக்கப் பல கடல்கள்!

**மா**லை நேரத்தில் ராமன் கடற்கரைக்குப் போனதையும் சீதையின் நினைவு வந்ததையும் கடைசியாக வில்லை நோக்கியதையும் பார்த்தோம். இனி: யுத்தத்துக்கு ஏற்பாடு பண்ண வேண்டியதுதானே? இரவு கழிந்தது.

• • •

காலை நேரம்:

சுக்கிரீவன், அடுத்தாற் போல்ச் செய்யவேண்டிய காரியத்தைப் பற்றி யோசிப்பதற்காக, அநுபவம் உள்ள அறிஞர் சிலரையும் விபீஷணனையும் அழைத்து உட்காரச் செய்தான். அவர்களோடு ஆலோசனை செய்ததின் பேரில், "சரி, காரியத்தைச் சாதிப்பதற்கு நம்முடைய தச்சன் நளன் வர வேண்டியதுதான்" என்கிறான்.

அளவறும் அறிஞரோ(டு),
அரக்கர் கோமகற்(கு)
இளவலும், இனிதுடன்
இருக்க, எண்ணினன்
வினைவன செய்வன;—
'முடிக்க வேண்டுவான்
நளன்வரு' கென்றனன்
கவிக்கு நாயகன்.

[அளவறும் அறிஞரோடு: விரிந்த அநுபவ ஞானமுள்ள மேலோரோடு; அரக்கர்கோமகற்கு இளவலும் இனிது உடன் இருக்க: ராவணன் தம்பியான விபீஷணனோடு சௌகரியமாய் ஒரு இடத்தில் உட்கார்ந்திருக்கச் செய்து; எண்ணினன் வினைவன செய்வன: இனி நேரக்கூடிய காரியங்களையும் செய்ய வேண்டிய காரியங்களையும் பற்றி எண்ணினவனாய் (சுக்கிரீவன்); முடிக்க வேண்டுவான் நளன் வருக என்றனன்: காரியத்தை முடிக்கும்படியாக தம்முடைய தச்சனான நளன் வரட்டும் என்று சொன்னான்; கவிக்கு நாயகன்: வானரங்களுக்கு அரசனான சுக்கிரீவன்.]

நளனும் வந்து விட்டான்

"கடலைக்கடக்கவேண்டும் அல்லவா, நம்முடைய சேனைகள்?" என்று சுக்கிரீவன் சொன்னான்.

"சரி, சரி, கடலிலே அணை கட்ட வேண்டியதுதானே! இருக்கட்டும். அதைப்பற்றி அதிகமாக ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. கிடைத்த கல்லோ, பாறையோ, மலையோ எது வந்தாலும் வரட்டும். மேரு மலையாய் இருந்தாலும் சரி. அணுவாய் இருந்தாலும் சரி, கவலையில்லை. எல்லாவற்றையும் பொருந்தும்படி அமைத்து விடுவேன். வரட்டும்" என்றான் நளன்.

## ரயில் தவறுதா?



தாயார்:—உன் அத்தைக்கு ரயில் தவறிவிட்டதாம்! அதனால் நாளைக்கு இதே நேரத்துக்குப் புறப்பட்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்.

குழந்தை:— ஏன் அம்மா! இதே நேரத்துக்குப் புறப்பட்டால் நாளைக்கும் ரயில் தவறி விடாதா?

'காரியம் கடலினை
அடைத்துக் கட்டலே,
சூரியன் காதல!
சொல்லி என்பல!
மேருவும் அணுவும்
வேறு ருவகை
ஏர்உற இயற்றுவன்:
கொணர்தி' என்றனன்.

[காரியம் கடலினை அடைத்துக் கட்டலே: கடலை இரண்டு கரையையும் சேர்த்த வண்ணமாக அணை கட்டுகிறது தானே காரியம்; சூரியன் காதல, சூரிய புத்திரனுன சுக்கிரீவ ராஜனே: சொல்லி என், பல: அதிகமாய்ப் பேச என்ன இருக்கிறது: மேருவும் அணுவும் வேறு உருவகை: மேரு மலையும் அணுவும் ஒன்றுதான் என்று எண்ணும்படி; ஏர் உற இயற்றுவன்: அப்படி நன்ருய்ப் பொருந்தும்படி கட்டி விடுவேன் (பெரிய பாறையும் சிறிய கூழாங் கல்லும் ஒன்ருய் அமைந்து நிற்கும்படி கட்டி விடலாம்); கொணர்தி என்றனன்: பெரிதோ சிறிதோ என்ற கவலை வேண்டாம். எல்லாவற்றையும் கொண்டு வரக் கட்டளை இடு என்ருன் — வானரத் தச்சனுன நளன்:]

குறிப்பு:—அணை கட்டுகிற காரியம் எல்லாம், அணுயாசமான காரியம்தான் என்ற உணர்ச்சி நமக்கு உண்டாகும்படி ஆரம்பிக்கிருர் கம்பர்.

* * *

குண்டுக் கல்கள் வரவேண்டுமே அணைக்கு! வருகின்றன பாருங்கள்!

ஒரு காத தூரத்துக்கு எட்டிப் பார்க்கிறோம். ஒரே பரப்பாய்க் கணக்குக்கு அடங்காத கரிய பருவதங்கள் அசைந்து அசைந்து வருகின்றன. எப்படி இருக்கும் காட்சி!

கருவரை காதங்கள்
கணக்கி லாதன,
இருகையில்த், தோள்களில்ச்,
சென்னி ஏந்தின;—
ஒருகடல் அடக்கமற்(று)
ஒழிந்த வேலைகள்
வருவன ஆம்என
வந்த வானரம்.

[இரு கையில்: இரண்டு கைகளிலும் சேர்த்து தூக்கியவைகளாய்ப் பாறைகள்: தோள்களில்: அதை விடப் பெரிய பாறைகளைத் தோளில் வைத்த வண்ணமாய்; சென்னி ஏந்தின: அதை விடப் பெரிய பாறைகளைச் சும்மாடு கட்டித் தலையில் சுமந்தவைகளாய்— இந்த விதமாக, வானரங்கள் பாறைகளைச் சுமந்து வந்தன. ஒரு கடல் அடைக்க: இந்த ஒரு கடலை அணை கட்டி அடைப்பதற்காக; மற்றொழிந்த வேலைகள்: மற்ற ஆறு சமுத்திரங்களே.]

இதிகாசம் என்ருல், கவி என்ருல், சாண் கொண்டும் முழுங் கொண்டும் அளத்தல் போதாது. இந்த அளவு கோல்களைக் கொஞ்சம் விட்டு விட்டுக் கற்பனை அளவுகோல் கொண்டு வானத்துக்கும் பூமிக்குமாக அளக்க நேர்ந்தால்தான் நம் உள்ளத்தில் உள்ள கற்பனு சக்திக்கு ஓடி உலாவ இடம் கொடுத்தது என்று ஆகும்.

ஷேக்ஸ்பியர் முதலிய மேதாவிகள் கண்ட உண்மை இது.

கம்பர் எப்படி நம்முடைய கற்பனை உள்ளத்துக்கு விருந்தளிக்கிருர் என்பதை இனியும் பார்ப்போம்.




# பாத கமலம்

ஆசிரியர்
கே. ஏ. அப்பாஸ்
மொழிபெயர்ப்பு: கே. கணேஷ்

III

அன்று இரவு முழுவதும் சந்திராவின் அமைப்பு வாய்ந்த பாதத்தைச் சுற்றிச் சுற்றப்பட்ட மலர்ச் சரங்களின் சித்திரம் என் மனதை வாட்டிக் கொண்டிருந்தது. பூக்களும் பாதமும், பாதமும் பூக்களும், பாத கமலத்திற்குப் பூக்கள், பாதத்திற்கு மலர்கள்! அழகான அற்புதமான சின்னம்! ஆனால் அது எதன் சின்னம்? பல மணி நேரம் யோசித்தும் இந்தப் புதிரை என்னால் விடுவிக்க முடியவில்லை.

மறுநாள் காலை நான் எழுந்தபொழுது முதல்தான் இரவின் நிகழ்ச்சிகள் நூறாண்டுகள் கழிந்த நிகழ்ச்சிகள் போல் தோன்றின. அதன் பிறகு தினசரி வேலையின் மும்முரத்தில் சந்திராவைப் பற்றியோ அல்லது அந்தப் பூக்காரனைப் பற்றியோ மீண்டும் நினைக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இப்படியாகப் பல மாதங்கள் கழிந்தன.

கதை இத்துடன் முடிந்து விடவில்லை. உண்மையில் கதையே இப்பொழுதுதான் ஆரம்பமாகிறது. ராமகிருஷ்ணன் எடுத்த படத்தில் சந்திரா நடித்தாள். அவளுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுக்கப்பட்டது. படம் வெளிவந்த பிறகுதான் நான் திரையில் அதனைப் பார்த்தேன். அதில் சந்திராவின் அங்க வெளித்தோற்றமும் கிளர்ச்சியூட்டும் உடல் அசைவுகளுந்தான் பெரும் பாகம் காட்டப் பட்டிருந்தன. அப்படத்தைப் பொதுஜனங்கள் மிகவும் ரசித்தார்கள் என்றும் அதன் காரணமாக இதைப் போன்ற நடனங்கள் ஆடும்படி வேறு பல பிலிம் கம்பெனியார் அவளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டனர் என்றும் பின்னால் அறிந்தேன். ராமகிருஷ்ணனைத் தன் வீட்டிற்கு வரும்படி அரட்டை பலமுறை அழைத்தான். ஆனால் ஒவ்வொரு முறையும் ராமகிருஷ்ணன் எதாவதொரு சாக்குப் போக்குச் சொல்லி விடுவார். என்னைப் பொறுத்த வரையில் சந்திராவை சந்திக்கும் சந்தர்ப்பமே கிட்டவில்லை. ஒருநாள் டெலிபோன் மணியடித்து, அதன் மூலம் பழக்கமான குரல் கேட்கும் வரை எனக்கு அவளைப்பற்றிய ஞாபகமுமில்லை.

"ஹல்லோ, ஹல்லோ நான்தான்—ராமகிருஷ்ணன்."

"ராமகிருஷ்ணனா? நமஸ்காரம். என்ன விசேஷம்?"

"அந்தி நேரத்தில் உங்களுக்கு ஒய்வு இருந்தால் இந்தப் பக்கம் கொஞ்சம் வந்து விட்டுப் போங்கள். சில விஷயங்களைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்தைக் கேட்கவேண்டியிருக்கிறது!"

நான் அவர் இருக்கைக்குச் சென்ற பொழுது அவர் தனியாகவே இருந்தார். சிறிது நேரம் லோகாபிராமமாகப் பேசிக் கொண்டிருந்த பின்னர், "இதோ பாருங்கள், எனது அடுத்த படத்துக்கு ஒரு கதை வேண்டும்" என்றார்.

"அப்படியென்றால் ஸ்ரீமான் தாவேயிடம் போவதுதானே? அவருக்கு வேலை அதிகமென்றால், மாதோக், கிவான்ஷாரார், அகா ஜானி, கமால் அமரோஹி என்று எத்தனையோ பேர் இருக்கிறார்களே! சிக்கனமாக இருக்க வேண்டுமென்று எண்ணினால் ஒரு சுருக்கெழுத்துக்காரரை அமர்த்திக்கொண்டு மாலை 'மெட்ரோ' படமாளிகைக்கு அழைத்துச் செல்லுங்கள். அதில் நடக்கும் 'பேதிங் பியூட்டிஸ்' என்ற ஆங்கிலப் படத்தின் வசனத்தை அப்படியே குறித்துக்கொண்டு வந்து பின்னால் ஹிந்துஸ்தானியாக்கிக் கொண்டால் போகிறது!" என்றேன்.

"உமது தமாஷெல்லாம் அப்புறம் இருக்கட்டும். எனக்குப் புதிதாக முற்றிலும்

வேறுபட்டதாகத்தான் வேண்டும். எனக்கு இப்பொழுது பழைய மோஸ்தர் சித்திரப் படங்களை எடுத்து எடுத்துச் சலித்துவிட்டது. வாழ்க்கையோடு ஒன்றிய ஒரு கதை தான் எனக்கு இப்பொழுது தேவை" என்றார் ராமகிருஷ்ணன்.

எல்லோருடைய மனதிலும் ஒரு குட்டிச் சாத்தான் இருந்துகொண்டு எப்பொழுதாவது ஓரோர் சமயத்தில் மனோரதத்தைத் தட்டி எழுப்பிக் கொண்டிருக்கிறது. இந்தச் சாத்தானின் பெயர் 'ஆவேசம்' என்பதாகும். இந்த அற்புதப் பேர்வழி ஏதாவது பொருளாதாரத் தூண்டுதல் ஏற்பட்டாலொழிய தெம்பித் தூக்கம் போடுவான் என்பது என் அனுபவம். எது எப்படியாயினும் அந்நாட்களில் எனது பொருளாதார நிலைமையும் மோசமாகவே இருந்தது. யுத்த காலத்திற்கு முன்னுள்ள நாற்றெண்பது ரூபாய்ச் சம்பளம் யுத்தகால விலைவாசிகளிருக்கும் நிலைமையில் எப்படிப் போதும்? படங்களுக்குக் கதை யெழுதிக் கொடுத்தால் சில ஆயிர ரூபாய்கள் கிட்டலாமல்லவா? ராமு என்னிடம் கதை கேட்டபொழுது எனது மூளையில் அமர்ந்திருந்த குட்டிச்சாத்தான், தன்னுடைய பழக்கமான பெண்குரலில் மெதுவாக "என்னைப் பற்றி ஒரு கதை எழுதமாட்டீர்களா?" என்றது.

"சரி, அப்படியானால் நான் கூறப்போகும் வாழ்க்கையோடு ஒட்டிய கதையைக் கேளுங்கள்" என்று ராமகிருஷ்ணனிடம் கூறத் தொடங்கினேன்.


"ஒரு காலத்திலே, பாஞ்சாலத்திலுள்ள ஒரு நகரிலே ஆடலிலும் பாடலிலும் முக அழகிலும் அம்மாகாணம் முழுதும் பிரசித்திபெற்றிருந்த ஒரு கணிகை வாழ்ந்து வந்தாள்......பார்த்தீர்களா? வேண்டிய பாட்டுகளும், காட்சிகளும் கதையில் சேர்ப்பதற்குத் தகுந்தாற்போல் செய்திருக்கிறேன். ......அது கிடக்கட்டும். அவளுக்கு ஒரு பெண் பிறந்தது. வாழ்க்கை முழுதும் ஸ்திரீலோலர்களிடம் இருந்து அல்லலுற்ற அப்பெண்ணின் தாய் தனது தொழிலின் கேவலத்தை எண்ணித் தன் மகளை இத்தீயச் சூழ்நிலையிலிருந்து ஒதுக்கிவளர்க்க விரும்பினாள். ஆகவே அவள் தன் மகளைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைத்தாள். அவளும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக படித்து வளர்ந்து வரலானாள். தனது மகளுக்கு உரிய அந்தஸ்தும தகுந்த வரனும் கிட்ட வேண்டுமென எண்ணி அப் பெண்ணின் தாய் தன் தொழிலை விட்டுத் தன்னை விரும்பி நாடி வந்தவர்களில் ஒருவனை மணந்து கொண்டாள். அவனோ பசுத்தோல் போர்த்த புலி. சினிமாக்களில் வரும் 'வில்லன்'கள் போல, அவன் கணிகையின் பெண்ணைக் கொண்டு நல்ல பணம் தட்டலாமெனத் திட்டமிட்டான். எனவே, அவன் அவளைப் பம்பாய்க்கு அழைத்துப் போவதென்று முடிவு செய்தான். ஆனால் அதற்குள் அப்பெண் ஒரு பூக்காரனை உண்மையாகவே காதலிக்கத் தொடங்கியதால் அவனது திட்டங்களுக்குத் தடை ஏற்பட்டது......"


"அந்தக் கதையின் தலைப்பு 'சந்திரா' என்பதுதானே?" என்று சிரித்துக் கொண்டே ராமகிருஷ்ணன் என்னிடம் கேட்டார்.

'இல்லை; சந்திரா அல்ல. அதன் பெயர் 'பாத கமலம்'!"

"சரி, சொல்லுங்கள்."

"ஆகவே அந்தப் பெண் நாட்டியக்காரியாகவும் விலைமாதாகவும் வாழும் தனது கீழ்த்தரமான வாழ்க்கையை விட்டு அவனை மணந்து எளிய வாழ்க்கை நடத்தவும் தீர்மானித்தாள்.........இதனை அறிந்ததும் அவளது இரண்டாவது தகப்பனுக்கு ஆத்திரமாக இருந்தது. தனது இந்த ஒரே வகை வருமானத்தை அவன் போக்க விரும்புவானா? அப் பெண்ணிடம் கெஞ்சினான், மன்றாடினான், பயமுறுத்தினான். ஆசை வார்த்தைகளும் கூறிப் பார்த்தான். அவள் ஒன்றுக்குமே அசையவில்லை. அதன் பேரில் அவன் அவளை ஒரு அறையில் போட்டுப் பூட்டினான். அதனால் அவளால் தன் காதலனைப் பார்க்க முடியவில்லை. தனது தாயின் மூலம் அவனுக்குச் செய்தி அனுப்பினாள். அன்று இரவு அவனுடன் ஓடிவிடத் திட்டமிட்டிருந்தாள். எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. கடைசி நேரத்தில் அவளது இரண்டாம் தந்தை






எப்படியோ விஷயத்தைத் தெரிந்துகொண்டு விட்டான். அப்புறம்......

"அப்புறம் என்ன நடந்தது?......என்ன நடந்தது அப்புறம்?...சரி பார்ப்போம்...... எனக்கு இன்னும் தெரியவில்லை. ஒருக்கால் உங்களுக்கு நான் நாளை கூறலாம் என நினைக்கிறேன்" என்று கூறிவிட்டுப் போவதற்கு எழுந்தேன்.

"அற்புதமான கதை. ஜோராய் ஜோடித்து விட்டீர்கள். நான் அதற்கு ரொக்கமாக நாலாயிரம் ரூபாய் தருகின்றேன்."

* * *

ரொக்கமாக நாலாயிரம் ரூபாய்! இந்த ஆவலைப் பூர்த்தி செய்ய என்னதான் செய்ய முடியாது? எனக்குள்ள சாதாரண சங்கோசத்தையும், முன் ஜாக்கிரதையையும் விடுத்து போட்டாரை எடுத்துக் கொண்டு நான் நேரே அந்தக் கேவலமான சந்திற்குப் பட்டப்பகலிலேயே சென்றேன். மூலையில் ஒரு பூக்கடை இருந்தது. அங்கு ஒரு கிழவன் மாலை கட்டிக் கொண்டிருந்தான். நான் அவனை நோக்கி "இந்தப் பக்கம் ஒரு வாலிபப் பூக்காரன் இருந்தானே. அவன் பெயர் கூட 'பாபு' என்று நினைக்கிறேன். அவன் கடை எங்கிருக்கிறது என்று காட்டுகின்றீர்களா?' என்று கேட்டேன். கிழவன் தனது ஒளி மங்கிய கண்களால் உற்றுப் பார்த்தபின்னர் மெல்லிய குரலில், "நான் இப்பொழுது உட்கார்ந்திருக்கிறேனே. இந்த இடந்தான் முன்பு அவனது கடையாக இருந்தது. இப்பொழுது அவன் பூக்கார பாபு அல்ல. அவன் காதலன் பாபு ஆகிவிட்டான்" என்று கூறிக்கொண்டே சந்திரா வசித்த வீட்டை நோக்கிப் பார்த்தான்.

'கதைத் தொடரில் ஒரு துணைப்பாவது ஒழுங்காய்ப் பொருந்தியிருக்கிறதே!' என்று எண்ணி, பூக்காரனிடம் பேசிக்கொண்டிருப்பதற்குச் சாக்காக ஒரு செண்டு கட்டும்படி கூறினேன். அவனுக்கும் பாபுவின் காதல் வாழ்க்கையைப் பற்றிக் கூறுவது இன்பமாகவே இருந்தது. "அந்தச் சூனியக்காரி இதோ இங்குதான் வசிக்கிறாள்! அந்த மூதேவியைச் சந்திரா என்று அழைக்கிறார்கள்" என்றிவ்வாறு என்னிடம் பேசுவதை விடத் தனக்குள்ளேயே பேசிக்கொள்பவன் போல் பேசலானான்.

"அவள் உண்மையிலேயே சூனியக்காரிதான். அந்தப் பையன் மீது மை போட்டுவிட்டாள். அவன் போயே போய் விட்டான். இந்த மூதேவிகளுக்கெல்லாம் இது ஒரு விளையாட்டு. ஆகவே அந்த பாபு அடியோடு கெட்டே போய்விட்டான். கையிலுள்ள பணத்தை எல்லாம் தொலைத்துவிட்டுக் கடையையும் போக்கிவிட்டுப் பேய் பிடித்தவனைப் போல் அங்கு மிங்குமாக மற்றுவைப் போல் திரிகிறான்......இந்தாருங்கள், ராஜகுமாரிக்கு லாயக்கான செண்டு! ...விலை எட்டணா ஆகும்......சந்தோஷம்."

அதற்கு மேல் நான் அங்கிருப்பது நியாயமில்லை. எனினும் எனக்குவேண்டிய தகவலை அவனிடமிருந்து தெரிந்து கொண்டேன். அப்புறம் நேரே சந்திரா வீட்டிற்கே சென்றேன். அங்கு போய் மூச்சு வாங்க நீண்ட படிக்கட்டுகளின் வழியே மாடி ஏறினேன். முழுக் கட்டடத்திலும் மயான நிசப்தமிருந்தது. எல்லோரும் - எல்லாப் பொருள்களுமே தூங்குகின்றனவோ? இல்லை — செத்தே போய் விட்டனவோ? சூரியன் அஸ்தமனமான பிறகுதான் அவ்விடத்தில் உயிர் தோன்றும் போலும்!

கீழ் மூச்சு மேல் மூச்சு வாங்க நான்காவது மாடி ஏறிக் கதவைத் தட்டினேன்.

சோகக் கண் படைத்த வேலையாள் கதவைத் திறந்தான். முன்னைப் போலவே அவனது கண்களில் தூக்கம் நிறைந்திருந்ததுடன் அவன் கண்களில் சோகத்தின் சாயையும் தென்பட்டது.

நான் ஒரு சாதாரணக் கேள்விதான் அவனிடம் கேட்டேன். அவன் சுண்டு விரலை உதட்டில் வைத்து மெதுவாகப் பேசும்படி சமிக்ஞை செய்தான். "சந்திரா, ஜே. ஜே. ஆஸ்பத்திரியில் மோசமான நிலையில்..." இதற்கு மேல் அவனால் பேசி வாக்கியத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

கதவு திறக்கப்பட்டு அந்த அரட்டை வெளியே வந்தான். ஆனால் இம்முறை அவன் தனது அரட்டையை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு மௌனமாக இருந்தான். அவனது ஓயாத அரட்டையை விட அவனது மௌனம் விசித்திரமாக இருந்தது. அவன் மிகவும் மோசமான நிலையில் இருந்தான். பலநாள் தூக்கத்தையும் கண்டிருக்க மாட்டான் போலிருந்தது. அவனது கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன. எல்லாவற்றையும் விட அவனது பேச்சு முறையிலே ஒரு அற்புத மாறுதல் ஏற்பட்டிருந்தது. பணிவும் பயமும் எங்கோ போய்விட்டன. அப்பொழுது என்னை எரிச்சலுடன் வரவேற்றான். "என் ஐயா, இந்த இடத்தை என்ன என்று நினைத்தாய்? மரியாதையாய் வெளியே போ, தெரிகிறதா?" என்று கூறி விட்டு வேலைக்காரனை நோக்கி "என்னடா ரகசியம் வேண்டிக்கிடக்கிறது? அயோக்யப் பயலே! போடா உள்ளே!" என்றான். பயந்த எலியைப் போல் வேலைக்காரன் உள்ளே சென்றான்.

ஆனால் அந்தக் கோவைப்பழக் கண்கள் என்னைப் பார்த்த வண்ணமாகவே இருந்தன. அப்பொழுதுதான் அவன் நன்றாகக் குடித்திருந்தான் என்பதை அறிந்தேன்.

"ஏய், நீ போலீஸ்காரப் பயல். அப்படித்தானே? நீ ஒரு மைலுக்கு அப்பால் வரும்பொழுதேதான் எனக்கு வாசனை அடிக்குமே. இதோ பார், நீ என்னதான் முயன்றாலும் உன்னால் ஒன்றுமே செய்ய முடியாது. நான போலீஸ் கமிஷனர் துரையின் அத்யந்த சிநேகிதன்......"

எனக்கு அவன் சொல்லுவது ஏதாவது புரிந்தால்தானே!

"நீ என்னப்பா கூறுகிறாய்?"

"ஆமாம், ஆமாம். நான் நினைத்தது சரிதான். உன்னால் ஒன்றுமே செய்ய முடியாது. தெரிகிறதா? என் சந்திரா போலீஸ் கிளப்பில் ஆடியபொழுது கவர்னர் துரையே தனது கைகளால் அவளுக்கு மாலையிட்டார். தெரிகிறதா?" என்று கூறிவிட்டு உடனே முகத்திலடிப்பது போல் கதவை ஓங்கிச் சாத்தினான்.

இந்தக் கேஸ் கூத்தின் விவரம் ஒன்றுமே எனக்குப் பிடிபடவில்லை. ஆனால் அன்று மாலை பார்வையாளர்களை அனுமதிக்கும் நேரத்தில் ஜே. ஜே. ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். பல வார்டுகளில் விசாரித்த பின்னர்தான் சந்திரா இருந்த இடத்தைக் கண்டு பிடிக்க முடிந்தது. நான் அவன் படுக்கை அருகில் சென்ற பொழுது அவன் ஆடாது அசையாது வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டுப் படுத்திருப்பதைக் கண்டேன். (அடுத்த இதழில் முடியும்)

★ ★ ★

## புது டில்லியில் பரத நாட்டியம்

செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் "கல்கி" ஆசிரியர் புது டில்லி போயிருந்த போது டில்லித் தமிழர்கள் நடத்தும் 'கலா மந்திரம்' என்னும் ஸ்தாபனத்தைப் பார்வையிட்டார். அச்சமயம் குமாரி அம்புஜா, குமாரி கமலா என்னும் குழந்தைகளின் பரத நாட்டியக் கச்சேரி நடைபெற்றது. (குமாரி கமலாவின் பரத நாட்டியத் தோற்றத்தைப் படத்தில் காணலாம்.) 'கலாமந்திரம்' செய்து வரும் தொண்டையும் குமாரிகளின் நடனத் திறமையையும் "கல்கி" ஆசிரியர் பாராட்டினார்.



★ ★ ★

# மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

## 17. அமிருதஸரஸ் காங்கிரஸ்

மகாத்மா காந்தி பஞ்சாப்புக்குப் போக ஆர்வம் கொண்டிருந்த போதிலும் தடைச் சட்டத்தை மீறி அங்கே போக விரும்பவில்லை. அப்படி மீறுவதற்கு முயன்றால் பஞ்சாபின் நிலைமை இன்னும் மோசமாகத்தான் ஆகும் என்று கருதினார். ஆகையால் இந்திய சர்க்காருக்குத் தந்திகளும் கடிதங்களும் அனுப்பிப் பஞ்சாப்புக்குப் போக அனுமதி கேட்டுக் கொண்டிருந்தார். அந்த அனுமதி இலேசில் கிடைப்பதாக இல்லை. வைஸ்ராய் செம்ஸ்போர்டு, "பொறுங்கள்" "பொறுங்கள்" என்று சொல்லிக் கொண்டேயிருந்தார்.

இதற்கிடையில் மகாத்மா ஒரு முக்கியமான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. அப்போது "பம்பாய் கிரானிகல்" என்னும் பத்திரிகை இந்திய தேசிய இயக்கத்தைத் தீவிரமாக ஆதரித்து வந்தது. அந்தப் பத்திரிகைக்கு ஸ்ரீ பி.ஜி. ஹார்னிமான் என்பவர் ஆசிரியராயிருந்தார். ஸ்ரீ ஹார்னிமான் ஆங்கிலேயரான போதிலும் இந்திய தேசியவாதிகளின் கட்சியைப் பலமாக ஆதரித்தார். அவருடைய எழுத்து, வன்மை பொருந்தியிருந்தது. ரவுலட் சட்டத்தை எதிர்க்க மகாத்மா காந்தி ஆரம்பித்த சத்தியாக்கிரஹ இயக்கத்தையும் ஸ்ரீ ஹார்னிமான் ஆதரித்து எழுதினார். அதனால் கோபங் கொண்ட பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தார் அவரைத் தேசப் பிரஷ்டம் செய்தனர்.

இந்த நிலைமையில் ஸ்ரீ ஹார்னிமானுக்குப் பதிலாகப் "பம்பாய் கிரானிகல்" பத்திரிகையை நடத்தும்படி அதன் நிர்வாகிகள் மகாத்மாவைக் கேட்டுக் கொண்டார்கள். அந்தப் பொறுப்பை மகாத்மா ஏற்றுக் கொண்டு சில நாள் பத்திரிகையை நடத்தினார். அதற்குள் சர்க்கார் அடக்குமுறையின் கொடுமை காரணமாகப் பத்திரிகையை நிறுத்திவிட வேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது.

பிறகு அதே ஸ்தாபனத்தினால் நடத்தப்பட்டு வந்த "எங் இந்தியா" என்னும் வாரப் பத்திரிகையை மகாத்மா ஒப்புக் கொண்டார். சில காலத்துக்குப் பிறகு "எங் இந்தியா" ஆமதாபாத்துக்கு மாற்றப்பட்டது. அங்கே நடந்து வந்த "நவஜீவன்" என்னும் குஜராத்தி வாரப் பத்திரிகைக்கும் மகாத்மா ஆசிரியர் ஆனார். இந்த இரண்டு பத்திரிகைகளின் மூலமாகக் காந்தியடிகள் தமது கொள்கைகளையும் திட்டங்களையும் பிரசாரம் செய்யத் தொடங்கினார். "எங் இந்தியா" "நவ ஜீவன்" இரண்டு பத்திரிகைகளும் மிகவும் பிரபலமடைந்து சக்தி வாய்ந்த பத்திரிகைகள் ஆயின. அவை ஒவ்வொன்றுக்கும் 40,000 சந்தாதார் வரையில் சேர்ந்தனர்.

• • •

மகாத்மாவுக்குப் பஞ்சாப்புக்குப் போக அனுமதி அந்த வருஷம் அக்டோபர் மாதத்திலேதான் கிடைத்தது. அனுமதி வந்தவுடனே மகாத்மா பஞ்சாப்புக்குப் புறப்பட்டுச் சென்றார்.

பஞ்சாப் சம்பவங்களுக்கெல்லாம் மகாத்மாவே பொறுப்பாளி என்று ஸர் மைக்கேல் ஓட்வியர் குற்றம் சாட்டினார். அதே மாதிரியாகப் பஞ்சாப் இளைஞர்கள் சிலர் இராணுவச் சட்டக் கொடுமைகளுக்கெல்லாம் மகாத்மாவையே பொறுப்பாளியாகக் கொண்டார்கள். சத்தியாக்கிரஹம் ஆரம்பித்ததற்காக ஸர் மைக்கேல் ஓட்வியர் மகாத்மாவின் பேரில் குற்றம் சாட்டியது போல் சத்தியாக்கிரஹத்தை நிறுத்தியதற்காக இவர்கள் மகாத்மா பேரில் குற்றம் சுமத்தினார்கள். சத்தியாக்கிரஹத்தை மகாத்மா காந்தி நிறுத்தியதனால்தான் ஜாலியன்வாலா படுகொலை நடந்தது என்று சொன்னார்கள். "நீர் பஞ்சாப்புக்கு வந்தால் உம்மைக் கொலை செய்து விடுவோம்" என்று பயமுறுத்தி காந்தி மகானுக்குக் கடிதமும் எழுதினார்கள்.

இப்படிப்பட்ட பயமுறுத்தல்களினால் காந்திஜியைத் தடை செய்ய முடியுமா, என்ன? மகாத்மா காந்தி ரயில் ஏறி லாகூருக்கு வந்து சேர்ந்தார். அவர் எதிர் பார்த்ததற்கு நேர்மாறான காட்சியை லாகூர் ரயில்வேஸ்டேஷனில் பார்த்தார். அந்த ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரையில் ஜனங்கள் எள்ளுப் போட இடமில்லாமல் நெருங்கி நின்றார்கள், காந்திஜியை வரவேற்பதற்காகத்தான். ரயில் நிலையத்துக்கு வெளியிலும் மாபெருங்கூட்டம் கூடியிருந்தது. லாகூர் நகரவாசிகள் அனைவருமே வீடுகளைப் பூட்டிக்கொண்டு மகாத்மாவை வரவேற்பதற்கு வந்துவிட்டதுபோல் காணப்பட்டது. காந்திஜியைக் கண்டதும் அத்தனை ஜனங்களும் ஒரே குரலாக "மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கோஷம் இட்டார்கள். நெடுநாள் பிரிந்திருந்த உற்ற பந்துவை வரவேற்பது போல் லாகூர் வாசிகள் மகாத்மாவை வரவேற்றார்கள். அளவு கடந்த உற்சாகத்தினால் ஜனங்களுக்குத் தலைகால் தெரியாமல் போய்விட்டது.

இராணுவச் சட்ட அமுலின்போது தாங்கள் பட்ட கஷ்டங்களுக்குக் காந்திஜியே காரணம் என்று அவர்கள் கருதியதாகத் தோன்றவில்லை. அந்தக் கஷ்டங்களுக்கெல்லாம் பரிகாரம் தேடித் தரக்கூடிய உற்ற துணைவர் காந்திஜி என்று அவர்கள் நம்பியதாகத் தோன்றியது.

இராணுவக் கோர்ட்டினால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட லாகூர் தலைவர்களில் பண்டித ராமபோஜ தத் சௌதரி ஒருவர். அவருடைய மனைவியான ஸ்ரீ சரளாதேவி சௌதராணியும் பிரபல தேசியவாதி. அவருடைய வீட்டில் மகாத்மா தங்கினார். அதன் காரணமாக அந்த வீடு ஒரு பெரிய சத்திரம் ஆயிற்று. ஸ்ரீ சரளா தேவி சௌதராணி முக மலர்ச்சியுடன் வந்தவர்களுக்கெல்லாம் உணவு அளித்து உபசரித்தார்.

ஏற்கனவே பஞ்சாப்புக்கு பண்டித மதன் மோகன் மாளவியா, பண்டித மோதிலால் நேரு, சுவாமி சிரத்தானந்தர் ஆகியவர்கள் வந்திருந்தனர். அவர்களுடன் பஞ்சாப் நிலைமையைப் பற்றி மகாத்மா கலந்து ஆலோசித்தார்.

அதே சமயத்தில், பிரிட்டிஷ் சர்க்கார், பஞ்சாப் இராணுவச் சட்ட அமுலைப் பற்றி விசாரிப்பதற்காக லார்டு ஹண்டரைத் தலைவராகக்கொண்ட ஒரு கமிஷனை நியமித்திருந்தார்கள். "பஞ்சாப் பயங்கரங்களைப் பற்றி விசாரிக்க வேண்டும்" என்று தேசமெங்கும் ஏற்பட்டிருந்த பெருங் கிளர்ச்சியின் பயனாக சர்க்கார் மேற்படி ஹண்டர் கமிஷனை நியமித்தனர். விசாரணைக் கமிஷன் என்று நியமித்து விட்டால் பொது மக்களிடையே பொங்கிய உணர்ச்சியும் ஆக்கிரமும் ஒருவாறு அடங்கிவிடும் என்று பிரிட்டிஷ் சர்க்கார் கருதினார்கள்.

முதலில் ஹண்டர் கமிஷன் முன்பு சாட்சியம் விட்டு ஒத்துழைப்பது என்று மகாத்மா முதலிய தலைவர்கள் முடிவு செய்திருந்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பாராத சில தடைகள் ஹண்டர் கமிஷன் அங்கத்தினரால் ஏற்பட்டன. இராணுவச் சட்ட தண்டனைக்கு உள்ளான லாலா ஹரிகிருஷ்ணலால் முதலிய தலைவர்களை கமிஷன் விசாரணையின் போது கோர்ட்டில் போலீஸ் பாராவுடன் இருக்கச் செய்ய வேண்டுமென்று மகாத்மா, மாளவியா முதலியவர்கள் வற்புறுத்தினார்கள். உண்மை துலங்குவதற்கு அது அவசியம் என்று அவர்கள் சொன்னார்கள். இதற்கு ஹண்டர் கமிஷன் ஒத்துக் கொள்ளவில்லை. இதிலிருந்து ஹண்டர் கமிஷனிடத்தில் நீதியை எதிர் பார்க்க முடியாது என்று தோன்றிவிட்டது. எனவே, ஹண்டர் கமிஷனை பகிஷ்கரித்து, சர்க்கார் சம்பந்தமற்ற விசாரணையொன்று நடத்த ஏற்பாடு செய்வதென்று தீர்மானம் ஆயிற்று. பண்டித மாளவியாவின் யோசனைப்படி மகாத்மா காந்தி, பண்டித மோதிலால் நேரு, ஸ்ரீ சி. ஆர். தாஸ், ஜனாப் அப்பாஸ் தயாப்ஜி ஆகியவர்கள் விசாரணை செய்ய நியமிக்கப்பட்டார்கள். இவர்களில் பண்டித மோதிலால் நேரு பிற்பாடு அமிருதசரஸ் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபடியால், அவருக்குப் பதிலாக பாரிஸ்டர் எம். ஆர். ஜெயக்கர் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார்.

இந்த நாலு பேரும் தனித் தனியே நாலு பக்கங்களிலும் சென்று இராணுவ அமுலைப் பற்றிச் சாட்சியம் சேகரிக்கலானார்கள். ஆயினும் அந்த வேலை பெரும்பாலும் காந்திஜியின் தலையிலேயே விழுந்தது. விசாரணை செய்யச் செய்ய, சாட்சியங்களைக் கேட்கக் கேட்க, எவ்வளவு பயங்கரமான கொடுமைகள் இராணுவ அமுலின்போது ஜனங்களுக்கு இழைக்கப்பட்டிருக்கின்றன என்று காந்திஜிக்குத் தெரிய வந்தது. பஞ்சாப் ஜனங்களோ மகாத்மாவைத் தங்களை ரக்ஷிக்க வந்த தெய்வம் என்று நினைத்து அவரிடம் தாங்கள் பட்ட கஷ்டங்களைச் சொல்லி முறையிட்டார்கள்.

பஞ்சாப் விசாரணை நடந்து கொண்டிருந்தபோதே அமிருதஸரஸ் நகரில் காங்கிரஸ் மகா சபை கூடியது.

# - - கடவுளின் திருக்கரம் - -

பல வருஷங்களுக்கு முன் நான் ஒரு காவியம் படித்தேன். அதில் விவசாயியை உலகத்தின் தந்தையாக வர்ணித்திருந்தது.



கடவுள் மனிதனுக்கு எல்லாம் கொடுக்கிறார்; ஆனால் விவசாயியே அவருடைய திருக்கரம். —காந்திஜி

அமிருதஸரஸ் காங்கிரஸ் அதற்கு முன் நடந்த எந்தக் காங்கிரஸையும் விடப் பெருமிதமாகவும் கோலாகலமாகவும் நடந்தது. ஆறாயிரம் பிரதிநிதிகளும் முப்பதினாயிரம் பார்வையாளரும் அந்தக் காங்கிரஸுக்கு வந்திருந்தார்கள். சுவாமி சிரத்தானந்தர் வரவேற்பு சபையின் தலைவர். பண்டித மோதிலால் நேரு காங்கிரஸ் மகா சபையின் அக்கிராசனர். காங்கிரஸ் கூடுவதற்கு முதல் நாள் இராணுவச் சட்டத்தின்படி சிறைப்பட்டிருந்த லாலா ஹரிகிருஷ்ணலால் முதலிய பஞ்சாப் தலைவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டார்கள். சென்ற நாலு வருஷமாகப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த அலி சகோதரர்களும் விடுதலையானார்கள். விடுதலையான தலைவர்கள் நேரே அமிருதஸரஸுக்கு வந்து சேர்ந்தார்கள். அலி சகோதரர்கள் அமிருதஸரஸ் வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்ட போது அந்த நகர் மக்களின் ஆரவாரத்தைச் சொல்லி முடியாது.

அலி சகோதரர்கள் அத்தனை நாளும் சிந்த்வாரா என்னுமிடத்தில் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். மௌலானா மகம்மதலி தமது பிரசங்கத்தில் "சிந்த்வாராவுக்கு ரிடர்ன் டிக்கெட் என் சட்டைப் பையில் வைத்திருக்கிறேன்" என்று சொன்னார். அதாவது மறுபடியும் சிறைக்குப் போகத் தாம் தயாராயிருப்பதை அவ்விதம் தெரிவித்தார். இது மக்களின் ஆவேசத்தை அதிகப்படுத்தியது.

இத்தகைய சூழ்நிலையில் அமிருதஸரஸ் காங்கிரஸ் கூடியது. இந்தக் காங்கிரஸின்போது மூன்று புதிய தலைவர்கள் நாட்டிலும் காங்கிரஸிலும் சக்தி பெற்று வருகிறார்கள் என்று வெளியாயிற்று. ஒருவர், அக்கிராசனம் வகித்த பண்டித மோதிலால் நேரு. இரண்டாவது தலைவர் பாரிஸ்டர் சித்தரஞ்சன் தாஸ். மூன்றாவது தலைவர்தான் மகாத்மா காந்தி. இந்த மூன்று பேருக்குள்ளேயும் காந்தி மகாத்மாவே சக்தி வாய்ந்தவர் என்பதும் அமிருதஸரஸில் ஒருவாறு தெரிய வந்தது. அமிருதஸரஸ் காங்கிரஸில் நிறைவேறிய மிகவும் முக்கியமான தீர்மானம் சம்பந்தமாக ஏற்பட்ட விவாதங்களிலிருந்து இது வெளியாயிற்று.

முதலாவது மகா யுத்தத்தின் ஆரம்ப நாட்களில் இந்தியாவிலிருந்து மெஸபடோமியாவுக்கு அனுப்பிய துருப்புகள் விபரீதமான முடிவை அடைந்தன. இங்கிலாந்தில் இது பெரும் கிளர்ச்சியை உண்டாக்கியது. மிஸ்டர் மாண்டகு என்பவர் பார்லிமெண்டில் இந்திய அதிகார வர்க்கத்தைப் பலமாகத் தாக்கிப் பேசினார். இந்தியாவின் ஆட்சி முறையைக் காலத்துக்கேற்ப மாற்றி அமைக்க வேண்டும் என்ற எண்ணம் இங்கிலாந்தில் பலருக்கும் ஏற்பட்டது. கொஞ்ச காலத்துக்கெல்லாம் மிஸ்டர் மாண்டகுவையே இந்தியா மந்திரியாக நியமித்தார்கள். மிஸ்டர் மாண்டகு இந்தியாவுக்கு நேரில் வந்து இங்குள்ள நிலைமையை நன்கு தெரிந்து கொள்ளப் போவதாகவும் பிறகு அரசியல் சீர்திருத்தங்களைப் பற்றிச் சிபார்சு செய்யப் போவதாகவும் சொன்னார். அதன்படியே அவர் வந்தார். இந்தியாவில் பல பிரமுகர்களைச் சந்தித்தார். பல ஸ்தாபனங்களின் அபிப்பிராயங்களைக் கேட்டார். இங்கிலாந்துக்குத் திரும்பிப் போன பிறகு 'இரட்டையாட்சி' என்னும் வேடிக்கையான அரசியல் திட்டத்தைச் சிபார்சு செய்தார். இதன்படி இந்தியாவின் மாகாணங்களில் பாதி இலாகாக்கள் பழையபடி கவர்னருடைய நிர்வாக சபையினாலும் மற்றப் பாதி இலாகாக்கள் ஜனங்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளாலும் நிர்வகிக்கப்படும். போலீஸ், சட்டம், வருமானம் முதலிய முக்கிய இலாகாக்கள் கவர்னரிடமே இருக்கும். கல்வி, சுகாதாரம் முதலிய இலாகாக்கள் மந்திரிகளிடம் ஒப்படைக்கப்படும். இந்தியா மந்திரி மாண்டகுவும் வைஸ்ராய் லார்ட் செம்ஸ்போர்டும் சேர்ந்து தயாரித்த திட்டமாதலால் இதற்கு மாண்டகு செம்ஸ்போர்டு திட்டம்

என்றும், ராண்ட் போர்டு திட்டம் என்றும் பெயர்கள் வழங்கலாயின.

அமிருதஸரஸ் காங்கிரஸ் கூடுவதற்குச் சில நாளைக்கு முன்னாலேதான் மேற்படி திட்டம் வெளியாகி யிருந்தது. இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்வதா, நிராகரிப்பதா என்பதைப் பற்றிக் காங்கிரஸ் தலைவர்களுக்குள் ஏற்கெனவே ஆலோசனைகள் நடந்து வந்தன. காங்கிரஸி லிருந்த மிதவாதிகள் எல்லாரும் அதற்குள்ளே தனியாகப் பிரிந்து போய்த் தனி ஸ்தாபனமும் ஏற்படுத்திக் கொண்டார்கள். பழம் பெருந் தலைவர்களில் லோகமான்ய திலகர், பண்டித மாளவியா, ஸ்ரீ விபினசந்திரபால் முதலியோர் காங்கிரஸில் இருந்தார்கள். 1917-ம் ஆண்டில் டாக்டர் பெஸண்டு அம்மையின் செல்வாக்கு உச்ச நிலைமையில் இருந்தது. ஆனால் அடுத்த இரண்டு வருஷத்துக்குள் காங்கிரஸில் அவருடைய செல்வாக்கு அடியோடு குன்றிவிட்டது.

இரண்டு வருஷமாக ஸ்ரீ சித்தரஞ்சன தாஸின் நட்சத்திரம் உச்சத்துக்கு வந்து கொண்டிருந்தது. மாதம் அரை லட்சம் ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருந்த பிரபல பாரிஸ்டர் அவர். சுதேசி இயக்க நாட்களில் ஸ்ரீ அரவிந்த கோஷின் சார்பாகக் கோர்ட்டில் ஆஜராகிப் பேசிப் புகழ் பெற்றிருந்தவர். 1917-ல் டாக்டர் பெஸண்டு அம்மையைக் காங்கிரஸ் தலைவராக்குவதற்குப் பாடுபட்டவரும் அவர்தான். தேசிய வாதிகள் பெரும்பாலோர் அவருடைய யோசனையை எதிர்பார்க்கத் தொடங்கி யிருந்தார்கள்.

மாண்டகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத் திட்டத்தைப் பற்றி ஸ்ரீ சித்தரஞ்சன் தாஸ் ஒரு தீர்மானம் தயாரித்துக் கொண்டு வந்திருந்தார்.

"மாண்டகு செம்ஸ்போர்டு திட்டம் போதாது, அதிருப்திகரமானது, ஏமாற்றகரமானது; ஆகையால் அதை இந்தக் காங்கிரஸ் நிராகரிக்கிறது" என்பது தீர்மானத்தின் முக்கிய அம்சம்.

ஏற்கெனவே லோகமான்ய திலகர் "கிடைத்ததைப் பெற்றுக் கொண்டு பாக்கிக்குப் போராட வேண்டும்" என்ற கொள்கையை வெளியிட்டிருந்தார். ஆயினும் அமிருதஸரஸில் ஸ்ரீ சி. ஆர். தாஸைச் சந்தித்துப் பேசிய பிறகு அவருடைய தீர்மானத்தை ஆதரிக்க ஒப்புக் கொண்டார்.

"மாண்டகு செம்ஸ்போர்டு திட்டத்தை அங்கீகரித்து நடத்துவது" என்று டாக்டர் பெஸண்டு கொண்டுவர விரும்பிய தீர்மானத்தை யாரும் ஒப்புக் கொள்ளவில்லை.

இந்த நிலைமையில் மகாத்மா காந்தியின் நிலைமை இன்னதென்று அறிந்து கொள்ளப் பலரும் விரும்பினார்கள். மகாத்மாவினுடைய மனப்பான்மைதான் நமக்குத் தெரியுமல்லவா? எதிராளிகளின் பேச்சில் அவநம்பிக்கை கொள்ளக் கூடாது என்பது அவருடைய திடமான கொள்கை. மாண்டகு நல்ல எண்ணத்துடனே இந்த அரசியல் திட்டத்தை வகுத்திருக்கிறார் என்று மகாத்மா பூரணமாக நம்பினார். ஆகையால் அதை அடியோடு நிராகரிக்கும் யோசனை மகாத்மாவுக்குப் பிடிக்கவில்லை. அதே சமயத்தில் காங்கிரஸில் மிகச் செல்வாக்குள்ள ஸ்ரீ திலகர் முதலிய தலைவர்களுக்கு எதிராகப் பேசவும் அவர் விரும்பவில்லை. ஆகையால் காங்கிரஸுக்கு முதல் நாள் மட்டும் வந்து விட்டு அப்புறம் நடவடிக்கைகளில் கலந்து கொள்ளாமலிருந்து விட மகாத்மா எண்ணியிருந்தார். இதைப் பண்டித மாளவியாவிடம் கூறியபோது அவர் அதை ஒப்பவில்லை. லாலா ஹரிகிருஷ்ணலால் முதலிய பஞ்சாப் தலைவர்களும் அதை விரும்பவில்லை. "நீங்கள் அவ்விதம் செய்வது பஞ்சாபிகளுக்கு மிக்க மன வருத்தத்தை அளிக்கும்" என்று அவர் சொன்னார். "என்னுடைய அபிப்பிராயத்தை நான் வற்புறுத்தினால் வோட் எடுக்க நேரிடலாம். இங்கே வோட்டு எடுக்க வசதி ஒன்றும் இல்லையே? பிரதிநிதிகளுக்கும் பார்வையாளருக்கும் வித்தியாசம் இல்லாமல் எல்லாரும் கலந்து போயிருக்கிறார்களே?" என்றார் காந்திஜி. "வோட் எடுக்கும் சமயத்தில் பார்வையாளரை வெளியில் அனுப்பிவிட ஏற்பாடு செய்கிறோம்" என்றார் ஸ்ரீ ஹரிகிருஷ்ணலால்.

எனவே மாண்டகு செம்ஸ்போர்டு திட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை ஸ்ரீ சி. ஆர். தாஸ் கொண்டு வந்தபோது மகாத்மா அதற்கு ஒரு திருத்தம் பிரேரபித்தார். "ஏமாற்றமானது" என்ற வார்த்தையை எடுத்துவிட்டு, "முழுப் பொறுப் பாட்சியை அடைவதற்கான முறையில் மேற்படி திட்டத்தை நடத்தி வைக்கத் தீர்மானிக்கிறது" என்பதைக் கடைசியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று காந்தி மகானுடைய திருத்தம் கூறியது. அத்துடன், மிஸ்டர் மாண்டகு அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வாக்கியம் ஒன்றையும் சேர்க்க வேண்டுமென்று மகாத்மா பிரேரேபித்தார்.

அப்போது தேச மக்களுடைய மனோநிலை கொதிப்படைந்திருந்தது. காங்கிரஸ் பிரதிநிதிகள் பஞ்சாப் கிலாபத் அநீதிகளைக் குறித்து ஆத்திரம் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட சமயத்தில்

மகாத்மாவின் ஒத்துழைப்புத் திருத்தம் பிரதிநிதிகளுக்கு மிகக் கசப்பாயிருந்தது. ஆனாலும் அவர்கள் காந்தி மகாத்மாவின் விருப்பத்துக்கு விரோதமாக எதுவும் செய்ய விரும்பவில்லை.

இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைப்பதாயிருந்தால் அது மகாத்மாவினால்தான் கிடைக்கும் என்ற நம்பிக்கை பலருடைய அந்தரங்கத்தில் அப்போது ஏற்பட்டிருந்தது. காந்திஜி ஒரு பக்கமும் திலகர், தாஸ் முதலிய தலைவர்கள் மற்றொரு பக்கமும் மாறுபட்டு நிற்பதையும் ஜனங்கள் விரும்பவில்லை. ஆகவே தீர்மானமும் திருத்தமும் பிரேரணை செய்யப்பட்டபோது பிரதிநிதிகள் — பார்வையாளர் அனைவரும் சோர்வடைந்து முகம் வாடிப் போனார்கள். இந்த நிலைமையில் ஒரு சிலர் இரு சாராரிடையிலும் சமரசம் உண்டு பண்ண முயன்றார்கள். சமரசம் ஏற்பட வேண்டும் என்பதில் மற்றவர்களைக் காட்டிலும் பண்டித மாளவியாவுக்கு அதிக ஆத்திரம் இருந்தது. அவர் காங்கிரஸ் மேடையில் அமர்ந்தபடி சமரசத்துக்கு வழி காண முயன்று கொண்டிருந்தபோது ஸ்ரீ ஜயராம்தாஸ் தௌலத்ராம் மகாத்மாவின் திருத்தத்தில் ஒரு சிறு திருத்தம் செய்து அதைச் சமரசப் பிரேரணையாகச் சமர்ப்பித்தார். "திட்டத்தை நடத்துவது" என்பதை "கூடுமானவரையில் நடத்துவது" என்று அவர் திருத்தினார். இதை மகாத்மா ஒப்புக் கொண்டதும், பண்டித மாளவியா லோகமான்ய திலகரை நோக்கினார். திலகர் "தாஸ் சம்மதித்தால் எனக்குச் சம்மதம்" என்றார். தாஸ், விபின சந்திர பாலரைப் பார்த்தார். விபின சந்திரர் தலையை அசைத்தார். உடனே பண்டித மாளவியா எழுந்து நின்று, "பிரதிநிதிகளே! தலைவர்களுக்குள் சமரசம் ஏற்பட்டுவிட்டது!" என்று அறிவித்தார். அப்போது சபையில் எழுந்த சந்தோஷ ஆரவாரம் ஆகாசத்தை அளாவியது. அதிலிருந்து தலைவர்கள் ஒத்துப் போக வேண்டும் என்பதில் பிரதிநிதிகளுக்கு எவ்வளவு ஆர்வம் இருந்தது என்பது நன்கு வெளியாயிற்று. அதற்குப் பிறகு மேடையில் இருந்த தலைவர்கள் சமரசமாகப் போகவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது!

சமரசத் தீர்மானம் மிகுந்த உற்சாகத்துக்கிடையே நிறைவேறியது. சமரசத் தீர்மானம் என்று சொல்லப்பட்டதாயினும் உண்மையில் அது காந்திமகாத்மா காங்கிரஸ் மகாசபையின் மேடையில் அடைந்த மகத்தான முதல் வெற்றி என்பதை எல்லாரும் உணர்ந்திருந்தார்கள்.

இதே விதமாக இன்னும் இரண்டு தீர்மானங்களைக் கசந்து விழுங்கிக் கொண்டு காந்தி மகாத்மாவுக்காகவே காங்கிரஸ் பிரதிநிதிகள் நிறைவேற்றினார்கள். அவற்றில் ஒன்று பஞ்சாபிலும் குஜராத்திலும் பொது ஜனங்கள் அத்து மீறிப் பலாத்காரச் செயல்களில் இறங்கியதைப் பலமாகக் கண்டனம் செய்தது. அதிகாரிகளுடைய செயல்களினால் கோபமடைந்திருந்த பிரதிநிதிகளுக்குப் பொது ஜனங்களைக் கண்டிக்கும் காரியம் சிறிதும் பிடிக்கவில்லை. ஆயினும் மகாத்மா காந்தி கொண்டு வந்தபடியால் அந்தத் தீர்மானமும் நிறைவேறியது. அதோடு, அடுத்த வருஷம் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு விஜயம் செய்வதைக் காங்கிரஸ் வரவேற்கிறது என்ற தீர்மானமும் மகாத்மாவுக்காகவே நிறைவேறியது.

அமிருதஸரஸ்-காங்கிரஸில் ஒத்துழைப்புத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றிய அதே மகாத்மா சில மாதங்களுக்கெல்லாம் ஒத்துழையாமை இயக்கத்துக்குத் துவஜாரோகணம் செய்தார். மாண்டகு செம்ஸ்போர்டு திட்டத்தின்படி நடக்கும் சட்டசபைத் தேர்தல்களை அடியோடு பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்றார். சட்டசபை பகிஷ்காரத்தை மற்ற தலைவர்கள் எதிர்த்தார்கள். ஆயினும் மகாத்மாவின் திட்டத்தைத் தேசமும் காங்கிரஸும் ஒப்புக் கொண்டன. இந்த அதிசயங்களைப் பற்றிப் பின்னால் விவரமாகத் தெரிந்து கொள்வோம்.

## • • • • • • • • • உணவு • • • • • • • • •

உழைத்துத்தான் மனிதன் உயிர் வாழ வேண்டும் என்பது ஈசுவர நியதி.

உழைக்காத மனிதனுக்கு உணவு உண்ண உரிமை ஏது?

ஏழையானாலும் பணக்காரனானாலும், ஒவ்வொருவனும் ஏதோ ஒரு விதத்தில் தேகப்பியாசம் செய்தே தீரவேண்டியிருக்கிறது; இல்லாவிட்டால் உணவு ஜீரணமாகாது. அந்த அப்பியாசத்தைப் பொருள்கள் உற்பத்தி செய்யும் உழைப்பாக ஏன் மாற்றிக் கொள்ளக் கூடாது?

—காந்திஜி

CP/567



# கவலையற்ற ஓய்வு நாட்களுக்கு

நீங்களும் வரப்போகும் ஓய்வு நாட்களைப்பற்றி சிந்திக்க வேண்டியதுதான். உங்கள் ஓய்வு நாள் எவ்வாறிருக்க வேண்டும்? மன நிம்மதியுடன், குழந்தைகளின் வாழ்க்கையை திட்டமிட்டு நிர்வகிக்க, உற்சாகத்துடன் உல்லாசப் பிரயாணம் செய்ய வசதிகள், மாதாந்திர சம்பளத்தை எதிர்பார்த்திராமல் மனதிற்குகந்த பணியில் ஈடுபட சுதந்திரம் இவை நிறைந்த ஓய்வுநாள் யாவரும் விரும்புவது.

உங்கள் சம்பாத்தியத்தில் இதுவரை சேமித்தது எவ்வளவு? உங்கள் ஓய்வு நாட்களுக்காகவும், எதிர்பாராத சிக்கல்களைச் சமாளிக்கவும் தக்க சேமிப்புக்கு வழி செய்து விட்டீர்களா?

கவலைகளைக் களைந்தெறிந்து உங்கள் ஓய்வு நாட்களை லக்ஷ்யத்திற்கொப்ப உருவாக்க சிறந்த திட்டங்களுக்கு இன்றே பிருத்வி ஏஜெண்டைக் கலந்தாலோசியுங்கள். பிருத்வி பரிபூரண பாதுகாப்பு அளிக்கவல்லது.

எல்லாவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களுக்கும்

# பிருத்வி இன்ஷ்யூரன்ஸ்

## கம்பெனி லிமிடெட்

12, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 1

ஒவ்வொரு ஊரிலும் பிருத்வி ஏஜெண்ட் உள்ளார்



இருமலை
நிறுத்த
சுகமான
வழி!
ஸிரோலின் 'ரோச்'
உபயோகியுங்கள்.
இனிப்பானது, ருசியானது
SIROLIN
"ROCHE"
ROCHE
ஒரு 'ரோச்' தயாரிப்பு




டி.எஸ்.ஆர்.
கோகுல்
ஹேர் ஆயில்
டி. எஸ். ஆர். கோகுல் கூந்தல் தைலம் அதன் அரிய வாஸனைக்கும் அபூர்வ குணத்திற்கும் பெயர் போனது. இது கூந்தலைக் கருகருவென நீண்டு வளரச் செய்வதோடன்றி, மூளைக்கு குளுகுளுப்பையும் அலாதி சுறுசுறுப்பையும் அளிக்கிறது.
GOKUL HAIR OIL
T.S.R.& Co.
டி.எஸ்.ஆர். & கோ.,
கும்பகோணம்.
சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டு:
சுராஜ் ஏஜன்ஸீஸ்
157, லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை
கோவை, பாலக்காடு
சோல் ஏஜண்டுகள்:
R. ராமசாமி செட்டியார்
240, வைசியாள் தெரு, கோயமுத்தூர்
வடஆற்காடு:
சேகர்ஸ், திருப்பத்தூர் (N. A.)




Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

# கல்கி



KALKI அக்டோபர் ௨,1949 4 அணா

REGD. No. M. 4392

